ஓம்பரப்பிரம்மணே நம:

ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப்பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு.

“ எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.)

கமலம்-3.	சென்னை: விபவஸ்ரீ ஆனிமீ 1உ	இதழ்-27.
Vol. 3.	1928-ம்ஸ்ரீ ஜூன்மீ 14உ	No. 27.

ஆநந்த தரிசனம்

“ நம்பினேன் கைவிடே லேனையே ” பகவானே! உன் பாதங்களென்னும் கூண்டினிடைவில், என் மனம் எனும் ராஜஹம்ஸத்தை யிப்போதே பிரவேசிக்கச் செய்வீர். பிராணன் பிரியும் ஸமயத்தில் கபவாத பித்தங்கள் கண்டத்தைக் கவிந்துகொள்ளுமாதலால் உன் நினைவு எப்படி வரும்? ஸ்வாமி, பாபாத்மாவைக் காணாதிருத்தல், உன் சம்பந்தம் இல்லாத கதையைக் கேளாதிருத்தல், உன்னைத் துவேஷிப்பவனைச் சேராதிருத்தல், பிரதி ஜன்மத்திலும் உன் கைங்கரியம் பெற்றிருத்தல் எனும் நான்கு வரங்களையும் பிரஸாதித் தருள்வீர். ஓ நாவே! ஆதி நாதனைப் பாடு. ஓ மனமே! பரந்தாமனைப் பஜி. ஓ கைகளே! கருணாகர மூர்த்தியைச் செம்மையாய் ஆராதனை செய். செவிகளே! பகவத் சரித்திரங்களைக் காதாரக் கேள். கண்களே கடவுளைக் கண்டு அடையுங்கள். கால்களே! ஸர்வேசுவரனின் ஸந்நிதிக்குச் செல்லுங்கள். மூக்கே! பரமபதிக்கு ஸமர்ப்பித்தவற்றின் வாஸனையைப் பார். தலையே! உனது தலைவனை நமஸ்கரி.

* * *

“ உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும் ” பரமசிவனுடைய ஜடையில் கங்கை இருக்கிறது. இதனால் ஸ்நானம் செய்து சுத்தமடையவேண்டுமென்ற கருத்து வெளிப்படுகிறது. ஈசுவரன் ஸர்ப்பங்களை ஆபரணமாகப் பூண்டிருக்கிறார். மனிதன் தான் அணியும் ஆபரணம் ஸர்ப்பம்போல் உயி

☞ உலகத்து அநுபவங்களின் இன்சுவைகளெல்லாம் ஓர் உருக்கொண்டு திரண்டுள்ள இந்த “ அமிர்த குணபோதினி ”யின் 56- பக்கங்களும் ஒவ்வொருவரின் மனத்தையும் ஊடுருவிப்பாயவல்லது.

ருக்கு ஹானியை உண்டாக்கக்கூடியதென்று அறியக்கடவன். ஈசுவரன் ஸ்மசானவாஸி. இது எல்லோரும் கடைசியாகச் செல்லவேண்டிய இடம் ஸ்மசானமென்று நிரூபிக்கிறது. இப்படியே எது சுகத்தைத் தருமென்று மனிதன் பிராந்தியினால் நினைக்கிறானோ அது கஷ்டத்தை விளைக்கக்கூடியதென்று பகவானே தம்முடைய திருக்கோலத்தால் மெய்ப்பிக்கிறார். இவ்வுண்மைகளை யறிவதற்காகப் புராணங்களைப் படிப்பது அவசியம். இதிகாஸத்தைப் பரிகாஸம் செய்வதும், புராணத்தை ஹேளனம் செய்வதும் விவேகமல்ல. கருணாநிதியான பகவான் அரூபியாகவே இருந்தால் அவரை மனிதர்கள் எப்படிப் போற்றமுடியும்? ஆதலின் கடவுள் பலவித அவதாரங்களை எடுத்து அற்புத காரியங்களைச் செய்திருக்கிறாரென்பது உண்மையே. ஸ்ரீராமனாயும், கிருஷ்ணமூர்த்தியாயும் ஸ்ரீமந்நாராயணன் அவதரித்தார். வால்மீகரிஷியும் வியாஸரும் கூறியது பொய்யாமோ? அபாரமான தபஸ்ஸும் யோக்யதையுமுடைய ஞானஸ்வரூபிகளான மகரிஷிகளின் வார்த்தையை நம்பவேண்டியது நம்மவர்களின் கடமை. ஆகவே, ஸகல ஜீவராசிகளையும் ஆக்கியளித்து அழிக்கும் பரமேசுவரனை ஸதா பிரார்த்திக்கக்கடவோம்.

* * *

"மனிதனுடை நிலைமை"யை யாராய்வோம். துர்க்குணியோ ஸத்குணியோ பிறந்தவுடன் மனுஷ்யனைக் கண்டு எல்லோரும் ஸந்தோஷப்படுகின்றனர். குழந்தை பிறந்ததாவென்று அண்டை யயலார் ஓடிவந்துகேட்டு ஆநந்திக்கின்றனர். பிறக்கும்போது எல்லோருக்கும் விளைத்த ஆநந்தத்தை இறக்குமளவும் மனுஷ்யனும் விளைத்துக்கொண்டிருந்தால் அவனைப்போல் யோக்யனும் சிலாக்யனும் இல்லை. இவ்வுண்மையை அநேகர் அறிவதில்லை. பிறந்த குழந்தையைக் கண்டு பிரீதி பாராட்டும் தாய்தந்தையர் சுற்றத்தார் அதேமாதிரி விசுவாஸத்தை எப்போதும் வைத்திருக்கும்படி அக்குழந்தை நடந்துகொள்வதே நன்னடக்கையாம்.

* * *

"பயம், பக்தி, விசுவாஸம்" ஆகிய இம்மூன்றையும் பகவானிடம் கொள்ளவேண்டும். ஈசுவரன் விதித்துள்ள கட்டளைக்கு விரோதமாய் நடந்தால் தண்டனை கிடைக்குமென்ற பயம் முதலில் இருக்கவேண்டும். இதன் பிறகு அவர் விதித்த கட்டளைப்படி செய்வதில் பக்திசிரத்தை யிருக்கவேண்டும். சிரத்தையுடன் அக்கட்டளைப்படி செய்யவேண்டிய ஸத்கருமங்களில் ஆசை யிருப்பதவசியம். இதுவே விசுவாஸமெனப்படும். விசுவாஸமானது ரத்நத்தைப்போலும், பக்தியானது அதனின்று வீசும் ஒளியைப்போலும் இருக்கின்றது.

* * *

"முணு முணுப்பு" எதையும் முற்றுப்படுத்தாது. முணுமுணுப்புடன் ஒருவருக்கு எவ்வளவு அரிய வஸ்துவைத் தரினும் அவர்க்கு ஸந்தோஷம் விளைக்காது. ஸாதாரண கோழிகள் இறக்கைகள் இருந்தும் கொஞ்சதூரம் பறந்து உடனே பூமியில் விழுவதுபோல, ஆசையோடு ஸத்கருமங்களைச் செய்யாமல், செய்யவேண்டுமே யென்று கஷ்டப்பட்டு முணுமுணுத்துக் கொண்டே செய்கிறவர்கள் பகவானுடைய அருளைப் பூர்ணமாய் அடைய

நாலு பிள்ளைகளில் ஒருவன் கண்மூடிவிட, அந்தப் போனவன் தான் கெட்டிக்காரன் புத்திசாலி என்று உலகோர் உரைப்பதும் ஒரு விநோதமே,

மாட்டார்கள். இத்தகையோர்க்குத் தத்வஞானம் உண்டாவது துர்லபம். அண்டாண்ட பக்ஷிகளும், சில பறவைகளும் ஆகாசத்தில் சலியாமல் நெடுந் தூரம் பறப்பதுபோல் ஈசுவரனிடம் பயம், பக்தி விசுவாஸம் ஆகிய மூன்று முள்ளவர்கள் அவருடைய பரிபூரண கடாக்ஷத்தை யடைந்து பிரம்மநிஷ்டர்க ளாய் ஜ்வலிப்பர்.

***

"வெளிவேஷம் பரிகாஸம்." பலவித பக்தர்கள் இருக்கின்றனர். விஷ்ணு பக்தர்கள் ஏகாதசி விரதத்தை யனுஷ்டிக்கின்றார்கள். ஏகாதசியில் பட்டினி இருக்கின்றனர். நாக்கில் ஒரு துளி ஜலம்கூட விட்டுக்கொள்ள வில்லை யென்று விரதமிருப்போர் வெகு பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளுகி றார்கள். நாக்கில் துளி ஜலமும் படாமல் பட்டினி கிடப்போர் பிறரைப் பற்றித் தூஷிப்பதும், வம்பாடுவதும், பொய் புகல்வதும், கடுஞ் சொற்களை வழங்குவதும் தம் ஹிருதயத்தை அசுத்தப்படுத்தும் என்பதை அறியவில் லையே! பொய் சொல்லாமையும் பகவந் நாமத்தை ஜபிப்பதும் நாக்கை சுத்தப் படுத்துமேயன்றி திவலை ஜலம்கூட அருந்தாமல் பட்டினிகிடப்பது ஒருபோ தும் சுத்தப்படுத்தாது. வேறு சிலர் பூஜை செய்யும்போதே வீண் வியவ காரங்களைப்பற்றிப் பேசுவர். இவர்களுடைய பூஜைக்கு ஒருபோதும் பலன் கிடைக்காது.

***

"நர-நாராயணர்" இவர்களே கிருஷ்ணார்ஜுனர்களெனப்படுவார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவானால் அர்ஜுனன் அடைந்த நன்மைக்கு அளவில்லை. வாக்காலும் சரீரத்தாலும் கருணையாலும் பகவான் பார்த்தனுக்கு வேண்டிய உதவி செய்திருக்கிறார். அர்ஜுனன் நரனாதலால் சிற்சில ஸமயங்களில் உலக பாசத்தில் அகப்பட்டுத் துக்கித்திருக்கிறான். அவனடையும் சோகத்தை உடனுக்குடன் கிருபாநிதி யறிந்து தக்க ஸமாதானங்களாலும், உதாரணங்க ளாலும் தேற்றுவார். ஆகவே, இவற்றை ஊன்றிப் பார்ப்போமாயின் நர- நாராயணன் என்ற பதத்தின் உண்மை ஒருவாறு விளங்கும். **நாராயணன் பரமாத்மனாகவும், நரன் ஜீவனாகவும் ஏற்பட்டனர்.** பிரபஞ்ச விஷயத்தில் மனம்வைத்து ஸுக துக்கங்களை யனுபவிக்கும் ஜீவனைத் துன்பப்படவொட் டாமல் நித்ய தத்துவத்தைப் போதித்து மயக்கத்தை நீக்கித் தெளியவைத்தார். இதுவே 'நர நாராயணர் என்ற பதத்தின் தத்துவம்.

***

"**நான்—நீ—அவன்**" என்று சொல்லும் மனிதர்கள் ஆத்மாவைப் பிரித்து ஏன் வெவ்வேறு பெயர்கள் கொடுக்கவில்லை? அவயவங்களுடன் கூடின சரீரத்துக்கு நாமரூபங்களேற்பட்டன. ஆத்மாவுக்கு சரியான பெயர் கிடையாததால் எந்தப் பாஷையிலும் ஆத்மாவென்றே வழங்கிவருகிறது. ஆத்மா இரண்டு வகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஜீவாத்மா வென்றும், **பரமாத்மா** வென்றும் கூறுகின்றனர். சரீரத்தோடிருப்பது ஜீவாத்மா; பரமாத்மாவுக்குக் களங்கமில்லை. ஆத்மா அழிவற்றது. தேகம் அழிவுற்றது. அஞ்ஞானிகள் இறந்தவர்களை நினைத்துத் துக்கமடைவார்கள். ஆத்ம ஞானி

எதுவும் ஆரம்பத்தில்தான் ஆச்சரியம்! அதிசயம்! பிரியம் விரைந்து சென்று பார்ப்பதும் அப்போதுதான். பிறகோ வெகு வெகு அலக்ஷியம்.

களுக்கு மேற்கண்ட துன்பமில்லை. தேகம் அழிவதும் மறுபடி வருவதும் ஸ்வபாவமாயிற்று. ஆனால், ஆத்மா எப்போதும் அழிகிறதில்லை, நாம் இப்போது இருக்கிறோம்; இதற்கு முன் இருந்திருக்கிறோம்; இனிமேலும் இருப்போம். இதற்கு முந்தின தேகம் நாசமடைந்தது. இப்போது ஒரு சரீரம் இருக்கிறது, இனிமேல் வேறொரு சரீரம் ஏற்படும். பல தேகங்களிலிருக்கிற ஆத்மாக்களெல்லாம் ஒன்றே. ஜீவன் ஸுகதுக்கங்களால் துன்பமடைகிறான். பால்யம், யௌவனம், கௌமாரம், வார்த்திபம் முதலியவை ஒன்றன்பின்னொன்றாய் வருகிறதை நாம் அனுபவத்திலும் பிரத்யக்ஷத்திலும் நித்தியமும் பார்க்கிறோம். அதுபோலவே தேகமும் போவதும் வருவதுமாயிருக்கிறது.

***

"எப்படி வைத்தாலும் நன்றே நின்கருணை" என்று கூறிப் பெரியோர்கள் தங்களுக்குக் கர்மவினையால் நேரிடும் கஷ்டங்களைப் பொறுமையோடும் ஏற்று அனுபவிக்கின்றனர். ஜகதீசனுடைய அருள் இருந்தாலன்றி பொறுமையென்னும் உத்தம குணம் உண்டாகாது. நெருப்பின் உபத்திரவத்தால் சோறு பொங்கி வழிவதுபோல், கோபமென்னும் கொடிய குணத்தால் மனுஷ்யனுடைய புண்யம் நசித்துப் போகிறது. கோடறி வன்மையுள்ளதாயிருந்தால் கட்டையைப் பிளக்கும். அதுபோல் ஸகிப்பு எனும் பொறுமைக் குணம் பலமாய் ஏற்பட்டிருந்ததால் துக்கங்களெல்லாம் சமனமாகும். மிகுந்த லக்ஷணமும் பதிபக்தியும் நிறைந்த தமயந்தி சயன கிரகத்தில் நளனை வேடிக்கைக்காக அடித்தாளென்று நைஷதத்திற் கூறப்பட்டிருக்கிறது. நளன் அவளுடைய செயலைக் குற்றமாய்ப் பாவிக்கவில்லை. செல்வக் குழந்தைகள் காலாலுதைப்பதைப் பெற்றோர்கள் பிசகென்று மதியாமல் பிரீதியோடேற்கின்றனர். பர்த்தா நிந்திப்பதைப் பதிவிரதை யொருகுற்றமாக நினையாள். கொஞ்சமேனும் அவளுக்கு ஆயாஸமுண்டாகாது. அவர் மனம் வருந்த நேர்ந்ததே என்று தன்னைத் திருத்திக்கொண்டு அன்பின் வடிவமாக நிற்பாள். அதுபோலவே பகவான் விதிக்கும் சிக்ஷையைப் பொறுமையோடேற்பது பெரியோர்களின் இயல்பு. ஆதலின், பொறுமையென்னும் உத்தம குணம் விர்த்தியாகும்படி ஸர்வேச்வரனை ஸதா பிரார்த்திக்கக் கடவோம்.

எதிர்த்து நில்.

எப்போது எதிர்த்து நிற்க? எப்போது சொன்ன வார்த்தை கேளாதிருக்க? சாப்பிடும் சமயத்தில் சாதம் போதும் போதும் என்றால், அந்த சமயம் அவரை எதிர்த்து நின்று அதிக சாதம் போடு. அவர் போதும் என்று சொன்னாலும் அச்சொல்லைக் கேளாதே. நாணத்தால் வேண்டாமென்று சொல்லிவிட்டுப் பாதி வயிற்றுடன் எழுந்திருப்போரே அதிகம். தாராளமாக சாதம் போடு. உனக்கும் கடவுள் அப்போது தாராளமாய்க் காலமுழுதுக்கும் சாதம் போடுவார். கருமித்தனமான—செட்டுத்தனமான கை சாதம் போடுவதில் வேண்டாம்.

ஆநந்தகுணபோதினி

விபவஹு ஆனிமீ 1௨

சுதந்திரம் உனது பிறப்புரிமை.

ஆலோசனையின்றி எதற்கும் தலைகுனியாதே. தலை குனிந்து வாழ நீ பிறக்கவில்லை. நன்றாக நிமிர்ந்து நில். அன்பற்ற இடத்தில் கெஞ்சாதே. ஒருவன் ஒன்றை உனக்குத் தர மறுத்ததை சீ! என்று அலக்ஷியத்துடன் ஒதுக்கித் தள்ளு. திரும்பவும் அதை அவனிடம் கேளாதே. உன் தன்மதிப்பை விடாதே. ஆண்மையுடனே நில். அநியாய சங்கதிக்குத் தைரியமாக மறுத்துச் சொல்லு. நீ உன் சுதந்திரத்தை மதிப்பவன் என்று உன்னைப்பற்றிப் பிறர் தெரிந்துகொள்ளும்படி செய். உன்னைத் தாழ்த்திக் கேவலப்படுத்துகிறவனுக்குத் தகுந்த உத்தரம் உடனே தெரிவி. அடக்கமும் மரியாதையுமான சொற்களிலேயே எப்பொழுதும் உன்னுடைய பதில் வார்த்தை கம்பீரமாயிருக்கட்டும். பிறிந்துவிடும் தன்மையில் நீ பேசாதே. சேர்ந்து வாழும் வகையிலேயே சென்று உன் சுதந்திரத்தை அங்கு ஸ்தாபித்துக்கொள். சுதந்திரம் உனது பிறப்புரிமை என்பதைத் தினமும் நினை.

உலகெலாம் தாங்கும் ஒருதனிப் பரம்பொருள் உன்னை எவ்விதத்தும் அவசியம் காப்பாற்றுவாரென்கிற மனோவுறுதி உனக்குள் நிச்சயமாய் இருக்கையில், அன்பற்ற—ஒழுங்கற்ற—செல்வச் செருக்கு மிகுந்த—கர்வம் தலை தள்ளிப்போன—இளகிய சித்தம் இல்லாத—ஒருவனுக்கு நீ ஏன் உள்ளடங்க வேண்டுமோ? ஒ! தேவையில்லை. நீ அடிமையில்லை. அனாவசியமாய் ஒருவருக்குக் கீழ்ப்பட உனக்கு விதிக்கப்படவில்லை. நீ சுதந்திர ஆண்மையுள்ளவன். புருஷத்தனத்துடன் நிமிர்ந்து நில். கடவுள், அரசன், பெற்றோர், பெண்தெய்வங்கள், ஏழைகள், அன்பினர், நியாயமாய் நடக்கும் வரையில் உன் கைக்கு மேலுள்ளவன் ஆகிய இவர்களைத் தவிர மற்றெவருக்கும் நீ தலை வணங்காதே. வணங்குவதும் கௌரவமான தன் மதிப்புடன் இருக்கட்டும். சுதந்திரம் உனது பிறப்புரிமை.

அயோக்கியன் யோக்கியர்களிடத்தில் நல்ல அபிப்பிராயம் கொள்வதில்லை. ஒருவரை யொருவர் திட்டுகையில் இது வெளிவரும்.

ஒரு அற்ப புழுவும் தன்னை மிதிப்பவனை உடனே கடித்து விடுகிறது! அதற்குத் தவறுகிறதில்லை. நீ அந்தப் புழுவினிடத்தில் புத்தி பெற்றுக்கொள். எதற்காகத் தலை வணங்கவேண்டும்? பிறந்ததோ மானிட ஜென்மம். அதுவோ உயர்ந்த ஒரு—தனிப் பிறப்பு. அப்பிறப்பிலே அறிவும் ஆண்மையும் முதிர்ந்தவன் நீ. ஒரு தாய் வயிற்றில் ஒரு தந்தைக்குப் பிறந்தவன் நீ. கடவுள் உனக்கு முதன் முதலில் உண்பதற்கு எச்சில் சோற்றையும், எரிந்துவிட்ட கீரையையும் எடுத்து வைக்கவில்லை. தேவாமிருதமான தாய்ப்பாலையே உனக்கு உணவாக ஊட்டினார். அமிர்தம் புசிக்கப் பிறந்தவன் நீ. அதைத் தேடிக்கொள்ள நன்றாக உழைத்து ஊக்கத்துடனே உயரிய நிலைக்குப் போ. உறங்காதே. சோம்பித் திரியாதே. கீழ் நோக்காதே. அடிமைப்படாதே. ஒரு சின்ன காசையும் உழைத்துப் பெறு. உழைப்பவனே சுதந்திரத்தைப் பெறுவான். எப்பொழுதும் நீ உயர்தரமான சித்தத்தில் உலாவவேண்டுமென்பதே உலக ரக்ஷகரின் திருவுள்ளம். ஆகவே, இன்னொருவனுக்குத் தலை வணங்காத வாழ்வில் செல். குமாரா! நீ அரசாளப் பிறந்தாய். அடங்கி மானங் கெடுதற்குப் பிறக்கவில்லை. சுதந்திரம் உனது பிறப்புரிமை.

கடவுள் உன்னை சுதந்திர புருஷனாகவே தான் படைத்தார். உன்னை அடிமையாகப் படைக்கவில்லை. உன்னை இழிந்த மனத்தினனாகப் படைக்கவில்லை. ஒரு கோழைப் புழுவாக உன்னைப் படைக்கவில்லை. தீரமும் வீரமும் உள்ளவனாகவே உன்னைச் சிருஷ்டித்தார். நீ உன் குழந்தைப் பருவத்தில் உன் அழகிய மிருதுவான கால்களால் எத்தனையோபேரை உதைத்திருக்கிறாய். உதைத்த காலுக்கு உலகம் முத்தமிட்டது. அது ஏன்? ஓயாது உன் கை கால்களை ஆட்டி உழைத்தலாகிய ஒரு தெய்வப்பிரபை உன்னை அப்போது சுற்றி நின்றதனால், நீ சுதந்தரவானாய் உதைக்கவும் சக்தி பெற்றிருந்தாய். நீ உதைத்த உதையில் களங்கமில்லை, துவேஷமில்லை. பிறரைக் கீழ்மைப்படுத்தும் துரெண்ணம் அந்த உதையில் இருக்கவில்லை. ஆனால் அந்த உதையிலே உனது உழைப்பின் சுதந்திர பரிமளம் வீசி நின்றது; ஒரு தனி அன்பு அதில் ஜோதியுடன் பிரகாசித்தது. அந்த சுதந்தர நினைவு பெருகியவர்கட்கே அன்பின் மகத்துவம் புலனாகும். அப்போதைப்போல் இப்போதும் இனி என்றைக்குமே நீ ஒரு தெய்வக் குழந்தையாய் விடு. தெய்வத்தை நம்பிய குழந்தையாய் விடு. தெய்வ குணங்கள் நிரம்பப் பெற்ற குழந்தையாய்விடு. தெய்வம் ஓயாது செயல்புரிந்துகொண் டிருக்கிறது. நீயும் சலியாது உழைத்து உன்னுள் தெய்வத்தன்மையைப் பெருக்கிக்கொள். உழைத்துண்ணும் உறுதியுள்ளவன் பிற

சில புத்திசாலிகளுக்குக் கோளாறு சொவலுவதிலிருக்கிற புத்திசாலித்தனம் அவர்கள் செய்யும் காரியத்தில் மட்டும் இருப்பதில்லை.

ருக்கு உட்படமாட்டான். ஒருபோதும் அவன் தலை வணங்கான். நெற்றி வியர்வை நிலத்தில் வீழப் பாடுபடுபவனே தன் சுதந்திரத்தையும், தன் மானத்தையும் தன்மதிப்பையும் உணர்ந்தோனாவான் உழைப்பே உன்னை ஒரு தெய்வக்குழந்தை யாக்கவல்லது. உழைக்கும் தெய்வக் குழந்தையின் உதைகள் பிறர்க்கு இன்பம் செய்வனவாகவே முடியும். உழைப்பிலிருந்தே தெய்வத்தன்மை. உழைப்பிலிருந்தே சுதந்திரம். சுதந்திரம் உனது பிறப்புரிமையானால், உழைப்பதும் உனது பிறப்புரிமையாகும். உழைக்கத் துணிந்தவனுக்கு அடிமை வாழ்வு இல்லை.

உழைக்கும் உயர்மதியுள்ளோனுக்கு ஒரு இடம் தவறினால் இன்னோர் இடம். அங்கும் தவறினால், எங்கும் நிறைந்த கடவுள் எதிர்கொண்டு அவனுக்கு எல்லா உதவியும் புரிகிறார். முன்னிலும் தக்கதான ஓர் இடத்தை அவனுக்குக் காட்டுகிறார். ஸதா அவன் பக்கலிலேயே துணையா யிருக்கிறார். கருமிகளின் மத்தியிலே உதார குண ஸம்பன்னர்களையும் அவனுக்கு சகாயமாகச் சேர்த்து வைக்கிறார். தன் ஜீவனத்தைப்பற்றிய கவலை உழைப்பவனுக்கு இல்லை. அந்தக் கவலையை ஏற்பவர் கடவுள். அதற்கு வழி செய்பவரும் அவரே. தெய்வத்தை முற்றிலும் நம்பி தன் சுதந்திரத்தை மதித்து உழைப்பவன் பிறருக்கு ஏன் உட்படுவான்? அநியாய எஜமானனுக்கு அவன் தலைவணங்கான். தமக்கு லாபம் இன்றிப் பிறருக்கு எவரும் கூலி தரவில்லை. உழைத்துத்தானே காசு? தனது உழைப்பை விலைக்குப் பெற்று லாபம் அடைபவன் தன்னை இழிவுபடுத்துவானாகில், தன் சுதந்திரத்தை மதிப்பவன் அதற்கு விட்டுக்கொடுத்துக்கொண்டிரான். ஆனால், அந்த சமயத்தில் உழைப்பவன் தன் மனத்தை யடக்கிப் பொறுமைப்படுவதானது, தனது ஆத்திர சிந்தையையும், தான் பட்ட இழிவையும் தெய்வத்தினிடம் முறையிடுகிறானென்பதை அறிவிக்கும். உடனே அதைத் தெய்வம் விசாரிக்கத் தொடங்கிவிடும். எனவே, இவ்விடத்தில் அவனது பொறுமை சுதந்திரத்தை விட்டுக்கொடுத்ததா யாகாது. தெய்வத்தினிடமிருந்து அவன் பதில் வார்த்தை பெற்றதற்குப் பிறகு தனது சுதந்திரத்தைக் காண்பிப்போனாகலாம். உழைப்பவனின் அதிர்ஷ்டக் குறைவாய்ப் பழிக்கலாம். ஆனால், அவன் உழைப்பைப் பழிக்க முடியாது. உழைப்பவன் பொறுமையுள்ளவன். சுதந்திரவாதியும் பொறுமை யுள்ளவனே. குடும்பத்தலைவனும் பொறுமையுள்ளவனே. பாரதத்தில் தர்மபுத்திரரும் பொறுமையுள்ளவரே. இந்தப் பொறுமை என்பது பெரிய தீ. எவர் நிமித்தம் பொறுமை காட்டப்பட்டதோ அவரை அது இலகுவில் விடாது. சுதந்திரம் தனது

வக்கீல் தனது கட்சிக்காரன் திருப்திபடுவதற்கு எப்படி வேண்டுமானாலும் தன் நாவை அசைத்துத் திருப்ப நன்றாக கற்றுவைத்திருக்கிறார்.

பிறப்புரிமை ஒன்று மதிப்போன் வருங்காலத்தை எதிர்நோக்கிய வண்ணம் வெகு பொறுமைப்படுவோனாக இருப்பான். அவனைப் பழித்தோரைப் பாவம் சூழும் தெய்வம் சும்மா விட்டுவிடாது.

நீ உன் சுதந்திரத்தை உணர்பவனாயிருந்தால், உன் நெஞ்சிலே சுதந்திரதாகம் ததும்பினால், ரோஷம் மானம் உனக்கு இருந்தால், உன் அந்தஸ்தைக் குறைப்பவரிடத்தில் நீ ஒருபோதும் தலை வணங்காதே. நீ எவருக்கும் தன்மதிப்பை விட்டுச் சிரம் வணங்கத் தேவையில்லை. நீ ஆண் மகன். கடவுள் உன்னை வெறுமையாய்ப் படைக்கவில்லை. திக்கற்றவனாய்ப் படைக்கவில்லை. நீ உழைத்து வாழ இப்பெரிய உலகை உனக்குக் கொடுத்திருக்கிறார். எத்தனையோ பறவைகளும் விலங்கினங்களும் சுதந்திரமாய் வாழ்கின்றன. பிறரின் வசம் அடங்கவேண்டிய காலத்துங்கூட, சிங்கமும் புலியும் தம் கூடுகளில் கர்ஜித்துக்கொண்டு நிற்கின்றன. மனிதரிடத்து அடிமைப் பட்டுக்கிடக்கும மிருகங்களுங்கூட தம் சுதந்திரத்தை யுணர்ந்து மனிதனுக்கு உழைப்பதைத் தாமே உழைத்தால் அவைகட்குப் புல் முதலியன அகப்படாவோ? ஐயோ! அடிமை விலங்கே! அரண்யங்களில் சுதந்திரமாய்த் திரியும் விலங்கினங்கள் உண்டு உமிழ்ந்த எச்சில்கூட இந்த அடிமைப்பட்ட மிருகங்கட்குக் கிடைப்பதில்லை. அடிமைப்பட்டவைகளுங்கூட சில சமயங்களில் மீறிவிடுகின்றன! மிஞ்சினால் கெஞ்சுவது எங்கும் உள்ள சங்கதி. மீறித்தெளிந்த பிறகு மறுபடியும் மயங்காதிருப்பதே விடுதலைக்கு வழி. இதை மறக்கக் கூடாது. சுதந்திரம் உனது பிரப்புரிமை என்பதை யுணர்க.

சுதந்திரத்தை எவன் தன்னுயிர் எனக்கருதி மதிப்புடன் போற்றுகிறானோ அவனைக் கடவுளும் அவ்விதமே இருக்கவைப்பார். அவன் கைக்கு மேலுள்ளவனும் அவனை சுதந்தரத்திலேயே வைத்துப் பணிந்து நடப்பான். புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ? சுதந்திர நினைவினன் பிறர் தன்னை மட்டுக்குமீறி அடக்கியாள்வதற்கு ஒப்பான். கம்பீரமாகவே உலாவுவான். ஒரே ஒரு சொல்தான் பேசுவான். தன் வார்த்தையின்படி நடப்பான். தானும் ஏமாறான். பிறனையும் ஏமாற்றான். தன்னை நசுக்கவும் சம்மதியான். மற்றவர் நசுக்கப்படுவதையும் பார்த்திரான். உடனுக்குடன் தக்க விடையளித்து விடுவான். ஊத்தைக்கு இடம் கொடுத்தாலும் வார்த்தைக்கு இடம் கொடான். அற்ப கூலிக்கு இசையான். ஒரு சிறு வார்த்தைகூட அவன் கேட்கச் சகியான். அவன் அப்படிச் சொன்னானே யென்று வெகு நாளைக்கு உறுமுவான். மானத்திலேயே என்றைக்கும் அவனுக்குக் கண். தன் மதிப்பிலேயே அவனுக்கு ஸதா சிந்தை. சுதந்திரம் அவனது பிறப்புரிமை என்பதை மறவான்.

தனது பால்ய பருவ வாழ்க்கையை இப்போதுள்ள பெரிய மனித வாழ்க்கையில் நினைக்கில் அது ஒரு விநோதம் தான்.

நீ தமிழன் தானு? ஆம்—எனில் உன் சுதந்திரத்தை யுணர்ந்து கோள். சுதந்திர அறிவைப் பெற்றுக்கொள். தமிழன் சுதந்திர முடையவன். தமிழ்ப்பூமி சுதந்திரமுடையது. தமிழ்ப் பாஷை வேருெரு பாஷையினிடத்தில் எழுத்துக்களுக்கு எச்சிற்பிச்சை எடுக்கப்போனது கிடையாது. தனித்தமிழ் என்ற சுதந்திர உரிமை கொண்டு கர்ஜிக்கிற பாஷை வழங்கும் நாட்டில் மானிட உடல் தாங்கப்பெற்றது உனது பெரும்பாக்கியம். ஓ! நீ தமிழன்! அதைப் பெருமையுடன் சொல். தமிழ்நிலத்து மண்ணில் அடக்கம் செய்யப்படும் உனது எலும்புகளில் அடிமை நாற்றம் வீசாதிருக்கப் பார். உன் எலுமபுகள் சுதந்திர பரிமளம் கொண்டு கமழும்படி செய். தமிழ் மகன், தமிழ் மகள் ஒரு காலத்தும் அடிமையில்லே. எதற்காக நீ அனுவசியமாய் ஒருவருக்குத் தலேவணங்கவேண்டும்? ஓ! தேவையில்லே. சுதந்திரம் உனது பிறப்புரிமை.

சுதந்திர உணர்ச்சியில்தான் ஆத்மா ஒளியுடன் ஜகஜ்ஜோதி யாய்ப் பிரகாசிக்கின்றது. அந்த காந்திக்கு முன் எவரும் உட்பட வேண்டியதே. சுதந்திர அறிவு தவறினேரிடத்திலே தான் இறை வனின் அருளும் தவறுகிறது. அவர்களும் துன்பப்பட, பிறருக்கு வணங்கி நோக விதிவசம் வாய்க்கின்றது. சுதந்திரத்தை மதித்தா ருக்கே மதிப்பு. அவர்களுக்கே எல்லா வாழ்வும். நீ சுதந்திரன். பிறருக்கு உட்பட்டு உடல் வளேவதற்கு நீ பிறக்கவில்லே. சுதந்திரம் உனது பிறப்புரிமை.

கடவுள் அடிமையில்லே. அவர் சுதந்திர நாயகம். அவரது குழந்தை நீ. அதை மெய்யென்று நம்பினுல் நீயும் அடிமையில்லே. அவரைப்போல் நீயும் சுதந்திர திலகம். கடவுள் பக்தர்களுக்கு வசப்படும் கம்பீரத்தைப்போல் நீயும் அன்புக்கு வசப்பட்டு நில். அன்புக்கு இணங்கி தாழ்ந்து பணிந்திடுக. அன்புக்கு எதையும் செய்க. உன் கைக்குமேலிருந்து வேலே வாங்குபவன் அன்பினனு கில், அவன் க்ஷேமத்தை உன் க்ஷேமமாகப் பார். அன்பினர் உன் சுதந்திரத்தை மதித்துப் போற்றுவர். அன்பு காட்டலும், சுதந்தி ரம் உணர்த்துதலும் உனது பிறப்பைத் தூய்மைகொள்ள வைக்கும். உன் வணக்கமும் சுதந்திர கம்பீரத்துடன் இருக்கட்டும். ஒரு அரசன் தன் பிரஜைகளுக்கு வணங்குவதுபோன்ற வணக்கத்தில் நீ நில்.

சுதந்திரதேவியைத் தொழுவோன் ஒரு தொழிலேயே தன் ஜீவனமாகப்பற்றி நில்லான். ஒன்று தவறின் மற்ருென்றென வேருெரு தொழிலேயும் செய்துவருவான். ஒரே ஒரு தொழிலேக் கொள்வது அடிமை வாழ்வில் வீழ்த்தும். இரு தொழிலேப்பற்றி நிற்

இந்திய ஸ்திரீகள்தான் இந்தியாவில் நல்ல பெயரையும், கௌரவத்தை யும் பாதுகாக்கக்கூடியவர்கள். —(டாக்டர் முத்து லக்ஷ்மி)

போனே சுதந்தா வீரனுவான். இருவகை ஜீவன மார்க்கமுள்ளவனே அவன் எஜமானன் மதித்தே நடத்தவேண்டி யிருக்கும். இதுதான் சுதந்திர வாழ்வின் சூட்சுமம். சுதந்திரமே உனது பிறப்புரிமை யெனக் கொள்வதாகில், அடிமைத்தனத்திலே தள்ளுகிற ஒரு ஒண்டி ஜீவனத்தையே நம்பியிராதே. இன்னொரு சுதந்தர ஜீவனத்திலும் உழைத்து நில். ஒரு இடத்திலிருந்து விலகுவதற்குமுன் இன்னொரு தக்க இடத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்டுவிடு. இன்னொரு குருவியைப் பிடிப்பதற்குமுன் உன் கையிலுள்ள குருவியை விட்டு விடாதே. சுதந்திர மார்க்கத்தில் கைவீசி உலாவுவதற்கு இந்த முன்னெச்சரிக்கைகளெல்லாம் தேவை. குறி தப்பிப்போகும்போது மறுபடியும் போடுதற்கு இன்னொரு பாணமும் கையில் சித்தமாய் முந்தியே இருக்கவேண்டும். அப்பொழுது தான் சதந்திர ஆண்மைக்கு வெற்றி சித்திக்கும்.

பிறரிடத்து ஊழியனே யெனினும், ஊழியனுக இருந்து யாவும் கற்றுப் பின் எஜமானனுகப் பார்க்கும் உயரிய நினைவில் இருப்போன் ஒருநாளும் அடிமையாவதில்லை. ஊழியனே பின்பு எஜமானன். எஜமானனுகிச் சுதந்திரத்துடன் இருக்க முயலுவதற்கே ஊழியனுக அமரல் வேண்டும். என்றைக்குமே ஊழியனுய் இருந்துவிட ஒருபோதும் எண்ணுதே. அது உன் வாழ்க்கையிலே நீ செய்து கொள்ளும் பெரிய பிழையாகி விடும். ஊழியனின் நிலையிலும் சுதந்திரத்தை விடாதே. பேரிய மேற்பட்ட எண்ணமே கோள். தாழ்ந்த என்ணங்களையும், ஈன நோக்குகளையும் விலக்கு. நன்மைக்காகக் கடவுள் உண்டு என்ற திடசித்தமான நம்பிக்கையின் உறுதி உனக்குள் அழுத்தமாக இருக்கையில் எதற்காக நீ தலைவணங்கவேண்டும்? அன்புக்கன்றி வேறு எதற்கும் நீ சிரம் குனியத் தேவையில்லை. சுதந்திரத்தை மதிப்பவன் சுதந்திரத்தைப் பெறுவான். அடிமைத்தனத்தை உதறி எறி. சுதந்திரவானுக இருக்கப் பார். சுதந்திரம் உனது பிறப்புரிமை- இதை மறவாதே.

விளங்குக ஆண்மையின் பெரும் புகழே!

திருவருட் செயலால் சுதந்திர மாண்பினை எனக்கு உணர்த்திய இறைவனின் பாதமலர் போற்றி. எனது இல்லம் இனிது விளங்குக. மனைவாழ்க்கை துதிபெறுக. மக்கள் யாவரும் பாரத அன்னைக்குத் துணைவராதுக. என் செல்வம் கீர்த்தி ஓங்கிடுக. என் நெஞ்சமெல்லாம் இறைவனுர்தம் அன்புற் பொருந்துக. தோழர், உறவினர் பல்லோரும் மேன்மை சோள்ளுக. தோட்டது நிறைவேறுக. இன்பநிலயமாய் இவ்வுலகு எனக்கு இலங்கிடுக. விளங்குக என்றும் என் ஆண்மையின் பெதும் புகழே !



கவிதா விலாசம்

பணிவதில் ஆண்மை.

அன்பெனச் சொல்லு மதற்குநான் பணிவேன்
அன்பினுக் கேதையுஞ் செய்திடுவேன்
அன்பினுள் ளத்திற் கென்னையே யென்றும்
அர்ப்பண மாக்குவேன் மற்றும்
அன்பின ருறையு நாட்டினைத் தேடி
அடைவதே பெருமையாய்க் கொள்வேன்
அன்பிலாக் கடின நெஞ்சினர் தமக்கியான்
அணுவதும் பணிபவ னலவே. (1)

அன்னையைப் பணிவேன் தந்தையைப் பணிவேன்
ஆருயிர் குருபதம் பணிவேன்
உன்னரு மிறைவன் ஒருவனைப் பணிவேன்
உத்தமக் கற்பினைப் பணிவேன்
தன்னிகர் பெண்கள் உருவெலா மெனது
சகோதர மாகவே பணிவேன்
என்னக ரெனது தேசத்தைப் பணிவேன்
எதிர்ப்பவர் தமைப்பணி யேனே. (2)

படைத்தவன் காக்க இருக்கையில் மற்றப்
பதர்களை விரும்பியே யவர்தம்
கடைத்தலை நின்று சிறுபணி வேண்டிக்
காத்திருந் திடமன மிசையேன்
தொடுத்திடும் வறுமை பிடித்தசைத் தாலும்
சோறொரு கவளமற் றாலும்
கிடைத்ததன் மதிப்பை இழப்பதோ ? சிரந்தான்
கீழுற நாணிவா டுவதோ ? (3)

மிடியெலாந் திரண்டு வந்தெதிர்த் தாலும்
வேண்டுனர் வெறுத்தகன் ருலும்
படிவிரிந் தென்னை விழுங்கினும் என்மேல்
பருவத மோதிக் கோன்ருலும்
இடிவிழுந்துயிரை மாய்ப்பினும் கொண்ட
என்மனே உறுதியை யிழக்கேன் ;
அடிமையாய்க் கிடக்கும் அன்னையின் விலங்கை
அறுத்தெரிந் திடுவதென் கடனே. (4)

(தொடரும்.)

விஷயதானம் செய்யும் அன்பர்கட்கு.

நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் வரைந்தனுப்பும் அன்பர்களிற் பலர் பத்திரிகையின் நோக்கத்தைக் கவனிப்பதில்லை. அனுபவ பூர்வமாய் விளக்கி வரையப்படாத எந்த வியாஸமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தனித்த நீதிகள் தேவையில்லை. புண்பட்டு, அடிபட்டு, நொந்து கண்டறிந்தவற்றி லிருந்தும் உணர்ந்த ஞானங்களே தேவை. அவ்வண்ணம் வரைவதற்கு இயலாதார் நமக்கு வியாஸங்கள் அனுப்பாதிருப்பது பெரும் புண்ணியம். அநுபவமாய் வரைதலே நமது பத்திரிகையின் நோக்கம். அதற்கிசைய எழுதியனுப்பப்படும் ஒருசிலரின் வியாசங்கள் மட்டுமே பிரசுரம் பெறும். பத்திராசிரியர் பத்திரிகையின் முக்கால் பகுதிக்கும் தாமே எழுதிக்கொண்டு, எஞ்சிய கால்பகுதியை மட்டுமே மற்றவர்களின் வியாசங்களுக்குக் கொடுக்கி ருர். ஆதலின், எல்லா வியாசங்களையும் இச்சிறு அளவிற்குள் பிரசுரிப்ப தென்பது சாத்தியமில்லை. இதை அன்பர்கள் தெரிந்துகொண்டு நமக்கு சிரமம் தாராதிருக்குமாறு வேண்டுகிறோம். 'தபால் தலை' யனுப்பாதோர்க் கும், 30-தினங்களுக்கு மேற்பட்டுக் கேட்போருக்கும் வியாசங்கள் திருப்பி யனுப்ப இயலா. பத்திராசிரியர்.

பிழைதிருத்தம் ;...66-பக்கம் 24-ம் வரியில்——"மாய குழந்தை! கடவுள் அதற்குத்தான் துணை" என்றிருப்பதை——ஏமாறிய குழந்தை! அதற்குக் கடவுள்தான் துணை" என்று திருத்தி வாசித்துக் கொள்க.

எது நிகழினும் தங்கள் கொள்கையினின்றும், சத்திய நெறியினின்றும் பிறழாதவர்களே நாம் உற்பத்தி செய்யவேண்டும். —(ஸ்ரீ லஜபதி.)

எத்தேசத்து ஆண்(மையுள்ள) மக்களைக் கொண்டும் அந்நாட்டு ஸ்திரீ களின் தன்மையை அறிந்து கொள்ளலாம். —(ஸ்ரீ லஜபதி.)

எவ்வளவோ பேருக்குப் பிணிதீர்த்த வைத்தியரும் தன் வீட்டாருக்கும் தன் மனைவிக்கும் வந்த நோயைத் தீர்க்க முடியாமல் வேறொரு வைத்தி யரைத் தேட நேர்கிறது.

சாஸ்திர நுட்பங்கள்.

(83-ம் பக்கத் தொடர்ச்சி.)

33. நீர்களிலும் வாயுக்களிலும் காங்கையினால் காற்றோட்டம் உண்டாகும். பூமியிலும், சமுத்திரத்திலும், ஆகாசத்திலும் சூரியனுடைய வெப்பத்தால் அதிக விஸ்தாரமான காற்றோட்டங்கள் உண்டாகும்.

34. சூரிய வெப்பம் இல்லாவிட்டால், மேகம் மழை எதுவும் உண்டாகாது. சூரிய வெப்பத்தால்தான் ஸமுத்திர ஜலத்தின் ஓர் பங்கு ஆவியாய் எழும்பி மேகங்களாகி, காற்றால் தரைமேல் வந்து மழையாய் இறங்குகின்றது.

35. சூரியனிலிருந்து பூமிக்குவரும் காங்கை, லண்டன் போன்ற தேசங்களில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் கோடை காலத்தில் ஒரு பகலில் படும் வெயிலின் காங்கை 18-ஆயிரம் இராத்தல் கரி எரித்த காங்கைக்குக் குறையாது. இதைப் பார்க்கையில் தமிழ் நாட்டில் காங்கை இன்னும் அதிகமாகும்.

36. ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளுக்குச் செல்லும் காங்கை மூன்று வகையாய்ச் செலவாகும். (1) அது அப்பொருளில் பட்டுத் திரும்பும். (2) அது அப்பொருளால் கிரகித்துக் கொள்ளப் படும். (3) அது அப்பொருளை ஊடுருவிச் செல்லும்.

37 பொன் பாத்திரம் தன்மீது படும் காங்கையைப் பூரணமாய்த் திருப்பி விடும்.

38. கருமையான பொருள்கள் மற்றவைகளிலும் அதிகமாகக் காங்கையை உறிஞ்சும். இரண்டு குடங்களில் தண்ணீர் நிரப்பி அவைகளில் ஒன்றை வெள்ளைத் துணியாலும், மற்றதைக் கருப்புத் துணியாலும் சுற்றி, மூன்று மணி நேரம் வரையில் வெயிலில் வைத்தால், கருப்புத் துணியால் சுற்றுப்பட்ட குடத்திலுள்ள தண்ணீர் மற்றதிலும் அதிக சூடு கொண்டிருக்கும்.

39. வெள்ளைக் கடுதாசி காங்கைக் கிரணங்களைத் திருப்பிவிடும். கறுத்த கடுதாசியோ காங்கைக் கிரணங்களை உறிஞ்சும்.

40. பனி ஆகாயத்தி லிருந்து விழுகிறதில்லை. எங்கும் குளிராய் நீராவியாக நிறைந்திருக்கும்போது காங்கை குறைந்துபோக, அப்போது பனி உண்டாகிறது. காங்கை அதிகமாய்க் குறைந்துபோனால்தான் பனி உண்டாகும்.

41. காங்கையால் பொருள் விசாலிக்கின்றது. வண்டிச்சில்லு, பீப்பா முதலியவற்றின் வளையங்களை அவைகளின் சுற்றளவிலும் சிறியதாய்ச் செய்து, சிவக்கக்காய்ச்சி விசாலிக்கப் பண்ணி, அவைகளில் போட்டு தண்ணீர் ஊற்றி ஆற்றுவார்கள். வளையம் ஆறி ஒடுங்கி அவைகளில் இறுக்கமாய்ப்பிடிக்கும். இயந்திர கொப்பரைகளைச் செய்யும்போது அதின் ஆணிகள் தகடுகளை இறுக்கிக் கொள்ளும்படி அவைகளைச் சூட்டோடு வைத்து அறைகிறார்கள்.

அதிகம் தத்துவ ஞானம் பேசித்தான் நமது ஆத்மாவே நாசமாகப் போய்விட்டது ?—(ஸ்ரீ லஜபதி.)

42. இரும்பு, ஏறக்குறைய 2800-பாகம் காங்கையிலும், ஈயம் 612 பாகம் காங்கையிலும், மெழுகு 142 பாகம் காங்கையிலும், கொழுப்பு 92 பாகம் காங்கையிலும் உருகும்.

43. கொதிக்கிற வெந்நீரிலிருந்து புகைபோல எழும்புவது உள்ளபடி நீராவியல்ல. அது நீர் அணுக்களே யாகும்.

44. நீரைக் கொதிப்பிக்கும் பொழுது காங்கை புகும் பக்கத்தி லிருந்தே ஆவி உண்டாகி தண்ணீ ருக்குள்ளே குமிழி குமிழியாக எழும் பும். இதற்குப் **பொங்குதல்** எனப் படும். எண்ணெயும் ஜலமும் சேர்ந்த தைலத்தைக் காய்ச்சுகையில் இப் படிக் குமிழி எழும்புவதை நன்றாகக் காணலாம். குழம்பு கொதிக்கையி லும் காணலாம்.

45. மயிர், தடி, கயிறு, யானைத் தந்தம் முதலிய அநேகம் பொருள் கள் ஈரத்தை உறிஞ்சிப் பருக்கும்.

46. ஒரு பாத்திரம் தண்ணீரைக் காய்ச்சுகையில் அத்தண்ணீரில் சூடு ஏறி ஏறி 212-பங்கு வரையில் காங்கை அதிகமாகிக் கொதிக்கும். அதற்குமேல் இன்னும் சூடேற்றினால் அப்போது ஜலத்திலுள்ள ஆவி வெளி யேறப்பார்க்கும். 212-பங்கு காங்கை யாயுள்ள வெந்நீரை ஆவியாக்கி ஜலம் சுண்டிப்போகச் செய்யுமே தவிர 212-பங்கு காங்கைக்குமேல் அதிக காங்கை எவ்வளவு விறகைப்போட்டு எரித்தாலும் ஏறாது. ஆகவே, கொதிக்கத்துவங்கின நீரைப் பின்னும் கொதித்துக் கொண்டிருக்கப் பண்ணுவதற்கு சொற்ப காங்கை போதுமாகையால், கொதி கண்டவுடன் நெருப்பைக் குறைத்துவிடலாம்.

47. உஷ்ண காலத்தில் மழை பெய்யும்பொழுது ஈரம் வற்றுவதற்கு ஜலமும் காற்றும் காங்கையைக் கொடுப்பதால் குளிர் உண்டாகிறது. முற்றங்களுக்குத் தண்ணீர் தெளிக்கும் பொழுது வீடு குளிர்ச்சியாகிறது இந்த நியாயத்தினால்தான்.

48. விறகிலுள்ள நெருப்புக் காங்கையை வெளிப்படுத்தி விடுவதற்கு அதில் ஜலம் ஊற்றி அணைக்கையில், அதிலிருந்த அவ்வளவு காங்கையும் குபீரென்று வெளிவரும். நல்ல பகல் நேரத்தில் உஷ்ணமாயுள்ள இடத்தில் ஜலத்தை ஊற்றினால் இன்னும் அதிகமாய்ச் சுடும். காரணம் அப்போது காங்கை வெளியேறுவதால் தான். மறுபடியும் ஜலம் ஊற்றினால், அங்கு காங்கை வெளியேறிவிட்டதால் அப்போது அது ஜில் லென்று குளிரும்.

(தொடரும்)

படித்தாச்சுது ! பார்த்தாச்சுது !!

அந்தப் பெரிய பட்டே பட்டே மனிதர் வெகு கம்பீரமாய்ப் பத்திரிகையை எடுத்தார். கீழும் மேலும் மூலைகள்தோறும் அப்படி இப்படி நோக்கினர். பல பக்கங்கள் பசுந்தாகத் திருப்பினர். ஒரு நிமிஷத்திற்குள் பத்திரிகையை படித்து முடித்துக் கீழே போட்டுவிட்டார், மஹா ஞானியோ இவர் ? ஒரே ஒரு பார்வையி... தானே பத்திரிகையிலுள்ள எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளும் மஹாநுபாவர் போலும் ! ஆளின் உயரத்தையும், ஆடைகளின் அலங்காரத்தையும் பாரு ! ஐயோ ! முக்கியமாய் இருக்க வேண்டிய அந்த மூளையைக் காணோமே ! பட்டே மனிதர் பத்திரிகையைப் படித்தாச்சு ! பார்த்தும் ஆச்சு !!

பெரியாரின் மொழிகள்

(77-ம் பக்கத் தொடர்ச்சி.)

252. The sun shines hot; and, if we use delay.
Cold biting winter mars our hope-for hay.

SHAKESPEARE.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள். சூரியன் நன்றாகப் பிரகாசிக்கிறது; அப்பொழுதே நாம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டியதைச் செய்யாமல் தாமதித்தால் நாம் எதிர்பார்த்திருக்கிறதைப் பிந்திவரும் கடுமையான மாரிகாலம் அழித்து விடும். ஷேக்ஸ்பியர்.

253. All are architects of fate,
Working in these walls of time;
Some with massive deeds and great,
Some with ornaments of rhyme.

LONGFELLOW.

எல்லாரும் காலம் என்று சொல்லப்பட்ட நான்கு சுவர்களுக்குள் தங்கள் கர்மாவைச் செய்யும் வேலைக்காரர்கள். சிலர் பெரிய காரியங்களைச் செய்கிறார்கள். இன்னும் சிலர் பெரிய காவியங்களைச் செய்யும் கவிகளாக இருக்கிறார்கள்.

லாங்பெல்லோ.

254. I believe that Virtue shows quite as well in rags and patches as she does in purple and fine linen. DICKENS.

நல்ல குணமானது கந்தைகளால் உடுக்கப்பட்டிருந்தாலும், நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்போது எவ்வளவு நன்றாய் சோபிக்கிறதோ அவ்வளவு நன்றாக சோபிக்கும். டிக்கன்ஸ்.

255. Beauty and difficulty go together, and we shall find that they are only mean and paltry difficulties it is wrong or contemptible to wrestle with.

RUSKIN.

அழகும் கஷ்டமும் எப்போதும் இணைபிரியாதவை. நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால் அந்தக் கஷ்டங்களெல்லாம் நாம் எதிர்த்து நின்று மன்றாடக்கூடிய அவ்வளவு பெரிதல்ல. அவ்வளவு அற்பமானவைகள். ரஸ்கின்.

256. The wanderings
Of this most intricate Universe
Teach me the nothingless of things.

TENNYSON.

இந்த முடுக்கான உலக முழுவதும் சுற்றினதில் நான் கற்றுக் கொள்வதென்னவென்றால் வஸ்துக்களிலெல்லாம் ஒன்றுமில்லை என்பது.

டென்னிஸன்.

257. Love is sunshine, hate is shadow, Life is checkered shade and sunshine; Rule by love.

LONGFELLOW.

அன்பு என்பது சூரிய வெளிச்சம், வெறுப்பு என்பது நிழல்; வாழ்க்கை என்பது இரண்டும் கலந்தது. அன்பினால் ஆளு. லாங்பெல்லோ.

258 Pride is one of the seven deadly sins; but it cannot be the pride of a mother in her children, for that is a compound of two cardinal virtues—faith and hope. DICKENS.

"பொறுத்திருந்து பார்ப்போம்"—என்பது யோசனை விளங்காத காலத்துக்குக் கைகண்ட மருந்து. அந்த சமயம் தான் தப்புவிக்கவும் முடிகிறது.

கர்வம் என்பது ஏழு மகா பாபங்களில் ஒன்று. ஆனால் அது ஒரு தாயார் தன் குழந்தைகளிடத்திலில் வைத்துள்ளது அல்ல. ஏனென்றால் ஒரு தாயின் கர்வம் இரண்டு உயர்ந்த குணங்களுள்ளது. நம்பிக்கையும் நல்ல எண்ணமும் கலந்தது. டிக்கன்ஸ்.

259. Ah the world's a stage,
And all the men and women
merely players
They have their exits and their
entrances ;
And one man in his time plays
many parts. SHAKESPEARE.

உலகம் ஒரு நாடகமேடை, மனிதர்களும் ஸ்திரீகளும் அந்த மேடையில் நடிக்கும்போது தோன்றி மறையும் நடிகர்கள். ஒருவனே அவன் காலத்தில் அநேக நடனங்களை நடிக்கிறான். ஷேக்ஸ்பியர்.

260. If you have the abilities of all the great men past and present, you could do nothing well, without sincerely meaning it and setting about it.

DICKENS.

முன்காலததில் இருந்தவும் இப்பொழுது இருக்கும்படியான எல்லா பேர்பெற்ற மனிதர்களின் சக்திகள் பூராவும் உன்னிடம் பொருந்தி யிருந்தாலும் மனப்பூர்வமாய் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டு ஊக்கத்துடன் நில்லாவிட்டால் அந்த காரியத்தைநன்றாய் செய்யமுடியாது.

டிக்கன்ஸ்.

261. Thought takes a man out of servitude into freedom.

EMERSON.

தீர்க்காலோசனையானது ஒருவனை அடிமைத்தனத்தி னின்றும் நீக்கி சுயேச்சையாய் இருக்கும் தன்மைக்கு வரும்படி செய்கிறது. எமர்சன்.

262. There are some sweet daydreams, so there are, that put the visions of the night to shame.

DICKENS.

இராக்கனவுகளைத் தோற்கடிக்கக் கூடிய இனிமையான பகற்கனவுகள் எத்தனையோ இருக்கின்றன.

டிக்கன்ஸ்.

P. E. பரஷியம் நாயுடு.
"மனோகர விலாஸ்" ஸ்ரீரங்கம்.

இருவகை விருந்தினர்.

ஆடம்பரமான காபி பலகாரத்தை விரும்பும் விருந்தினர் இரண்டு தினங்கட்குமேல் ஒரு வீட்டில் தங்க முடியாது. வீட்டிலுள்ளதை யுண்ணும் வீட்டுக் குழந்தைபோன்ற விருந்தினர் பல நாளைக்கு இருந்தாலும் அது பாரமாகத் தோற்றாது. அவர்கள் சும்மா சும்மா உண்டுவிட்டு உறங்கார். ஸதா ஏதாவது வீட்டுக்கு அவசியமான வேலைகளையும் பிரியத்தோடு செய்து பிரியமான மனிதர்களாய் நல்ல துணையாகவும் இருந்து ஆபத்து நேரங்களுக்கு ஒத்தாசையும் புரிவார்கள். அத்தகையோர் தம் ஊருக்குப் புறப்படுகையில் மனது மிக்க வருந்தும். காபி பலகார ஆடம்பரஸ்தர்களையோ—அவர்கள் எப்போது தொலைவார்கள் எத்தனை செலவு என்று தோற்றும்.



என் மணாளர் என்னையும் என் சகோதரியையும் கண்டதே திடுக்கிட்டுவிட்டார். ஆவேசங்களோ வெனச் சோர்ந்து மூர்ச்சையானார். நான் மிகப் பயந்து உடனே என் கைக்குட்டையைத் தண்ணீரில் நனைத்து அவர் முகத்தைத் துடைத்தேன். கொஞ்ச நேரத்தில் கண்விழித்துப் பார்த்தார். என்னை ஒருவாறு நோக்கி, நான் யார்? எங்கிருக்கிறேன்? என்றார். என்னுடைய சவிஸ்தாரத்தைக் கூறினாலொழிய, அவர் மனம் சாந்தி யடையாது எனத் தெரிந்து "காதலரே! என்னை ஆவேசமெனக் கருதிவிடாதீர். உண்மையில் நான் உயிருடன் இருக்கின்றேன். உங்கள் மனைவி நான் தான் என்பதற்கு—எனது மோதிர விரலிலிருக்கும் ஒரு வடுவைப் பாருங்கள்" என்றேன். இது கனவோ! நனவோ! இக்குரல் என் மனைவியினுடையதே. இவள் கரத்திலிருக்கும் வடுவினைப் பார்த்ததும், என் மனைவி இவளே எனத் தீர்மானிக்கிறேன்" என்று கூறினார். அன்பரே! சிறிது சாவதானமாக, எனக்கு நேர்ந்த விபத்துக்களையும், நான் எவ்விதம் இவ்வெளியுலகிற்கு வந்தேனென்பதையும்பற்றி நான் கூறப்போவதைக் கேளுங்கள். பின்பு உங்கள் கனவு நனவாகவே மாறிவிடும்" என்றேன். அதற்கு அவர் பேசாதிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 15-ம் தேதி எனது சிறிய தகப்பனாரிடமிருந்து என்னை வசந்த மாளிகைக்கு வரும்படி எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை நீங்கள்தான் என்னிடம் அளித்தது. [எனது மணாளர் வியப்புடன் நோக்கினார்.] உங்களிடம் விடை பெற்றுக்கொண்டு மறு நாட் காலை ரயிலேறி லக்ஷ்மீபுரி போய்ச் சேர்ந்தேன். ரயிலை விட்டிறங்கியதும், எனது சிறிய தகப்பனார் என்னை வந்து பார்த்து, அங்கே தாம் கொண்டுவந்திருந்த வண்டியிலேற்றிக்கொண்டு, வசந்த மாளிகைக்குச் செல்லாமல் நகரத்தின் மேற்குப்பாகத்திற்கு அழைத்துச் சென்றார். நான் "எங்கே செல்லுகிறோம்" என்று அவரைக் கேட்டேன். அதற்கவர் "உன் சிற்றன்னை இந்தப் பக்கத்தில் ஒரு புதிய மாளிகையிலிருக்கிறாள். அவளைப் பார்க்க உன்னை, அம்மாளிகைக்கு அழைத்துச் செல்கிறேன்" என்றார். நான் பேசாதிருந்தேன். சில நிமிடங்களில் ஒரு பிரமாண்டமான மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தோம். வேலைக்காரர் ஒருவரையும் காணோம். அம்மாடியிலுள்ள ஒரு

அந்த ஏழையிடம் வேலை வாங்கிக்கொண்டுதானா சோறு போடவேண்டும்? சும்மா போட்டால் எவ்வளவோ புண்ணியமாச்சுதே.

அலங்காரமான அறைக்கு என்னைச் சிறிய தகப்பனூர் அழைத்துச் சென்று "கோமளம்! இங்கே இரு. இதோ வருகிறேன்" என்று கூறிச் சென்ருர். அவர் சென்ற மறுநிமிடமே ஒரு குரூரமான நீக்ரோ மாது அவ்விடம் வந்தாள். அவளைக் கண்டவுடன் நான் பாதிப் பைத்தியம் பிடித்தவள்போலாயினேன். அவள் ஒரு நிமிடமும் தாமதியாமல், நோய், என்னிடம் வந்து, என் மூக்கில் ஏதோ ஒரு மயக்க மருந்தைக் காட்டினுள். உடனே பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து விட்டேன். [எனது பிராண நாயகர் மிக்க பரிதாபமாய் நோக்கினர்.]

பின்பு நான் கண்விழித்துப் பார்க்கையில் ஒரு விசாலமான அறையில், ஒரு மஞ்சத்தின்மீது படுத்திருப்பதை அறிந்தேன். என்னருகே, ஒரு வெள்ளை யுடையுடன் ஒரு கன்னிகை நின்றுகொண் டிருந்தாள். அவளை நோக்கி, "அம்மா! இம்மாளிகை யாருக்குரியது? நான் ஏன் இவ்விடமிருக்கின்றேன்?" என்று வினவினேன். அவள் "சகோதரியே! இது தான் பைத்தியக்சார ஆஸ்பத்திரி. உனக்குப் புத்தி சுவாதீனத்தி வில்லாதபடியால், இங்கு இருக்கிருய். விரைவில், பழைய நிலைமைக்கு வந்துவிடுவாய்" என்ருள். அந்தோ! அவ்வமயம், என் மனம் பட்ட பாடு கடவுளே அறிவார். சிறிது நேரம் வரை பேசாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன். பின்பு திடமனதுடன், "சகோதரி! நான் பைத்தியக்காரி என்பதாகக் கூறுகிருயே! இது நியாயமா!" என்று இயம்பினேன். அக்கன்னிகை, புன்னகையுடன் "நீ புத்தி சுவாதீனத்தி விருப்பதானுல் உன் பெயரைக் கூறு" என்ருள். எனக்கு அந்நிமிடம் வந்த ஆத்திரமும், கோபமும் சொல்ல வொண்ணுது. எனினும், சமயத்தில், ஆத்திரத்தால் மதியீனமாய் நடந்து கொள்ளுதல் மிக்க அபாயத்திற் கிடமாகும் என்றுன்னி, சாந்தமாகவே "என் பெயர் கோமளம்" என்று நவின்றேன். அதைக்கேட்ட அந்நங்கை, ஹா, ஹா எனச் சிரித்தாள். எனக்கு ஒருபுறம் வெட்கமும், ஒருபுறம் கோபமும் உண்டாயது. என் செய்வது? யாவும் அம்பிகையின் செயல். என்று தேற்றிக்கொண்டேன்.

நான் எழுந்து நடமாடச் சிறிது பலம் வந்தவுடன், என் ஆருயிர்க்காதலரையும், சகோதரியையும் எவ்விதமும் சந்தித்து நடந்த படுமோசங்களைக் கூறிச் சதியாலோசனை செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனுல், சந்தர்ப்பங்கள் என் எண்ணத்திற்கு முற்றிலும் விரோதமாகவே யிருந்தன. என்னை ஆஸ்பத்திரி சுற்றுப் பிராகாரத்திற்குள் உலாவிவரும்படி டாக்டரின் உத்தரவு. டாக்டரை ஒரு நாளும் பார்த்ததில்லை. என்னைப் போன்று அவ்விடம் அடைபட்டவர்களையும் பார்த்ததில்லை. ஆனுல், நோயாளிகளின் சப்தம், அழுகை, எனக்கு இரவில் கேட்கும். என் நிழல் போல் ஒரு தோழி என்னருகே சதா யிருப்பாள். அவ்விடம் விட்டுத் தப்புவிப்பது மகா துர்லபம். என்னுடனிருந்த தோழி மிக்க நல்லவள். அவளிடம், என் நிலைமையைக் கூறி வருந்ினுலோ தன்னுல் ஒன்றும் இயலாதென மறுத்துவிடுவாள். அல்லும் பகலும் உங்களையே சிந்தித்துக் கொண்டிருப்பேன்- ஒரு நாள் நானிருக்கும் அறைக்கு ஸ்வர்ணம் திடீரெனப் பிரவேசித்தாள். அவளை நான் அடையாளம் தெரிந்துகொள்ள

அடிமைப்படுத்தி வேலை வாங்குவதிலும் அன்பு காட்டி வேலை வாங்குவதில் இரண்டு பங்கு வேலையை முடித்துக் கொள்ளலாம்,

முடியவில்லை. அவள் என்னை நன்ருகத் தெரிந்து கொண்டமையால், ஓடிவந்து கட்டிக்கொண்டாள். இருவரும் வெகு நேரம்வரை பேசாதிருந்தோம். பின்பு நான் உங்களைப்பற்றி விசாரித்தேன். அதற்கவள், "யாவரும் சௌக்கியமே" என்று வெறுப்பாய்க் கூறிவிட்டாள். எங்களருகே தோழியும், ஒரு காவலனும் நின்றுகொண்டிருந்தனர். ஒருமணிநேரம் கழித்து, மிக்க துயரத்துடன் ஸ்வர்ணம் விடைபெற்றுக்கொண்டாள்.

பின்பு ஒரு வாரமாக அவளைக் காணவே யில்லை. என் மனமோ அலைவாய்ப்பட்ட துரும்புபோல் தவித்தது. பின்பு ஒரு நாள், ஸ்வர்ணம் காவலன் துணையில்லாமல் என் அறைக்குள் வந்தாள். நான் யோகக்ஷேமங்களைப்பற்றி விசாரித்தேன். முன்போலவே வெறுப்பாய்க் கூறினுள். எனக்கு இன்னது செய்வதெனத் தெரியவில்லை. அப்பொழுது ஸ்வர்ணம், என் தோழியை ஒரு தனியிடத்திற்கு அழைத்துச் சென்று பேசிக் கொண்டிருந்தாள். கொஞ்சநேரம் கழித்து இருவரும் என்னை நோக்கி வந்தனர். ஸ்வரணம் ஓடிவந்து என்னை ஆலிங்கனம் செய்து காதிற்குள் மெதுவாக "இந்த நரக உலகிலிருந்து நீ விடுதலை அடைந்தாய் இது உண்மை. தைரியமாயிரு'; என்று கூறிவிட்டுத் தோழியை நோக்கினுள். தோழி என்னை அழைத்துச் சென்று, அவள் உடைகளை என்னிடமளித்து அவைகளை அணியச் செய்து, அவள் என் உடைகளை அணிந்துகொண்டாள். இருவரும் உடைகளை மாற்றிக்கொண்டோம். உடனே ஸ்வரணம் என்னை அழைத்துக்கொண்டு, நோாய் வாயிலருகிலிருந்த காவலனிடம், ஏதோ சமிக்கை காட்டிவிட்டு வெளியே புறப்பட்டாள்.

இருவருமாகப் பாட்டையில் காத்துக்கொண்டிருந்த ஒரு வண்டியிலேறினேம். அவ்வண்டியில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரைக் கண்டு நான் பயந்தேன். உடனே ஸ்வர்ணம் என்னை நோக்கி, "கண்மணி! இவரின் உதவியால்தான் நீ சிறிது நோத்திற்கு முன்னிருந்த ஆஸ்பத்திரியை விட்டு நீங்கி உன் சகோதரியைக் கண்டாய், உன் நாயகரையும் காணப்போகிருய்" என்ருள். அம்மனிதர், மிக்கப் பணிவுடன் "அம்மா! என் பெயர் தேவராஜு" என்ருர். ஸ்வர்ணம் மறுபடியும் என் பக்கம் திரும்பி, "சகோதரியே! தேவராஜு என்ற பிரபல துப்பறி நிபுணர் இவரே" என்ருள். நான் மிக்க சந்தோஷத்துடன் அவருடன் பேச ஆரம்பித்தேன். மூவரும் சுகமாக சுக விலாசமென்ற ஹோட்டலை அடைந்தோம். ஒரு தனி அறை எங்களுக்கென, முன்னமே தயாராக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு அன்று தங்கினேம். போஜனம் முடிந்தவுடன் நான் நீங்களிருக்குமிடத்திற்குப் போவோமென ஸ்வர்ணத்தையும் தேவ ராஜுவையும் அழைத்தேன். அப்பொழுது ஸ்வர்ணம் என்னை நோக்கி, "உன் மணாளர் உன்னை எமனுக்கு ஒப்புவித்துவிட்டு, வாழ்க்கையை வெறுத்திருக்கிருர்" என்ருள்.

என் நெஞ்சம் திடுக்கிட்டது. அவள் வார்த்தையில் சந்தேகம் ஜனித்தது. நான் இறந்தேன் என எண்ணிக்கொண்டாரா? என்று அவளைக் கேட்டேன். "உலகம் நீ இறந்துவிட்டதாகக் கருதுகிறது. உன் பெயரால், உன் நாயகரால், ஒரு

நல்லவனென்று ஒருவனை ஒரு அயோக்கியன் புகழ்வதானது, ஒரு உத்தமனுடைய புகழ்ச்சியைவிட அதிகமாக எடுத்துக்காட்டும்.

பலிபீடமும் கட்டப்பட்டது'' என்று கூறினுள் ஸ்வர்ணம். "ஓ! இதென்ன, உண்மையாகவா! என்று வியப்புடன் கேட்டேன். "கண்மணி! உலகத்தில் நடக்கும் படுமோசச் செயல்களை நீ அறியாய். நான், உன்னை விட்டு, அயலூருக்குச் சென்றேனெனத் தெரிந்து சிறிய தகப்பனூர் உன்னை வசந்த மாளிகைக்கு தைரியமாக வரவழைத்திருக்கிறார். நான் இருந்தால், அங்கு நீ சென்றிருக்கமாட்டாய், அவர் சூழ்ச்சியிலும் நீ அகப்பட்டிருக்கமாட்டாய். நிற்க, பின்பு உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே உயிருள்ள வரைக்கும் அடைத்துவைக்கும்படி அவர் சூழ்ச்சி செய்தார். இதுமட்டுமல்ல. அவர் தனக்கு மரணதண்டனை கிடைக்கக் கூடிய ஒரு கொலைக் குற்றத்தைச் செய்திருந்தார். அதை பத்மினி என்ற உன் சிநேகிதி அறிவாள். அவள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்தாள். அவளை, உன்னைத் தங்கியிருக்கச் செய்த மாளிகைக்கு அழைத்து வந்து அநியாயமாய் விஷம் புகட்டிக் கொன்றார். அவளுக்குப் பதிலாக உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார். ஏனெனில், பத்மினியின் தாய் தன் மகளை ஆஸ்பத்திரியில் தேடினுல், உன்னைக் காட்டிவிடுவதற்காகவே. நீங்களிருவரும் ஒரேவிதமான சாயலுடையவர்களென்று சிறிய தகப்பனூர் அறிவார். அங்க அடையாளங்களிலேனும் உயரத்திலேனும் நடையிலேனும் நீங்களிருவரும் வித்தியாசப்பட்டவர்களல்ல. நீ இறந்து விட்டாயென உன் நாயகருக்கு அவர் தந்தி கொடுத்தார். அவர் கண்ணீரும் கம்பலையுமாய் ஓடிவந்தார். அதற்குள் மசான பூமிக்குப் பத்மினியின் உடல் கொண்டுபோகப்பட்டுவிட்டது. உன் கணவர் வந்ததும் உன் உடலைக் காண்பித்து உடனே மூடிவிட்டனர். இது முன் ஜாக்கிரதையாய் உன் கணவர் நன்ருய்ப் பார்த்து சந்தேகப்பட்டு விடாதிருக்கச் செய்த மோச சூழ்ச்சி. உன் கணவர் நீதான் உண்மையாகவே இறந்ததாகக் கருதிவிட்டார். பின்பு பத்மினியை, நீயென மரணச் சடங்குகள் நடத்தி, கமலாபுரத்தில் அரவிந்தன் கால்வாய்க் கருகாமையிலுள்ள மயான பூமியில் புதைத்து அவ்விடத்தில் ஒரு பலிபீடமும் கட்டிவைத்தார். அப்பீடத்தில் "சுந்தரதீரர் மனைவி கோமளம் திடீரென நேர்ந்த மாரடைப்பினுல் 1895-ம் வருடம் ஏப்ரல் மாதம் 16-ந் தேதி இறந்தாள்'' எனச் செதுக்கியுமிருக்கிறது. இவை யனைத்தும் செய்ய வைத்தவர் நம் சிறிய சகப்பனூரே. நானும் அவர்களுடன் சேர்ந்துகொண்டேன். யாவும் உண்மையாகவே நம்பினேன். ஒருநாள், இந்நண்பர், என்னிடம், உன்னைப்பற்றியும், சிறிய தகப்பனுரைப்பற்றியும் விசாரித்தார். நான் எனக்குத் தெரிந்தவற்றைக் கூறினேன். இவர்தான் நம் சிறிய தந்தையார், ஆதி முதலிருந்தே செய்த வஞ்சனைகளையும் கொலையையும் கண்டுபிடித்து, உன் இருப்பிடத்தையுமறிந்து, என்னிடம் யாவும் கூறி, உன்னைத் தந்திரமாக, தோழியையும், காவலனையும் சிறிது பணம்கொடுத்து ஏமாற்றி அழைத்து வரும்படி செய்தார்.'' என்று முடித்தாள் ஸ்வர்ணம்.

நான் உடனே, என்கையிலிருந்த ஒரு விலையுயர்ந்த கணையாழியைக்

வீட்டுத் தலைவன் இறந்துவிட்ட வருத்தத்தில் முக்கியஸ்தர்கள் இருக்கையில், நடுவிலிருப்பவர்கள் கைக்கு அகப்பட்டதையெல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள்!

கழற்றி அத்துப்பறிபவருக்கு அளித்து, "என் சிறிய தகப்பனூர் என் தோழி பத்மினியைக் கொல்லக் காரணம் என்ன" என்று கேட்டேன். அதற்கு அவர்—"ஆடவர்களின் சங்கதி தெரியாதா? உன் சிற்றப்பா பத்மினியை விவாகம் செய்து கொள்வதாய்ச் சொல்லி ரகசியத்தில் கற்பை யழித்து வயிற்றிலும் ஒரு கருவை உண்டாக்கிவிட்டுப் பிறகு மறுத்துவிட்டார். ஐயோ! பத்மினி ஏமாறிப்போய் அதே ஏக்கமாய்ப் புத்தி ஸ்வாதீனமற்றுப் பிதற்றத் தொடங்கினுள். அவள் தாய் டாக்டரின் வார்த்தையின்படி அவளைக் குணப்படுத்துவதற்காகப் பைத்திய ஆஸ்பத்திரியில் விட்டிருந்தாள். ஆனுல், தன் மகள் இரண்டுமாத கர்ப்பமென்று அறியாள். உன் சிறிய தந்தையோ பத்மினியின் வாயாலேயே கர்ப்பமென்று சொல்லக் கேட்டிருந்தார். பிறகு குழந்தை பிறந்து பத்மினியின் பைத்தியமும் தீர்ந்தால் தன் பெயர் வெளிபட்டுப்போய் பெரிய சங்கடப்பட நேருமென்று பத்மனியைத் தந்திரமாக இட்டுவந்து கொன்று விட்டார். பத்மினியின் தாய் பிறகு ஆஸ்பத்திரிக்கு வந்து நீ தன் மகள் அல்லவென்று தெரிந்து கொண்டு என்னிடம் சொல்லவே, நான் பல மாதங்களாய்த் துப்பறிந்து உன்சிறிய தந்தையைக் கைதுசெய்து உண்மையை வெளிப்படுத்திவிட்டேன். அடுத்த மாதம் உன் சிறிய தந்தையின் கேஸ் விசாரணை. அதில் நீயும் ஒரு சாட்சியாக வரவேண்டும்" என்று யாவும் விவரமாகச் சொன்னூர். நான் ஸ்வர்ணத்தின் வீடுசேர்ந்தேன்.

பின்பு, என்னை உங்களோடு சேர்ப்பிப்பதாய். ஸ்வர்ணம் சொல்லி அப்படியே செய்தாள். நான் பைத்தியக்கார ஆஸ்பத்திரியை விட்டு நீங்கி மூன்று நாட்களாகின்றன" என்று முடித்தேன். அவ்வளவில், புத்துயிர் பெற்றவர்போல், எனது நாதர் எழுந்து, என்னிருகரங்களையும் பிடித்துக்கொண்டார். மறுபடி எங்கள் வாழ்க்கை இன்ப மயமாகத் தோன்றியது. சிறிய தந்தைக்கும் மரண தண்டனை கிடைத்தது. பெண்ணை வஞ்சித்த பாபி தொலைந்தான். ஆறு மாதங்களுக்குப் பின் என்னை என் கணவர் கரங்களிலளித்த என் வழிபடு தெய்வம் கமலவல்லியை மனமொழி மெய்களால் பணிகின்றேன். சுபம்.

எஸ். டி. ஆனந்தன்.

அது வேறு நகரே! பாழ்படு நரகே!!

எத்தனை உன்னதம் பொலிவுற்ற எழிலுறு நகரே எனினும், தன் மனங்கவர் வனப்பினர் — அன்பு நிறை மாட்சியாளர்— மனதோன்றுபட்ட மாண்பினர்—தான் வேண்டிச் சென்ற உருவம் —கோரிச்சென்ற மனிதர்—தன்னை அன்றுகட்டியணைந்த ஜோதி— அங்கில்லையாயின், வேற்றூர் அவர் ஏகி யிருப்பின், அது அச்சமயம் வேறுநகரே—பாழ்படு நரகேயாகும். மாடமாளிகை மேடைகள் சூழ்ந்திருப்பினும் பாலைவனத் தோற்றமே பெரநந்திவிடும்.

P. G. குலசேகரன்.

அநுபவித்து உணர்வதிலுள்ள சுவை நயங்கள்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

II

இவ்வுலகில் நமக்கு நன்மை யிவை, தீமை யிவை யென்பதை அறிந்து கொள்ளவாயினும், அதற்கு அநுகூலமான செய்கை யாதேனும் ஒன்று செய்யவாயினும் நாம் சிறிதும் திறமை யற்றவர்களாயிருக்கையினும், நம்மிடத்தினின்றும் ஒரு பயனையும் எதிர்ப்பாராமல் நம்முடைய சவுக்கியமொன்றையே கருதி நமக்குப் பல விதமான உதவிகளும் செய்து நம்மைக் காப்பாற்றுகின்றவர்களுக்கு நாம் என்ன பிரதியுபகாரம் செய்யலாம்? நாம் எது செய்தாலும் அவர்கள் செய்த உதவிக்கு அது ஈடாகாது.

இவ்வாறு நம்மால் எவ்வகையிலும் தகுந்த மாறுதவி செய்யமுடியாத பேருதவியை நமக்குச் செய்கின்றவர்கள் பலருண்டு. அவர்களுள் கடவுள், தாய் தந்தையர், ஆசிரியன் அரசன் ஆகிய இவர்கள் முதன்மையானவர்களாம். இவ்விதம் நமக்கு நன்மை செய்வதில் கடவுளுக்குப் பிந்தியவர் தாய் தந்தையர்கள். தாயானவள் குழந்தையைப் பத்துமாதம் கர்ப்பத்தில் சுமந்து பெற்று பசிவேளையறிந்து பாலூட்டி, தூங்குகிறவேளையறிந்து தாலாட்டி, அழுகிறவேளையில் எடுத்து நகைமூட்டி, விளையாடுகிற வேளையில் சீராட்டி, குளிப்பாட்டுகிற வேளையில் குளிப்பாட்டி, ஈ எறும்புகூட மேலே மொய்க்காமலும் வெயில் காற்றுப் படாமலும் கவனமாயிருந்து, கண்ணை யிமை காப்பதுபோலப் பிறந்த நிமிஷமுதல் காப்பாற்றுகிறாள். சிறிதும் நோய் அணுகவொட்டாமல் சமயமறிந்து மருந்து கொடுத்துப் பரிகாரம் செய்கிறாள்; குழந்தை பாலுண்டு வளர்ந்து வருங் காலந்தன்னில் அதற்கு ஏதாவது நோய் வந்தால் அதற்காகத் தான் பத்திய மிருந்து பரிவுடனே பாதுகாக்கிறாள்; குழந்தை கொஞ்சம் பெரிதானபிறகு அதற்குப் பேசப் பயிற்றுகிறாள். பலவகையான நல்லொழுக்கங்களையும் நடத்திக் காட்டுகிறாள். தன் மகன் எத்தனை குற்றம் செய்தாலும் அது தாயின் மனதுக்கு ஒரு தப்பிதமாய்த் தோற்றாது. மகனுக்கு ஏதாயினும் ஒரு துன்பம் நேரிட்டால் அது தனக்கு நேரிட்டதைப் பார்க்கினும் பதின்மடங்கு பெரிதாக நினைத்துப் பரிதாபப்படுவாள்; மகனுக்குக் காலில் முள் தைத்தால் அது தாய்க்குக் கண்ணில் தைத்ததுபோ லிருக்கும். பிள்ளை கொஞ்சம் புத்திசாலியாய்ப் படித்துத் தேறினால் அதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி கொள்வார் மாதாவைப் போல மற்றெவருமில்லை.

“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் [தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.”

தாய் நமக்குச் செய்யும் உதவிகளுக்குப் பிரதி நாம் எத்தனை நாள் அவளுக்கு ஊழியம் செய்தாலும்

“மனைவியிட மிருந்த பிரியத்தால் சத்தியத்தைக் கைவிட்டேன். சத்தியமானது மாயையில் மறைந்து கிடக்கிறதென்று உபநிஷத்துக்கள் கூறவில்லையா?” (மகாத்மா)

நமது கடன் தீராது. ஆயினும் அந்த அம்மை நம்மிடத்தினின்றும் மற்றொரு நன்மையையும் எதிர்பாராமல் நமது க்ஷேமமொன்றையே பெரிதாக நினைத்துப் போஷிக்கிறாள். ஐயோ பாவம்! அருமையினும் அருமையான இப்படிப்பட்ட நற்றாயைச் சிலர் இளமையிலேயே பறிகொடுத்து விடுகிறார்களே! அவர்களுடைய துர்ப்பாக்கியத்தை என்னென்று சொல்லலாம்? எத்தனைபேரிருந்து அணைத்து ஆதரித்தாலும், ஐயோ! தாயில்லாப் பிள்ளையென்றே பார்ப்பவர்களெல்லோரும் பரிதபிக்கிறார்களல்லவா? பிள்ளைக்குச் சந்தோஷமுண்டானாலும் தாயுடன் சொல்லவேண்டும்; தமது சுகதுக்கங்கள் வேறு யாருடன் சொன்னாலும் தாயுடன் சொல்லுவதுபோல் அவ்வளவு திருப்திகரமாயிராது. இத்தகைய அன்புடையவளாய் மடிமேலெடுத்து மார்போடணைத்து முலைப்பால் கொடுத்து மகிழ்வோடு வளர்த்த மாதாவினும் மிக்க இனிய உருவம் இவ்வுலகினில் மற்றொன்றேது? நம்மைப் பெற்றெடுத்த தாயைத் தெய்வமாக நினைத்து "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பதையுணர்ந்து, மாதாவின் சொற்படி கேட்டு நடந்து, தள்ளாத காலத்தில் அவளுக்குப் பலவிதமான உபசாரங்கள் செய்து, அவள் மனதுக்கு உவப்பாக நடந்துகொள்கிறவர்களே உத்தம குமாரர்களாம். தாய் எவ்வளவு கோபிப்பினும் அந்த அம்மை ஆசையுடன் தரும் ஒரு சிறு பக்ஷணத்திலுள்ள அன்பின் சுவைக்கு முன்பு எல்லாக் கோபமும் வருத்தமும் பறந்துபோம். அந்தப் பக்ஷணத்தின் சுவைக்கு ஈடு, நிகர் இவ்வுலகிலுண்டோ?

இனி, தாயிடம் உறங்குவதில் அதிக இன்பமா? — மனைவியிடம் உறங்குவதில் அதிக இன்பமா என்பது கேள்வி? தாய்ப் பாசமும் உலகப் பற்றுதலைச் சேர்ந்ததேயாயினும், மனைவியைவிட அதிகமென்றே சொல்லலாம். எவ்வளவு துற்குணமுள்ளவனாயினும் தன் தாயின் பக்கம் சயனிக்கையில் சிறு குழந்தையைப் போல் கபடற்ற நற்குணமும் அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. தனது பால்யகாலத்து நிஷ்களங்கமான ஹிருதயமும் பழைய அன்பும் அச்சமயம் தோன்றிக் கொள்கின்றது. தாயின் பக்கத்தில் படுத்துறங்கும் சுகமே சுகம். அதுவே பேரின்பம். மற்றது சிற்றின்பமாம். தன் புதல்வன் தன்னருகில் படுப்பது தாய்க்கு எவ்வளவோ ஸந்தோஷம். அருகில் படுக்கும் குமாரனுக்கும் உற்சாகமே. எவ்வளவு வயது ஆனவனாயினும் அவன் தன் தாயின் அருகில் ஒரு குழந்தைக்குச் சமமே. தன் விஷயமாய் எவ்வளவு துரோகம் செய்திருப்பினும் தன்னருகில் வந்த (பெரிய) குழந்தையைத் தள்ளத் துணியாள். இதுமேல் உபசாரமல்ல; அவனை உதறுவதற்கு அவள் உள்ளமே ஒப்பாது. மனைவியோ தன் கணவன் தன் மனதிற்கு இசைந்தவனாகவும், நற்குண நற்செய்கையுடைய உத்தமனாகவும், தன்னையும், தன் மக்களையும் தன் பந்துக்களையும் அன்புடன் போஷிப்பவனாகவும், அழகு, கல்வி, செல்வம் முதலியவற்றில் குறைவு இல்லாதவனாகவும் இருந்தால்தான் அதிகப் பிரியம் காட்டுவாள். தம் கொழுநனையே தெய்வமெனப் போற்றும் குலமாதர்கட்குத் தன் கணவனைக் குறித்த லக்ஷண விசேஷங்கள் ஏதும்

புருஷன்மீது உண்டான கோபத்தில் கிணற்றில் விழுந்து விடுகிறேன் என்று ஓடுகிறாள். தன்னை விழவொட்டாமல் தடுப்பதற்கு ஆள் இருக்கிறதென்பதில் தானே அத்தனை தைரியம்?

அநாவசியமாயினும், தித்திப்பு எவ்வளவு ருசிகரமானதா யிருந்தும் அதிசீக்கிரம் திகட்டிவிடுவதுபோல் அவர்களின் காதலும் சாமான்யமாகி விடுகின்றது. சில நிமிஷங்களுக்குமேல் அன்னோரின் மனம் ஒன்றுபட்டிராது. ஏதாவது தன் கணவன் மீது ஒரு அதிர்ப்தி கொள்ளவே வைக்கும். ஒருவருக்கொருவர் செய்த தப்பிதங்களைக் குறித்து மனஸ்தாபங்களும், கோள் குண்டுணி முதலியவற்றால் வெறுப்புகளுமாய் முடிவு பெறும். எவ்வளவு ஒப்பற்ற காதலனாயினும், க்ஷணச்சித்தம், க்ஷணப் பித்தம் என்பது போல் விருப்பும் வெறுப்பும் கலந்தே தோன்றுவதால், சிற்றின்ப வாழ்வுக்கு மனைவியின் காதலையும், அழியாத பேரின்ப வாழ்வுக்குத் தாய்ப்பாசத்தையும் ஒப்பிடலாம். ஆதலின் தாய் அருகில் படுத்துறங்கி எழுந்து வந்த (பெரிய-சிறிய) குழந்தையின் தேக திடமும், மனோதிடமும், உற்சாகமும் இனிமையும் மற்றெதற்கும் ஏற்படாது. எனினும், உலகத்தில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி இனிமை உண்டென்று முடிவு சொல்லலாம். இனி, தந்தையைப்பற்றி ஆராய்வோம். (தொடரும்.)

என்னவோ எண்ணி அதை எழுதப் புகுகையில் நினைத்தது மறந்து போய், பின் குழந்தை தொட்டிலில் உட்காரப்போக, அதைப் பார்த்ததும் "தொட்டிலாசை விட்டதாக இல்லை" என்பதையே முதலில் நினைத்ததாகத் தெரிந்தது. உடனே தொட்டிலாசை என்பதற்கு இளமைப் பழக்கம் என்றும் தொட்டிற் பழக்கம் வயதான பிறகும் விடுவதில்லை என்றும் ஒரு வியாசம் எழுத உதவியாய் முடிந்தது.

பீரோவ்.

ஒரு பெரிய பீரோவ் வைத்திருப்பதானது வீட்டில் ஒரு அறையை வைத்திருப்பதற்குச் சமமாகும். படுக்க மட்டும் முடியாதே தவிர, ஒரு கொட்டடியில் வைப்பதைவிட அதிகப்பாதுகாப்பாய்ப்பீரோவில் வைத்துவிட்டு விசாரமற்றிருக்கலாம். ஒரு அறைக்குள் பலர் அடிக்கடி வரப்போக இருக்கக்கூடும். பீரோவுக்கோ அதன் சாவி ஒருவரிடமே எப்போதும் இருக்கும். ஒருவரின் கையே அதில் புழங்கும்.

புத்தி கெட்டு மகா கோபக்காரன் போல ஊரைவிட்டு ஓடினதில் குறையில்லை. ஆனால், கதியின்றித் திரும்பிவந்தவுடன் பேசும் சாமர்த்தியப் பேச்சோ எவ்வளவோ கெட்டிக்காரத்தனமும் அறிவும் கலந்ததாகவே இருக்கிறது!

Letter XIII

From a Gentleman, an Officer in the army, to his son at a Boarding-School, recommending Diligence in his studies.

Dear John,

Our regiment is now at Ports mouth, and we are ordered to embark for Portugal. I thought to have called on you at school, but our orders to march were so sudden, that I had no time to spare from the necessary duties of my station. Let me beg, my dear, that you will attend wit hthe utmost assiduity to your studies.

Youth is the preper time for acquiring knowledge, which, if properly improved, and reduced to practice, will be of the utmost service to you in your future life, you are yet unacquainted with the world, and happy will it be for you, if you remain ignorant of the toils and dangers of a military life. Let me, therefore, entreat you in the most earnest manner, to think of some employment which will procure

13-ம் கடிதம்.

படையில் ஆபீஸராயிருந்த ஒரு கனவான் ஒரு பள்ளிக்கூடத்தில் விட்டிருந்த தன் குமாரன் கருத்துடன் படிக்கும்படி அவனுக்கு எழுதியது.

அன்புள்ள ஜான் !

எங்கள் படைக்கலம் இப்பொழுது போர்ட்டுசுமவுதிலிருக்க, போர்த்துநாட்டிற்குப் போகும்படி எங்களுக்கு உத்தரவு ஆகியிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் உன்னிடத்திற்கு வர நினைத்தேன். ஆனால் பிரயாணப்பட திடீரென்று எங்களுக்கு உத்தரவு வந்தபடியால் என் உத்தியோகத்துக்குரிய அவசியமான வேலைகளை விட்டொழிய சமயம் இல்லாமையைப் பற்றி, அன்புள்ள குமாரா ! நீ மிகுந்த கருத்துடன் படிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

கல்வியைத்தேடப்பாலியமேநல்ல காலமாம். அதை நீ நன்றாகப் பயிற்சி செய்து அதன்படி நடந்தால் பிற்காலம் உனக்கு அது மிகவும் உதவியாயிருக்கும். லௌகிகம் இன்னம் உனக்குத் தெரியாது. படை சேவகத்திலுள்ள உழைப்புகளையும் பொல்லாங்குகளையும் நீ அறியாமலே இருந்தால் உனக்கு அது பாக்கியமாயிருக்கும். ஆகையால் யோக்கியமான ஒரு ஜீவனம் உனக்குக் கிடைக்கச் செய்து உலகத்தில் ஒருவரை யடுத்துப் பிழைக்கப்பண்ணாத தொழில் ஒன்றை நீ யோசிக்குப்படி உன்னை மிகவும் வருந்திக்கேட்டுக்கொள்கிறேன். உன்

ஆத்திர புத்தியானது தன் நிலைமையை மறக்கவைத்து விடுகிறது. எஜமானன் இருக்கிறானே என்பதும் மறந்துபோய்விடுகிறது. எஜமான் கோபித்துக் கொண்டபின்புதான் தன் ஆத்திரத்தின் கெடுதியை உணருகிறான்,

you a decent subsistence, and unable you to live independently in the world. I have left an order with our agent to pay for your education; and although my pay is small, yet nothing on my part shall be wanting to make your life as easy as possible. As it will be some days before we sail, I shall expect to have a letter from you, and if to late, it will be sent after me. In the mean time.

I am your affectionate father

D. Wilson.

படிப்பின் சம்பளத்துக்கு ஒரு உண்டி நம்முடைய குமஸ்தா இடத்தில் கொடுத்திருக்கிறேன். எனக்கு வரும் சம்பளம் கொஞ்சமானாலும் கூடியமட்டும் உனக்கு வருத்தம் தோன்றாதிருக்க நான் ஒரு குறைவும் பண்ணேன். நாங்கள் பிரயாணப்பட இன்னும் சில நாட்கள் இருக்கிறபடியால் நீ ஒரு கடிதம் எழுதுவாயென்று எதிர்பார்க்கிறேன். அதற்கு முந்தி நான் புறப்பட்டுவிட்டாலும் பின்னால் எனக்கு அது வந்துசேரும்.

இங்ஙனம்

அன்புள்ள உன் தந்தையாகிய

டி. வில்ஸன்.

இது எனது சுபாவம்.

முதலில் ஒருவரிடம் பகைமை பாராட்டுவதாவது, வம்புக்குச் செல்லுவதாவது, அனாவசியமாய் ஒருவரைப்பற்றி உறுமிக் கர்ஜிப்பதாவது என்னுடைய சுபாவமன்று. ஆனால்,— "அவர்கள் பகைமை பாராட்டுகிறார்கள்",— என்று சிறிது குறிப்பினால் அறிந்துகொண்டாலும், அதனை மறவாது அதிகமான பகைமை அவர்களிடம் பாராட்டுவதும், அவர்கள் வலிய வம்புக்கு வந்தால், இலகுவிலே விடாமல் அவர்களோடு வம்பு செய்வதும் என் இயற்கைக் குணங்களாயிருக்கின்றன. நான் ஒருவனை மதித்து அழைத்து அவன் என் வீட்டின் விசேஷத்துக்கு வராவிட்டால், அவனைச் சேர்ந்த வகையாரின் விசேஷத்துக்கு என்னைக் கூப்பிடும் போது, நான் அதற்கு மறுத்துவிட்டு மீசை முறுக்குவதும் என் இயற்கைக் குணங்களில ஒன்றாகும். என்னை எதிர்ப்பவரை நான் மன்னிப்பதென்பதும், மறப்பதென்பதும் என்னால் சுலபத்தில் முடியாத வெகு கஷ்டமான காரியம்.

(நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.)

சிறுமணித்திரள்

72-ம் பக்கத் தொடர்ச்சி.)

413. கையில் ஒரு காசு இல்லா விடினும் தமது உயிர் நிலையான வீட்டை விற்க மனமின்றித் தரித்திரத்தி லேயே சாகிறார்கள். அவர்களுக்குப் பின் வருவோர் ஒரு நிமிஷத்தில் வீட்டைவிற்றுக் கை நிறையப் பணம் பெறுகின்றனர்.

114. "ஒரு எதிரி கைது செய்யப் பட்டால், அவர் தமது வக்கீலைக்கண்டு பேசுவதில் எவ்வித நிர்ப்பந்தமும் இருக்கக்கூடாதென்று பிரிவுகௌன்சில் கண்டிப்பாகக் கூறியிருக்கிறது."

—பம்பாய் ஹைகோர்ட்—30-6-26.

115. "தீய சிந்தனைகளுக்கும் துரெண்ணங்களுக்கும் நாம் இடம் கொடுத்துவிடுவதாயிருந்தால், நம்மை மனிதர்களென்று சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை. பிறப்பில் மனிதராயிருந்தாலும் குணத்திலும் மிருகங்கள்தான்."

—மகாத்மா.

116. "மனிதனுடைய ஸ்வபாவம் ஹிம்ஸை செய்வதல்ல. ஆத்மஞானம் அடைய விரும்புகிறவன் அஹிம்ஸையைத் தவிர, வேறெதையும் நினைக்க முடியாது. காமக்குரோதிகளுக்கு வசப்படாதவனே, முடிவாகத் தன் லக்ஷ்யத்தை யடைவான். அஹிம்ஸைதான் உண்மையான வீரத்தனம்; அது பயங்கொள்ளிகள் கையாடக் கூடியதன்று."

—மகாத்மா.

417. "நம் தாய்ப்பாஷையை விருத்தி செய்யவேண்டும். எப்பொழுது ஒரு தேச பாஷை விருத்தியடைகிறதோ அப்பொழுது தான் அந்தத் தேசத்தின் முன்னேற்றம் தெரியும்."

—ஸ்ரீ. ஏ. சிதம்பர நாடார், M.L.C.

418. "இப்பொழுது கடைஜாதியாராய் எண்ணப்படுகிறவர்கள் தங்கள் நிலைமையை யறிந்து முன்னேற்றத்துக்குரிய முறைகளைக் கையாடினால் முதற்ஜாதியாராவார்கள்."

—ஸ்ரீ. ஏ. சிதம்பர நாடார் M. L. C.

419. "ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்ட எந்தப் பிராணியையும் பலி கொடுப்பதை நான் ஆதரிக்கவில்லை. ஒரு பாவமும் செய்யாத பிராணிகளைப் பலிகொடுப்பது நிறுத்தப்படவேண்டும்." —பண்டித மாளவியா.

420. "டில்லியில் 1886-ம் வருஷம் வரையில் மசூதிகள் முன்னும், ஜும்மா மசூதிமுன்னுங்கூட மேளம் வாசிப்பது வழக்கம்."

—பண்டித மாளவியா.

421. "பிரார்த்தனை ஸ்தலத்தை யழிப்பது எந்த வகுப்பைச் சேர்ந்தவருக்கும் வெற்றியாகாது."

—பண்டித மாளவியா.

422. ருஷியாவில் விவாக ரத்து ஆனால்கூட, குழந்தைகளுக்கும் தாயாருக்கும் ஜீவனாம்சச் செலவு புருஷன் கொடுக்கவேண்டும். இல்லாவிடில் விவாக ரத்து அனுமதிக்கப்படுவதில்லை.

423. விவேகத்தைவிட மேலான குருவை நீ காணமுடியாது. எது

அதிகமான கடனுள்ளவன் ஒரு முறை ஜெயிலுக்குப்போய் வந்துவிட்டால் எல்லா குளிரும் தீர்ந்து விடுமென்று நினைக்கின்றான். அவ்விதமே சென்றும் வந்துவிடுகிறான்.

ஸத்தியம் எது அஸத்தியம், எது சரி எது தப்பு, எது நல்லது எதுகெட்டது என்று பகுத் தறிந்துகொள்ளும் சக்திதான் விவேகம் எனப்படுவது. சித்தம் அல்லது மனதைவிட வேறு உத்தமமான சிஷ்யன் இல்லை. ஜீவன் அல்லது ஆத்மாவைவிட உத்தமமான நண்பர் அகப்படமாட்டார்.

424. "தியாகமும் உறுதியும் பொதுநல ஊக்கமும் வாய்ந்த ஒரு பெரிய சைன்னியமாகத் திருத்தொண்டர்கள் அகப்படுகிறவரையில் ஜனத்திரள்கள் முன்னேற்ற வழியில்லை."

—மகாத்மா.

425. உண்மையல்லாத ஒன்றைப் பலதடவை சொல்வதால் அது உண்மையாகிவிடாது.

426. எந்தக் கிராமத்திலும் எந்த வீட்டிலும் படிப்பில்லாதவர்கள் இருக்கக்கூடாதென்று 1869-ல் ஜப்பானியக் கவர்ண்மெண்டார் தீர்மானித்து அப்படியே நிறைவேற்றினர்."

—மாடர்ன் ரிவியூ.

151. "1867-ம் வருஷத்தில் ஒரு கைத்தொழில் கம்பெனியாவது ஜப்பானில் கிடையாது. ஆனால் அடுத்த 30-வருஷத்திற்குள் 4595-கம்பெனிகள் ஜப்பானில் ஏற்பட்டுவிட்டன."

—மர்டர்ன் ரிவ்யூ.

427. "நம் நாட்டில் 100-க்கு 90-பேருக்குக் கல்வியேயில்லை."

—மர்டர்ன் ரிவ்யூ.

428. "ஜப்பானியர் அநுபவவாதிகள், இந்தியருக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுவது ஒழுங்கான வாதமாகாது. சுமார் 70-வருஷங்களுக்கு முன் வரையில் ஜப்பானியர் ஒன்று மறியாதவர்களா யிருந்தார்கள்."

—மாடர்ன் ரிவ்யூ.

429. "சுதந்தர மில்லாத வாழ்வு மானக்கேடான வாழ்வு, அது மரணத்திற்கே சமானம்."

மாடர்ன் ரிவியூ.

430. "எவன் விடாமுயற்சியுடன் உழைக்கிருனே அவனே உயிர்வாழ்வான் என்பது ஆண்டவன் வாக்கு. எனக்கு அதில் பூர்ண நம்பிக்கையுண்டு. என்னுடைய பலஹீனம் காரணமாக நான் ஆயிரம் தடவை தவறிப்போகலாம். ஆனல் நம்பிக்கை இழக்கமாட்டேன். என்றைக்காவது ஒருநாள் பரிசுத்தனுக விளங்க முடியுமென்ற நம்பிக்கையுடன் வேலை செய்து வருவேன்."

—மகாத்மா.

431 "ஸங்கீதத்தைக் கேட்கும் போது நாம் மெய்மறந்து, பரவசப்பட்டுப்போகிருேம்; இரத்த ஓட்டம் மற்ற சமயங்களில் இருப்பதைவிட ஸங்கீதத்தைக் கேட்கும்போது ஒரு நிதானத்திற்கு வருகின்றது."

—டாக்டர் அக்னிஸ் ஸோவில்.

432. "நான் ஒரு முகம்மதியாக இருந்தாலும், பிராணி ஹிம்ஸையைச் ஸஹிப்பதேயில்லை. அதற்கெதிராகவே இருப்பேன்."

—மைசூர் திவான்.

433. சங்கமானது மனிதவாழ்வைப் பண்படுத்துவதற்கேற்ற தன்மையது. நாம் பல்லோருடனும் பயில்வதால் நம்மிடத்திலுள்ள பொருமை, தன்னலம், கோபம் ஆகிய இழிந்த குணங்களெல்லாம் நீங்கப்பெற்று விரிந்த உணர்ச்சி யுடையோராய் அருள் அன்பு ஆகிய உயர் குணங்கள் மருவப்பெறுவோம். இதனல் இன்பவாழ்வை யுடையோராகின்ருேம்.

—ஓர் பெண்மணி-"இந்துசாதனம்."

ஜீவனம் கெட்டுவிடுமே யென்ற காரணத்திற்காக ஒரு முட்டாள் எஜமானனின் எந்த வார்த்தைக்கும் ஆம் ஆம் என்று தலையசைத்து ஊங்கொட்ட வேண்டியிருக்கிறது.

434. "ஞானத்தைப் பெறவேண்டுமென்ற அவாவிற்குத்தான் எக்காலத்தும் அதிக கௌரவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஞானத்தை யடைவதே ஹிந்துக்களின் உன்னத லக்ஷ்யமாக மட்டுமன்றி, உலகத்திலுள்ள புராதன தேசத்தார்களுடைய லக்ஷியமாகவும் இருந்துவந்திருக்கிறது."

—ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்.

435, ரோமர்களும் கிரேக்கர்களும் ஞானத்தைப் பெறவேண்டிய அவசியத்தை நன்குணர்ந்தனர். ஐரோப்பிய கல்வி முறைகளுக்கெல்லாம் ரோமர்களே வழிகாட்டிகளாக இருந்திருக்கின்றனர்.

—ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்.

தன் மரத்தின் கனிகள் அதன் சொந்தக்காரனுக்கு சாதாரணமாகத் தோற்றும். அதில் ஒரு ஆவலான பார்வையில்லை. பிறருக்கோ ஆவலுடன் பறிக்க நினைவு. இப்படியே குழந்தையுள்ளோர் சாதாரணப்பட, குழந்தை யில்லாதவரோ அதை ஒரு அருமையாய் நோக்குகின்றனர். இவ்விதமே விவாகமில்லாதவன், ஒரு பெண்ணுடன் கூடி வாழும் மற்றொருவனை நோக்கி அது ஒரு பாக்கியமென்கிறான்.

436. "கல்வியானது நிர்மாண சக்தியைக் கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அது நமது வாழ்க்கைக்கு இணங்கியதாக இருக்கவேண்டும். தற்சமயம் நமக்குப் போதிக்கும் கல்வி நம்மை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய சாதனமாக இல்லாமல் நம்மைப் பின்னடையச் செய்வதற்குள்ள சாதனமாக இருக்கிறது."

—டாக்டர் தாகூர்

(தொடரும்)

சமமா—அன்று என்பது வினு? சித்தம் சம்மதித்தது சரி என்பது விடை. அவர்கள் எவ்வளவு தாழ்ந்தவர்கள்? அவர்களை யெல்லாம் உனக்குச் சமமாகச் சேர்த்து வைத்து நெருங்கலாமா? என்பது கேள்வி. மனது ஒப்பியது எதுவும் எனக்குச் சரி என்பது அதற்குப் பதில். நற்குணம் ஒன்றே என் குறிப்பு. மற்ற உயர்வு தாழ்வைக் கவனியேன்.

அன்புக்கு உட்படு. ஆனல் அதிகாரத்துக்கு உட்படாதே. ஆனல் அந்த சமயத்துக்கு எதிர்த்துக் கொள்ளாதே. பதிலுக்குப் பதில் தீங்கு செய்யாதே. மெதுவாக அதைப்பற்றி யோசித்து உன் எதிரி நாணும்படி நன்மை செய்துவிடு. நீயும் அவர்களை விட்டு விலகி விடு. அதுவே பெரிய சாமர்த்திய செய்கை.

பிரபஞ்ச நவீனங்கள்

1. தென் அமெரிகாவில் "ஹொாட்ஸின்"; என்று ஒரு அபூர்வ பக்ஷியுண்டு. கால்களுக்கு இருப்பது மாதிரி அவைகளுக்கு இறக்கைகளி லும் விரல்கள் நகங்களுண்டு. இதனால் இப்பக்ஷிகள் பறப்பதோடுங்கூட பூனை மாதிரி சுலபமாக மரங்கள் மேலும் அடிமேல் அடிவைத்து ஏறும்.

2. நமது தேசதில் சட்டசபை, முதலிய சபைகளுக்கு தேர்ந்தெடுப் பதற்கு வோட்டுக் கொடுக்கும் பொழுது எப்படியோ சில பெயர்கள் ஒருதரத்த்ற்குமேல் வோட் (Vote) கொடுத்துவிடுவது வழக்கமாயிருக்கி றது. மேற்கு இந்திஸ் தீவுகளிலும் போர்டோரிகோ என்னுமிடத்திலும் வோட் கொடுத்துவிட்டு வெளியில் வரும் ஒவ்வொருவரையும் புறங்கையி லாவது காதின் பின்பக்கத்திலாவது அம்பட்டனால் க்ஷவரம் செய்யப்பட் டுத்தான் வெளியில் அனுப்புவார்க ளாம். இதனால் க்ஷவரம் செய்யப்பட் டவர்கள் மறுபடியும் வோட் கொடுக் காமல் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப் படுவார்களாம்.

(3) கீவ் ஆப்பிரிக்காவில் மிருகங் கள் வளர்க்கும் ஆஸ்பத்திரியில் குதி ரைக்கும் ஸீப்ரா என்னும் வரிக் குதிரைக்கும் பிறந்த ஒரு ஜாதி மிரு கம் இருக்கிறது. அதற்கு ஸீப்ரும் (Zebrum) என்று பெயர். இது பதினறு கை உயரமாம். வேலைகள் செய்வதில் கோவேறிக் கழுதையை விட நன்றாய் உழைக்கிறதாம்.

4. பலஹீனத்தாலும் ஹிருதயம் சரியாய் வேலை செய்யாததாலும் ஒரு மனிதன் சோர்ந்து போய் மூர்ச் சித்துப் போகும்பொழுதும், ஆஸ்த்மா (Asthma) என்னும் வியாதியால் ஒரு மனிதன் அவஸ்தைப்படும்பொழுதும் "அட்ரினலின்" என்னும் திராவ கத்தை ஊசி நுனி வழியாய் தேகத் தினுள்ளே பிரயோகித்தால் ரத்தக் கிளர்ச்சி ஏற்பட்டு மனிதன் தெளி வடைகிறது வழக்கம். இந்த திராவ கத்தின் ஒரு பவுண்டு நிறை தயார் செய்ய ஐந்து லக்ஷம் மாடுகள் வேண்டியிருக்கிறதாம். இம்மாடுக ளின் வாயிலிருக்கும் ஒரு சிறிய கோளத்திலிருந்து அந்தப் பொருள் எடுக்கப்படுகிறதாம். இந்த வழியைக் கண்டுபிடித்தவர் டாகாமின் என்னும் பெயர்பெற்ற ஜப்பானிய வைத்திய ராம்.

5. இவ்வுலகிலுள்ள எல்லா ஜந் துக்களிலும் பெரியது க்ரீன்லண்ட் தேசத்துக் திமிங்கிலமாம். அதனு டைய நிறை சராசரி நூறு டன் அதா வது ஏறக்குறைய எண்பத்தி எட்டு யானைகளின் நிறைக்குச் சமானமாம். அத்திமிங்கிலத்தின் எலும்பின் நிறை மாத்திரம் மூவாயிரத்து நானூறு பவுண்டாம். இத்திமிங்கிலத்தி லிருந்து இறக்கப்படும் எண்ணெய் 75—டன் நிறையுள்ளதாம்

6. தித்திக்கும் ஆரஞ்சு பழத்தின் கிளையை மாதுளையின்கிளையுடன் ஒட் டிப் பயிரிட்டால் உண்டாகும் பழத்தி ற்கு ரத்த ஆரஞ்சு என்று பெயராம். அந்த பழத்தின் ரஸத்திற்கு மாதுளை முத்தின் சிவப்பு வர்ணம் ஏறியிருக்கி றதாம். தேகத்திற்கு மிகுந்த புஷ்டி யாம். ஜ்வரத்திற்குக் கைகண்ட ஔஷதமாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

நல்லவனென்று ஒருவனை ஒரு அயோக்கியன் புகழ்வதானது, ஒரு உத்தமனுடைய புகழ்ச்சியைவிட அதிகமாக எடுத்துக்காட்டும்.

இன்ப வாழ்வு

(86-ம் பக்கத் தொடர்ச்சி.)

எம்பெருமான் காந்தியடிகள் இன்ப வாழ்வு நடத்துவதற்கு வழிகாட்டியருளிய ருஷ்ய மகான் **டால்ஸ்டாய்** அவர்களின் பொன்னுரைகள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட்டுவிட்டு இக்கட்டுரையை முடிக்கிறேன்.—

“ஆண்டவன் எனக்கு வாழ்க்கை யென்னும் பேற்றை யருளினர். நான் அதைப் பாழ்படுத்திக்கொண்டேன். **கிறிஸ்துநாதர்** தம் கட்டளைகளில், என் வாழ்க்கையின் இன்பத்துக்குக் கேடு சூழவல்ல மாயப்பொறிகள் இன்னின்ன என்று அறிவுறுத்தியுள்ளார். - - -”

“வாழ்வின் நலத்தைக் குலைக்கும் முதலாவது பொறி என்று எனக்கு அறிவுறுத்தியிருப்பது சகோதர மனிதர்களிடம் கோபம் அதாவது பகைமையாகும். இதை நான் நம்புகிறபடியால் இனிமேல், மனமறிந்து வேறு யாரிடமும் துவேஷங்கொள்ளேன் கோப உணர்ச்சி தோன்றுவதாய் அறிகுறி காணப்பட்டதுமே, தவறு என்னுடையது என்று ஒப்புக்கொண்டு, மற்றவர்களிடம் சமரசத்தை நாடாதிருக்க இனி என்னல் முடியாது.”

“கோபம் என்பது இயற்கைக்கு மாருன நிலையென்றும், தீமை பயப்பதென்றும் அறிந்திருப்பதுபோலவே அக்கோபத்துக்குக் காரணமான நிலைமை யாதென்பதையும் அறிந்திருக்கிறேன். நான் மற்ற ஜனங்களிடமிருந்து தனிமையாகி, அவர்களில் சிலரைமட்டும் எனக்குச் சமானமானவர்களாயும்; மற்றவர்கள் எல்லாரையும் மூடர்கள், படியாதவர்கள், வெறும் பூஜ்யங்கள் என்றும் கருதுவதே அங்நிலைமையாகும். மற்றவர்களிடம் என்னுடைய பகைமைக்கு முதன்மையான காரணம் இதுவேயென உணர்கிறேன்.”

“முன்னெல்லாம் எனக்கு நன்மையென்றும், உயர்வென்றும் தோன்றிய கௌரவமும், கீர்த்தியும், கல்வியும், செல்வமும், நடை உடை உணவு முதலியனவும் இப்போது தீமையாகவும், இழிந்தவையாகவும் காணப்படுகின்றன. குடியானவனின் வாழ்க்கையும், வறுமையும், பெயர் புகழின்மையும், எளிய நடை உடை உணவுகளும் இப்போது நல்லவை யென்றும், உயர்ந்தவை யென்றும் எனக்குத் தோன்றுகின்றன.”

“இப்போது என் மனமறிந்து மற்றவர்களைவிட என்னை நான் உயர்வாகக் கருதுவதில்லை. அவ்வாறே என்னை மற்றவர்களினின்றும் பிரித்து, அவர்களைவிட என்னை வெளித்தோற்றத்தில் உயர்வாக்கும் எம்முயற்சியிலும் சம்பந்தப்பட மாட்டேன். எனக்கும் சரி, பிறருக்கும் சரி, பட்டம், பதவி, அந்தஸ்து இவற்றை நான் ஒப்புக்கொள்ளேன். பெயரையும் புகழையும் தேடேன். மற்றவர்களிடமிருந்து என்னைப் பிரிக்கக்கூடியதான கல்வியறிவையும் விரும்பேன். என்னைப் பிறரிடமிருந்து பிரித்த செல்வத்தினிடமிருந்து விடுதலைபெற முயல்வேன். என் உணவிலும், நடை உடை பாவனைகளிலும், வசிக்குமிடத்திலும், பொதுவாக வாழ்வு முறையிலும் மக்களில் பெரும்பான்மையோருடன்

என்னை ஒற்றுமைப்படுத்தக் கூடியன வற்றையே தேடுவேன்."

"என் வாழ்க்கையை நாசம் செய்யக்கூடிய மற்றொரு மாயப்பொறி காமம் என்று கிறிஸ்து பெருமான் எனக்குக் காட்டியிருக்கிறார். அதாவது நான் முதன்முதலில் சேர்ந்த பெண்ணை யல்லாது மற்றொருத்தியின்மீது ஆசைகொள்வதாம். கிறிஸ்துவின் இப்போதனையை நான் நம்புகிறபடியால் நான் இதற்கு முன் எண்ணியதுபோல் விபசார நோக்கத்தை மனிதனுடைய இயற்கையன்றோ, ஓர் உயரிய குணமென்றோ கருத முடியாது."

"என்னிடம் காம இச்சையை அதிகமாய் வளர்த்தது சுகபோகம் நிறைந்த சோம்பேறி வாழ்வேயாதலின், அவ்வாழ்வை இனி நான் விரும்பேன். அக்காமத்துக்கு நெய் ஊற்றி வளர்ப்பனவான நாவல்கள் கவிதைகள். சங்கீதம், நாடகம், களியாட்டம் முதலியவைகளைப் புறக்கணிப்பேன். இவற்றின் அபிவிருத்திக்கு எவ்வித உதவியும் செய்யேன். என் மனைவியை நான் கைவிடேன். அவளைக் கைவிடுதல் என்னையும், அவளையும், படுகுழியில் வீழ்த்தக்கூடிய முதன்மையான பொறி என்று அறிந்துள்ளேன். விவாகத்துக்கு தகுந்தவர்கள் விவாகம் செய்துகொள்ளாது தனிவாழ்க்கை நடத்துவதை நான் ஆதரியேன், கணவனையும் மனைவியையும் பிரிப்பதற்கு உடந்தையாயிரேன். வெளிப்படையான சடங்குடன் செய்யப்படும் விவாகத்துக்கும், சடங்கில்லாமல் மனமொத்துச் செய்யப்படும் மணத்துக்கும் நான் வேற்றுமை பாராட்டேன். ஒருவனும் ஒருத்தியும் முதன்முதல் செய்துகொள்ளும் மணம் சடங்குடன் கூடியதாயினும், சடங்கில்லர்ததாயினும் அதுவே நூய்மை பொருந்தியதென்று நான் நம்புகிறேன்."

நேற்றிரவு வெகு நேரம் விழித்து நீ வேலை செய்தாய், நானும் எட்டிப் பார்த்தேன் என்கிறான் எஜமானன். வேலையாளோ எஜமான் தன் வேலையைப் பார்த்தானா, அதற்கு மேல் தான் இரும்புப் பெட்டியை ரகசியமாய்த் திறந்ததைப் பார்த்தானா? திறந்ததற்குத் தான் இந்த ஜாடைப் பேச்சா என்று மிகவும் கலங்குகிறான். தப்பு நெஞ்சுக்கு அது தன்னில் தானே படும் வாதனையே பெரிய தண்டனை யாகும்.

கிறிஸ்துநாதரின் அறமொழி.—

"நன்மைக்காக உயிர்வாழ்; ஆனால் நன்மைபோல் தோன்றி உன்னைத் தீமைப் படுகுழியில் வீழ்த்தக்கூடிய மாயவலைகளிடத்து எச்சரிக்கையாயிரு. உன்னுடைய க்ஷேமம் நீ உன் சகோதர மனிதர்களிடம் ஒற்றுமையாயிருப்பதை பொறுத்திருக்கிறது மக்களின் ஒற்றுமைக்கு ஊறுசெய்யக்கூடியதெல்லாம் தீமைளாகும். உனக்களிக்கப் பட்டிருக்கும் நன்மையைப் பாழாக்கிக் கொள்ளாதே." இதுவே "இன்ப வாழ்வு."

"நான் ஒரு மானுடன், நான்
மதியாதன
மானுட வாழ்வில் இலை."

பெ. இராமநுஜ ரெட்டியார்.

சென்றுபோன நாட்கள்

(51-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான் ஏ. சங்கரலிங்கம் பிள்ளை பி. ஏ.

ஸ்ரீமான் சங்கரலிங்கம் பிள்ளை பி.ஏ. தமிழில் பெரிய புலவர். மிக்க எளிய நடையில் வெகு தெளிவாகவும் விரிவாகவும் வரைந்து சிறு குழந்தைகளுங் கூட ராஜீய விஷயங்களை நன்கு தெரியும்படி எடுத்துக் காட்டவல்லவர். சென்னையில் "மதராஸ் ஸ்டாண்டர்டு" என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகையில் இவர் உதவி ஆசிரியராக இருந்துவந்தார். அதன் ஆதரவிலே "சுதேசி" என்ற வாரம் இருமுறைத் தமிழ்ப் பத்திரிகையொன்றை ஆரம்பம் செய்தார். அதைப்போன்ற சிறந்த வாரம் இருமுறைப் பத்திரிகை தமிழில் வேறு எதுவும் இல்லை. தமிழ்ப்பண்டிதர்களும் பெரியோர்களும் அதற்கு ஏராளமாக விஷயதானம் செய்து மேன்மைப்படுத்தினர். பத்திராசிரியரின் திறமை யாவராலும் வியந்து போற்றப்பட்டது. பின்னர் மேற்சொன்ன ஆங்கிலப் பத்திரிகையின் ஆதரவிலிருந்தும் விலகி ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளைக்கே "சுதேசி" சொந்தமாயிற்று. பத்திரிகைக்கென்று அச்சுக்கூடமும் ஏற்பட்டது. இவ்வளவு விமரிசையின் மத்தியிலே சந்தாதாரர்களிடமிருந்து சரிவரப் பணம் வராத காரணத்தால் நஷ்டத்திற்காளாகிப் பத்திரிகையை விற்றுவிடும்படியான துரதிஷ்டம் வாய்த்தது.

பத்திரிகையின் ஆசிரியர் மாறவே பத்திரிகையின் அழகும் பாதி குறைந்துபோய், பின் வரவரச் சுருங்கிக் கடைசியில் பத்திரிகையே நின்று போயிற்று. மூன்று வருஷங்கள் வரையில் நடந்ததென்று சொல்லலாம். பத்திரிகையை எந்த ஆசிரியர் முதன் முதலில் தொடங்குகின்றாரோ அவர் இருக்கும் வரையில் அந்தப் பத்திரிகைக்குச் சிறப்பும் விருத்தியும் எல்லா மேன்மையும் அமையும். ஆசிரியர் மாறியதற்குப் பிறகு அப்படி அப்படித்தான்.

ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளைக்கு வந்த பத்திரிகா அதிர்ஷ்டம் மாறிய பின்பு அவர், "சுதேசமித்திர"னில் உதவி ஆசிரியராய் அமர்ந்தார். அங்கும் சிலகாலம் விலகுவதும் மீண்டும் அமர்வதுமாகவே இருந்தார். அவரால் எழுதப்பட்ட விஷயங்கள் மிக்க அர்த்தபுஷ்டியுள்ளனவாக இருக்கும். சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் ஸ்தானத்திலிருந்து விலகிய பிறகு கடைசி வரையில் "ஹிந்து" பத்திரிகையின் உதவி ஆசிரியராய் இருந்து தமது வாணாளைக் கழித்தார். "கன்னிகையின் முத்தம்" என்ற நாவலின் முதல் இரண்டு பாகங்களை ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழிபெயர்த்துவிட்டுக் காலமானார். (இவருக்குப் பின்பு அந்த நாவலின் அடுத்த மூன்று நான்கு பாகங்களை மொழி பெயர்த்த

ஒரு தாய் தன் குமாரனை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டுவாள். ஆனால், மற்றவர்கள் அவனைத் திட்டத் தான் பார்த்துச் சகிக்கமாட்டாள்.

ஸ்ரீமான் நாகை வி. கோபால கிருஷ்ண பிள்ளையும் அது வெளி வந்த மறு வருடம் காலமானுர். ஒரு நாவலை மொழிபெயர்த்த இரு ஆசிரி யர்களும் திடீரென்று முடிந்து போனது ஒரு விசித்திரந்தான்.)

***

ஆங்கிலத்திலும் தமிழிலும் மகா மேதாவிகளான ஸ்ரீ குருமலை சுந்தரம் பிள்ளையும், ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளை யும் பத்திராசிரியர் தொழிலில் எத் துணையோ திறமை வாய்ந்தவர்களா யிருந்தும், சொந்தத்தில் ஒரு பத்திரி கையை வெகு காலம் நடத்திப் பூரிப் பதற்குப் பிராப்தமில்லாதவர்களாய்ப் போயினர். இவ்விருவரும் நடத்திய பத்திரிகைகள் எவ்வளவோ உயர்ந்த வைகள். சொற்ப சந்தா கொண்ட வைகள். அவ்விதமிருந்தும் பொது ஜன ஆதரவைப் பெருமலே அவை கள் மறைய நேர்ந்தமை எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியம்! இவ்விருவ ரையும் தமிழ் நாட்டினர் ஆதரித்துப் போற்றி யிருக்கக்கூடாதா? பழங் காலத்தில் தோன்றி மறைந்த தமிழ்ப் பத்திரிகையின் அழகு, சுவைநயம் வேறு. இக்காலத்துப் பத்திரிகைகளின் அழகும் தன்மை யும் வேறு. பழயதின் மகிமை யைப்புதியது பெறுவது கஷ்டம்.

ஒப்புக்குச் செய்த உபகாரம், சும்மா சும்மா மேலுக்குச் சொன்ன பேச்சு, எதிலும் பட் டுக்கொள்ளாத ஜாடை, தன் காரியத்தை மட்டும் நினைக்கிற சங்கதி, ஒதுங்குதலான ஓரப் பார்வை, கண்டுங் காணுத தன் மை, எதற்கும் முதலில் இல்லை என்னுதுதலையைஆட்டல், வியா பார நட்பு, சலிப்பு நெஞ்சம்— இவைகள்தான் வெளிக்கு வெகு சுளுவில் தெரிந்து போகிறது!

மேற்குறித்த இரு ஆசிரியர் களையும் ஒரு வியாசத்தில் குறிப் பிட்டுச் சொல்லியது எதற் கெனில், இருவருடைய அதிர்ஷ் டமும் ஒன்ருக இருந்ததை நோக் கித்தான். இருவரும் தங்களின் பெரிய ஆவல்களினின்றும் ஏமா றியவர்களேயாவர். "அழகி ருந்தென்ன? அதிர்ஷ்டமிருக்க வேணும்" என்ற பழமொழி யும் இவர்களின் விஷயத்தில் சரிதான் போலிருக்கிறது! பரி தாபம்!!

எதற்காகப் பணியவேண்டும்?

தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்திடும் அடிமையல்லேன். அக்கிரமத்திற்குப் பணியேன், அதர்மத்திற்குப் பணியேன், பிறர் என் ஏழ்மை நோக்கி இழிவுபடுத்துதலுக்கும் இடந் தரேன். பிறரையோ என்னையோ தூஷிக்கவும் ஒப்பேன். சுதந்திர நினைவுடன் முயற்சியுடையோன் பணிவதும் ஏது?

இந்த அல்ப உதவி செய்ய நேரமில்லையா ?

தூர தேசத்தில் தன் ஜீவனார்த்த நிமித்தம் தாமதிக்கும் ஒருவன் அங்கே தனது காரியங்களைச் செம்மையாயும் கவலையற்றும் மனோநிம்மதியுடனும் நடத்திவிட்டு ஊர் புறப்படுவதற்கு, அவனுக்குத் தனது சொந்த வீட்டின் கடிதங்கள் தாராளமாய் வந்துகொண்டிருக்கவேண்டும். தன் வீட்டிலிருந்து வரும் ஒவ்வொரு அல்ப கடிதத்தையுங்கூட அவன் தங்கத் தகடாக நினைத்து வெகு கருத்துடன் பெறுகிறான். மிக்க கவலையுடனும் நியாயாதிபதியின் தீர்ப்பைக் கேட்பதுபோலும் அக்கடிதத்தை வாசிக்கிறான். அக்கடிதத்தின் எழுத்து வாசகங்களுக்குத் தக்கபடி அவனது தைரியமும் சுறுசுறுப்பும் இருக்கும். அவன் தூர நாட்டில் உழைத்துத் தேடிக் கொண்டு வந்த பிறகு அவனுடன் இருந்து ஒருமிக்க உண்டு சந்தோஷப்படக்கூடிய அவன் வீட்டாரும், அவ்வீட்டில் இருக்கும் முக்கியஸ்தர்களும் அவனுக்கு இந்த ஸமயம் செய்யும் உதவியெல்லாம் தவறாத கடிதங்களைத் தொடர்ந்து அனுப்பி க்ஷேமத்தைத் தெரிவித்துக்கொண்டிருப்பதுதான். இது அவர்களுக்கு ஒரு தலைச்சுமையான வேலையல்ல. ஒரு கஷ்டகாரமான காரியமுமல்ல. மிக்க ஸாமான்யமான சுலப சங்கதிதான். விஷயம் இப்படி மிகச் சிறியதாயிருந்தாலும், தூரதேசத்தில் உள்ளவனுக்கு அது பரம சகாயமாகவும், அவன் நெஞ்சுக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கக்கூடியதாயும், ஒரு சஞ்சீவி போலவும் இருக்கிறது. இந்த சொற்ப ஸகாயத்தைக்கூடச் செய்ய அக்கரைப் படாதவர்களைப்பற்றியும், தூர நாட்டிலிருப்பவனின் கவலை மனத்தைப்பற்றிச் சற்றும் எண்ணாமல் சிரத்தை கெட்டிருப்பவர்களைப் பற்றியும் அத்தூரதேசவாசி என்னென்று நொந்துகொள்வதோ ? தன் தலைவிதி என்றேதான் மனம் புண்ணாக நேருகிறது. இவ்வளவு எழுதிய பிறகேனும் இந்த வார்த்தைகளால் ஏதேனும் பயனுண்டாமா ? இவ்வித பராமுகர்கள் இனியேனும் தங்களின் பிழையை உணர்ந்துகொண்டு. ஊருக்குச் சென்றுள்ளவனுக்கு அவன் மனது கவலையற்றிருக்கும்படியாக உடனுக்குடன் கடிதங்கள் எழுதி உபகரிக்கட்டும்.

பணிவதும் ஏது ?

பணிவதே யில்லை யென்ற உறுதி மிக்காரைக் கைதூக்கி விட அதோ இறைவன் வெற்றிமாலை புனைவித்து வாழ்த்தக் காத்துள்ளான். பணிந்திடாத வாழ்வே அவர்க்குப் பிரீதி. பிறர் தன்னைப் பணிதலன்றித் தான் பிறர்க்குப் பணிந்திடாத வாழ்வையவர் பாலிப்பார். அலக்ஷியம் செய்து ஒதுக்கியவரின் முன்பு தலைவணங்காச் சுதந்திரம் போற்றினோர் சுதந்திரமே பெறுவார். இது தெரிந்துகொண்டுள்ள நான் பணிவதும் ஏது ?

நமது கடை

இன்று கூடிய நமது கடையில் பத்திராசிரியர்களைப்பற்றி ஒரு தர்க்கம் எழுந்தது. மானேஜர் பெரியவரா, பத்திராசிரியர் பெரியவரா என்று அப்துல் ரஹீம் கேட்டார். உடனே உலக்கைச் செட்டியார் "வீட்டுக் குமாஸ்தா பெரியவரா, வீட்டு மனைவி பெரியவரா" என்று இன்னொரு போடு போட்டார். இருவருக்கும் சமாதானம் சொல்ல தொந்திப்பிள்ளை எழுந்தார். "மானேஜர் போய்விட்டாலும் பத்திரிகை நடக்கும். வேறொரு மானேஜரை வைத்துக் கொள்ளலாம். ஆனால் பத்திராசிரியர் பரலோகம் போய்விட்டாலும், அல்லது பத்திரிகையை ஸ்தாபித்து உயிர் கொடுத்த முதல் பத்திராசிரியரை நீக்கி, வேறொரு பத்திராசிரியரை நியமித்தாலும் பத்திரிகையின் நடை, அழகு, சீர், ஒழுங்கு யாவும் கெட்டுத் தாறுமாறாகும்" என்றார்.

***

தாண்டவத்தேவர் "பத்திரிகையை முதன்முதலில் ஸ்தாபித்த முதல் பத்திராசிரியரை முதல் மனைவிக்கும், சொந்தத் தாய்க்கும் சமமாகச் சொல்லலாம். அதற்குப்பிறகு வருகிற பத்திராசிரியரை இரண்டாவது மனைவிக்கும், மாற்றாந்தாய்க்கும் சமமாகச் சொல்லலாம்" என்றார். இதற்குக் குறுக்கே அல்லாபிச்சை புகுந்து, "இரண்டாவது மனைவியும், மாற்றாந்தாயும் வந்து குடித்தனம் நடக்கவில்லையோ, முதல் பத்திராசிரியர் போய் எத்தனையோ பத்திரிகைகள் வேறு பத்திராசிரியரைக் கொண்டு நடக்கவில்லையோ" என்றார். அதற்கு உலக்கைச் செட்டியார் "முதல் மனைவி ஏதுமில்லாதிருந்த ஒருவனுக்கு ஒரு இல்லற வாழ்க்கையையும் ஒரு புதுக் குடித்தனத்தையும் உண்டாக்கி முதல் முதல் புது ருசி, தித்திப்பு காட்டியவள். அவள் போக்கும் நடையும் எல்லோருக்கும் பிடித்துப் போயிருக்கும். பிறகு வருகிற இரண்டாவது மனைவியோ முன்னவளுக்கு முற்றிலும் எதிரிடை! அவள் குணமும் செயல்களுமே வேறு விதமாக இருக்கும். அது பலருக்குப் பிடிக்காமலும் போகலாம். அப்படியே சொந்தத் தாய் பாடுபட்ட அருமை போல் மாற்றாந்தாய் பாடுபடாள். பட்டாலும் அது முன்னையசிறப்பு தராது. அப்படிப் போலவேதான் முதல் பத்திராசிரியரே ஜனங்களுக்குப் பிடித்துப்போயிருக்கலாம். அவருக்கு அடுத்துவரும் பத்திராசிரியருக்கு முதல் பத்திராசிரியரின் நடை, எழுத்து, விஷயத்தை அமைக்கும் முறை ஒன்றுமே பொருந்தாதானதால் பத்திரிகையே வேறு புது விதமாய் மாறிக் கெட்டுவிடலாம்; முந்தியது முந்தியதுதான், பிந்தியது பிந்தியது தான்" என்றார்.

***

அதற்கு அப்துல் ரஹீம் "முதல் பத்திராசிரியரான ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் காலமாகியும், "சுதேசமித்திரன்" நடக்கவில்லை

பொடி, குடி இவை தான் போட்டும் குடித்தும் அதிக செலவாகிவிடுவதில்லை, மற்றவர்கட்குப் பங்கிடுவதில்தான் அதிக சரக்கும் பணமும் தீர்ந்து விடுகிறது.

யோ என்றார். அதற்குத் தாண்டவத்தேவர்—"அதில் தானே "சுதேசமித்திரன்" சாமர்த்தியம் பிரகாசிக்கிறது; முதல் பத்திராசிரியர் எப்படி யெப்படிப் பத்திரிகையை அமைத்திருந்தாரோ அதே முறையில் அப்பத்திரிகை நடந்து வருவதால்தான் அது பேதப்படாமல் ஒரே சீரில் இருக்கிறது. பின்னும் தினசரிப் பத்திரிகைக்கு அதன் பத்திராசிரியரே முற்றிலும் எழுதிக் கொள்ள முடியாது. பல துணை ஆசிரியர்களும் இருந்து வேலை செய்வதால், பத்திரிகையின் நடை யுருவம் பலதிறப்பட்டு நின்று, கடைசியில் பத்திரிகையின் கொள்கை மட்டும் பத்திராசிரியரின் கொள்கையாய் அமைந்து தொனிக்கும். ஆகவே, தினசரிப்பத்திரிகையின் ஆசிரியர் மாறினாலும் அது நடந்து வரும். அப்படிமாறியதில் அதிகமாகப் பேதம் ஏற்பட்டுவிடாது. ஆனால் வாரப்பத்திரிகைக்கும் மாதப்பத்திரிகைக்கும் மட்டுமே ஆபத்து உண்டு" என்றார்.

***

தினசரிப்பத்திரிகைக்கு இல்லாத ஆபத்து வார—மாத—பத்திரிகைக்குமட்டும் என்ன வந்து விட்டது என்று அப்துல் ரஹீம் கேட்டார். அதற்குப் பதில் சொல்ல தொந்திப் பிள்ளை எழுந்தார்.—பத்திரிகைகள் நடை பெறுவது இரண்டு விதம்; பத்திராசிரியர் ஏதோ நாலு பக்கம் எழுதிவிட்டு, பாக்கிப் பக்கங்களுக்கு மற்ற நிருபர்கள் எழுதியனுப்பும் விஷயங்களைக்கொண்டு நிரப்பிச் சரிசெய்துவிடுபவரா யிருந்தால், அப்படிப் பட்ட பத்திரிகை அதன் பத்திராசிரியர் போனபிறகும் நடந்துவரும். அவர் எழுதிவந்த நான்கு பக்கங்களை வேறெவராவது எழுதிச் சரிசெய்துவிடலாம். வழக்கப்படி நிருபர்களும் சங்கதிகளை யனுப்பி வருவார்கள். அவற்றைப் பத்திரிகை முழுதுக்கும் வாரிக் கொட்டிப் பத்திரிகையைப் பூர்த்திசெய்து வெளியிட்டுவிடலாம். ஆகவே, பத்திராசிரியர் போனபிறகுங்கூடப் பத்திரிகையில் அதிக பேதம் ஏற்படமாட்டாது. இது ஒரு தினுசு. இன்னொன்றாவது:- ஒரு பத்திராசிரியர் ஒரு பத்தரிகையை ஸ்தாபித்து, தாமே மெய்வருந்த உழைத்து இரவு பகலாய் யோசித்து எழுதிப் பத்திரிகையின் முழுமைக்குமே தாம் வரைந்த விஷயங்களே வந்து நிரம்பும்படி செய்து, தமது நடையே பத்திரிகையில் பிரதான நாயகமாய் விளங்கும்படி புரிந்து இவ்விதம் மனப்பூர்வமாய் உழைத்துப் பாடுபடுகிறார். அப்படிப்பட்ட பத்திராசிரியர் காலமாய்விட்டாலும் விலகிவிட்டாலும் பத்திரிகைக்குப் பெரிய ஆபத்துதான். பத்திரிகையின் முழுதிலும் இருந்து வந்த அவரது நடையும், அதன் தொனியும் அமைப்பும் எல்லாமுமே மாறிக் கெட்டுவிடலாம். பிறகு அது அத்தனை ருசிக்காது. இதுதான் பத்திரிகை நடைபெறுவதில் இருக்கிற இரண்டு பேதங்கள்" என்றார்.

***

உண்மையாய் இரவு பகல் உழைக்கும் பத்திராசிரியர் போனபின்பு அவ்விதம் நடத்த முடியாமல் நின்றுவிட்ட பத்திரிகைகள் எவை எவையென்று அப்துல் ரகீம் கேட்டார். அதற்குத் தாண்டவத்தேவர், ஜநவிநோதினி, பஞ்சாமிர்தம், திராவிடாபிமானி போன்ற எவ்வளவோ பத்திரிகைகள் உண்மையில் உழைத்த அதன் முதல் பத்திராசிரியர்கள் போனதுடன் நின்றுவிட நேர்ந்து விட்டது. ஸ்ரீமான் கலியாணசுந்தர

தன்னை ரகசியத்தில் கற்பழித்தவனை, கற்பழிக்கப்பட்ட பெண் தனது விவாகத்திற்குப் பிறகு விரும்புகிறதில்லை என்கிறார் ஒரு கவி.

முதலியாரின் நடை அவரோடு முடிவு. தேசகவி ஸ்ரீ. வி. சுப்பிரமணிய பாரதியின் நடை அவருடன் மறைந்தது. ஸ்ரீ நாகை வி. கோபால கிருஷ்ணன், ஸ்ரீ வி. நடராஜ ஐயர், பண்டிதை விசாலாக்ஷியம்மாள் இவர்களின் நடை இவர்களோடு போய் விட்டது. மற்றொருவர் அதைக் கைக்கொள்ள முடிகிறதில்லை. மஹா விகடதூதன் பத்திரிகை நின்று போனதும், அதன் ஆசிரியர் எழுதுகிற நடையில் மற்றொருவர் எழுதி விகடங்களை அமைக்க முடியாததே காரணம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித நடை சொந்தம். அவரோடு அது முடிந்துவிடுகிறது. அதுபோலவே, தாமே உண்மையில் பத்திரிகையின் முழுதுக்கும் எழுதி உழைக்கும் முதல் பத்திராசிரியரின் அமைப்பு அவர் காலத்துக்குப் பிறகு வருகிறவர்கட்குப் பொருந்துகிறதில்லை" என்றார்.

நேரில் பேச முடியாமற் போனவைகளை யெல்லாம் நினைத்துச் சோர்ந்து கடிதங்கள்மூலம் தங்கள் அன்பையும், பிரிவின் மிகு வாதனையையும் வெளியிட்டுப் பதில் கடிதம் வேண்டுகின்றனர். அதைப் பெறும் அன்பரோ எல்லா அன்பையும் மனத்தில் கொண்டு நல்ல கடிதம் எழுத நல்ல பொழுது பார்க்கையில், அதற்குள்ள நாலு மாதமும் தாண்டிவிடும்படி அவரது வேலையின் கொடுமை செய்துவிடுகிறது.

***

இந்த சமயத்தில் புதுக்கோட்டை யரசர் காலமாகி விட்டாரென்று தந்தி வரவே, புதுக்கோட்டையிலுள்ள "நமதுகடை" யும் அரசரின் மரணத்திற்காகமரியாதார்த்தமாய் மூடப்பட்டது.

பொன்வண்டு செட்டியார்.

ஒரு கணத்திற் குறிப்பிடுவேன்.

இனிக்க இனிக்கக் கடிதம் எழுதி உள்ளுக்கு அன்பின் பசையே சற்று மில்லாதாரை உடனே கண்டுகொள்ளுவேன். அண்ணா அண்ணா என்று கடிதத்தில் அழைக்கும் ஆர்வச்சொல்லின் ஓட்டையை வெகு சுலபத்தில் தெரிந்து கொள்ளுவேன். தன் காரியத்திற்கே இத்தனை வணக்கமாகக் கடிதம் என்பதையும் அறியாமலிரேன். ஒப்பாரி உறவுக் கடிதங்களை ஒருபுறத்தே எறிந்திடுவேன். ஒருவரிடமிருந்து அதிகக் கடிதங்கள் வரின், அவர் காரியம் முடிந்ததும் இக்கடிதங்கள் சுருங்கிவிடுமென்பதையும் முன்னரே உணர்வேன். ஒரு கணக்கில் குறிப்பு அறிவேனாயினும், அதனை எக்காலத்தும் வெளியில் சொல்லுதல் மட்டுமில்லை.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADEMARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

எரிகிறதப்பா! எரிகிறது!!



எங்கே எரிகிறது? என்ன எரிகிறது?

கையைச் சுட்டுக்கொண்டு அதனுல் எரிகிறதா? வார்த்த கஞ்சி கையிற்பட்டு அதனுல் எரிகிறதா? நல்ல வாலிப காலத்திலேயே பார்வை தப்பிப் போய் அதற்கு மருந்திட்டுக்கொள்ள அதனுல் அந்தக் கண் எரிகிறதா? யௌவன சேஷ்டையில் மேகநோய் தேகத்தில் ஊறி அதனுல் எரிகிறதா? வைசூரி அம்மையால் கொப்புளங்களில் எரிகிறதா? ஒருவரைப் பார்க்கச் சகியாமல் எரிகிறதா? அயல்வீடு வாழப்பொறுக்காமல் எரிகிறதா? அல்லது வித்வத்துவக் காய்ச்சலால் எரிகிறதா? விகடன் அந்த எரி கிரி சொரி வரிகளைப் பற்றியெல்லாம் பேசவரவில்லை. கண்ணுக்கு எதிரே காட்சிக்கு நேரே தெரிகிற அதோ அந்த வெயிலைப்பற்றித்தான் அதன் எரிச்சல் பொறுக்கத் தாளாமல் சொல்லவந்தேன். படிப்பில்லாதவர்கள் தங்கள் எரிச்சலுக்கு அழுது தீர்ப்பார்கள். கல்வி ஞானம் மிஞ்சியவர்களோ அதை எழுதித் தீர்த்து சாந்தப்படுவார்கள். அப்படியாக, விகடன் இந்த வெயிலைப்பற்றியும் அதன் எரிச்சலைப்பற்றியும் எழுத்திலே எடுத்து அளக்கவே—அந்த சங்கதியை இப்போது எங்திக் கொண்டேன்.

***

புதிதாய் வந்த ஆசைக் கண்ணுட்டியையும், பார்வைக்குப் பக்குவமாய்ப் பொருந்திக்கொண்ட மூக்குக் கண்ணுடியையும், கைக்கு அடக்கமாய் அமைந்துவிட்ட 'பொடி' டப்பியையும் வெகு அக்கரையாய்த் தேடுவது போல, இந்த வெயிலின் கோரத்துக்கு முன்னே விசிறிச் சிறிக்கியைத் தேடிப் போகவேண்டி யிருக்கிறது! எத்தனை தான் வாங்கிப்போட்டாலும் இஷ்டப்பட்ட வேளைக்கு இந்த விசிறிப் பொம்மனுட்டி அகப்படுகிறதேயில்லை. வீட்டுக்கு வருகிற சிறியது பெரியதுகளில் விகடனைப்போல எத்தனையோ பேரல்லவா? விசிறிக்

தனக்கு அபிமானமுள்ள இடத்தில் என்னதான் குறையிருந்தாலும் அது மனத்திற்குத் தோன்றுகிறதில்லை.

கொண்டே வாசற்படி தாண்டிவிடுகிறீர்கள்! கண்டித்து அவர்களிடமிருந்து அதை வாங்க முடிகிறதா? காசு செலவில்லாமல் கிடைக்கும்போது கொண்டுபோக என்ன கஷ்டமா? நாலு விசிறி கிடைக்கையில் ஒன்றைக்கொண்டு போனேன் என்கிருன் ஒருவன்! இன்னொருவனே மூன்று கிடக்கையில் ஒரு விசிறியைக் கொண்டுபோனேன் என்கிருன்! இனி வேருருவனே அந்த இரண்டு விசிறியை ஒன்ருக்க, அவனுக்குப்பின் வருகிறவன் இருந்த ஒன்றையும் வெகு சுலபத்தில் அப்பிக்கொண்டு மறைகிருன். வேர்வை மிஞ்சி, எரிச்சல் வெகு பிரியமாய்க் கொஞ்சும் வேளையில் பஞ்சு படாதபாடு பட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் தேடி எடுக்கப்போனுல் ஒரு விசிறி தானும் கைக்கு அகப்படுவனதக் காணும்! விசிறி விலை காலணு அலரயணு சங்கதிதான். ஆனுலும் சமயத்துக்கு அது ஸஞ்சீவி யல்லவோ? கடைகளெல்லாம் மூடிவிட்ட நடுராத்திரி வேளையில் ஒரு சிட்டிகைப் பொடிக்கு ஒரு பவுன் கொடுத்தாலும் தகுமென்கிருர்களே! சிறைச்சாலைகளிலே ஒரு துண்டு புகையிலைக்கும், ஒரு சிட்டிகைப் பொடிக்கும், கொஞ்சம் கஞ்சாவுக்கும் எவ்வளவோ பணம் கைதிகள் ரகசியத்தில் கொடுக்கச் சம்மதிக்கிருர்களாமே! நோத்துக்குத் தகுந்த அருமை, வேளைக்குத் தகுந்த விலை. அவசியத்துக்குத் தகுந்த ஆதாவு. காமக் கண்ணின் மறைப்புக்குத் தகுப்தபடி கருப்புக்குட்டி! கலியாணத்துக்குப் போனவர்களெல்லாம் தங்கள் மூட்டைகளோடே ஒவ்வொரு தசாக் குவளையையும் கல்யாண வீட்டிலிருந்து கொண்டுவந்து விடுகிருர்களல்லவோ? அத்தனை குவளைகள் வாங்கிவந்து போட்டேனே ஒரு குவளையையும் காணுமே யென்று கலியாண வீட்டுக்காரன் கத்துகிருனல்லவோ! அப்படித்தான் வீட்டுக்கு வந்தவர்களெல்லாம் ஒவ்வொரு விசிறியாய்க் கொண்டுபோய் விடுகிற கதையும்! வேகிற வீட்டிலே பிடுங்கின வரையில் லாபமாக்கும்! ஏழை நூலாசிரியர்கள் போட்ட புஸ்தகங்களை வந்தவனும் கண்டவனுமெல்லாம் ஒருகாசு செலவு தானுமில்லாமல் சுயநல நரித் தந்திரமாய் மெதுவாக அப்பிக்கொண்டு போய்விடுகிருர்களல்லவோ! மூக்குப் பொடியைப் போட்டுக்கொண்டே அந்தப் பொடி மட்டையையும் அப்படியே கொண்டு போய் விடுகிருர்களல்லவோ! அதற்காகத் தானே ஆசைக்காகவும் கௌரவத்திற்காகவும் ஒரு வெள்ளி டப்பி வாங்க நினைத்தும், எவனுவது பொடி போடுகிறமாதிரி அதையும் கொண்டு போய்விட்டால் என்ன செய்கிறதென்று கொம்பு டப்பியையும், மர டப்பியையும் வாங்கி வெள்ளி டப்பியின் ஆவலை மறக்க வேண்டியிருக்கிறது! இன்னும் ஊறுகாயைப் போட்டுத் தந்தால் அதை வைத்துக் கொண்டுபோன ஜாடியையும், பாத்திரத்தையும் திருப்பித்தாாமல் நிறுத்திக்கொள்கிறவர்கள் எத்தனைபேர்! இரவல் சாதம் குழம்பு வாங்கிச்சென்று அந்தப் பாத்திாவகைகளைத் திருப்பித்தாாமல் அமுக்கிக்கொள்ள நினைக்கிறவர்களும் உண்டல்லவோ! அதைப்போலவும் இந்த விசிறியைக் கொண்டு போய்விடுகிற சங்கதியையும் வைத்துக்கொள்ளலாம்.

* * *

வேலை செய்யத் தொடங்கியதும் அதற்குமுன் இல்லாத யோசனைகள் திடீரெனத் தோன்றி வெகு வேகத்துடன் நம்மை எழுதச்செய்து உழைக்க வைக்கின்றன. இந்த யோசனைகள் எழுதத் தொடங்குமுன் இல்லை.

விகடனின் ஓட்டைவாயும், முற்றிமுதிர்ந்துபோன ஞானமும் ஒரு சங்கதியைத்தொட்டால் ஒன்பது சங்கதிகள் நான் நான் என்று ஓடிவரச் செய்கின்றன! அவற்றிற்கெல்லாம் ஒரு 'கழுத்தா' கொடுத்துத் தள்ளிவிட்டு, இந்த வெயிலின் கோரத்தையும் காரத்தையும் விகடன் என் சரக்கு மூட்டைப் பாரத்துக்கு எடுத்துச் சொல்லுகிறேன்! கேட்கிறீர்களா? ஊரிலே பாவங்கள் மலிந்துபோன தினாலே, அக்கிரமக்காரர்களுக்கே வாழ்வுநாளாக இருப்பதினாலே, ஆடம்பரப் பெத்தன்களுக்கே எல்லா கௌரவங்களும் சேருகிறதா யிருப்பதினாலே, ஏழை வயிற்றை அடித்துவிட்டு எஜமானர்கள் லாபம் சம்பாதிக்கிற கோரணிகள் பெருத்துவிட்டதினாலே அந்தத் தோஷ நோக்காடுகள் எல்லாம் ஒன்றுசேர்ந்துகொண்டு இந்த வருஷத்திலே வெயிலாகப் புறப்பட்டு எல்லாரையும் கொளுத்தாமல் கொளுத்தத் தொடங்கி விட்டது! விகடன் எந்த வருஷத்திலும் என்னுயுசுக்கும் இந்த மாதிரி கொடூரமான வெயிலைக் கண்டதேயில்லை. எரிநெருப்புக்கு ஈரமில்லையென்பதாக குஞ்சு குழந்தைகள் முதற்கொண்டு எல்லோரையும் வாட்டுவாட்டு என்று வாட்டுகிறது. இது இங்கே வந்துகுந்தும்படி யாரார் 'வோட்டு' கொடுத்தார்களோ தெரியவில்லை. தேகமெல்லாம் கொப்புளங்களாகி ஆஸ்பத்திரியில் அறுக்கும்படியும் ஆகிறது! எல்லாருக்குமே செருப்பு குடை அகப்படுகிறதா? கிடைத்தும் மறந்துவைத்துப் பின்பு தேடியில்லாமல் ஏமாறிய தாசிரிகள் இந்த வெயிலில் அகப்பட்டுக் கொண்டு அவர்களின் மறதிக்குப் போதும் தண்டனை யென்பதாக வெகு பாடுபட்டுப் பொசங்கிப்போகிறார்கள்!

***

எரி எரி என்று எரிக்கின்ற இந்த வெயிலின் எரிச்சலை எதற்கொப்பிடலாம்? ஈ எறும்பு மொய்க்காது இராக்கண் பகல்கண் விழித்து இடைவிடாது பக்கத்திலிருந்து கூ! என்றால், ஆ! என்றால் தூக்கி முகத்தோடு முகம்வைத்து முத்தியிட்டு கைமேலும் கால்மேலும் தூக்கி வளர்த்து, ஈரைப்பேனாக்கி பேனைப் பெரிதாக்கிக் காப்பாற்றிய பெண்ணும் பிள்ளையும், பிற்காலத்தில் அவரவர்களுக்குப் பிராயம் வந்து பெண் ஒரு வல்லாளகண்டனையும், பிள்ளை ஒரு கொடுஞ்சூரியையும் மணந்தான பிறகு; முற்றுந்துறந்த யோகியான பட்டணத்துப் பிள்ளையார் "குடியிருந்த வீட்டுக்கு கொள்ளி வைக்கக் காத்திருந்தேன்" என்று பெருந்தொல்லையாய்க் காத்திருந்து, தன்னைப் பத்து மாதம் சுமந்துபெற்ற தாய்க்குத் தகனகிரியை செய்துவிட்டுப் போனதை எண்ணிப் பார்க்க நேரமில்லாமலும், தன் உற்பத்தியை உணராமலும், தான் வளர்ந்தது யாராலே என்பதை யறியாமலும், பெற்றோரைப் படாதபாடு படுத்தும் பொழுது அவர்கள் மனது எப்படி எரியுமோ அப்படி எரிகிறது இந்த வெயில்,

***

"தம்பியுள்ளான் படைக்கஞ்சான்" என்பதாய், தன்னுடன் பிறந்த உடன்பிறப்பாயிற்றே யென்றும், சகோதரரைக் கைவிடக்கூடாதென்றும் கருதி, தன் மனைவி சேய்

எவ்வளவுதான் கவிதா சக்தியுள்ளவர்களும் கூட யோசித்துத்தான் கவிகள் செய்யவேண்டி வருகிறது. வசனநடைமாதிரி ஆற்றின் பிரவாகம்போல் மடமடவென்று பல பக்கங்களுக்கு எழுதிச் செல்லக்கூடவில்லை.

முதலியவர்களைப் பெரிதாய் எண்ணுது, தான் தின்ஞது உடுத்தாது உண்மைக்குப் பாடுபட்ட அண்ணனை எண்ணுமல், தன் பெண்டீரைப் பெரிதாயெண்ணி வம்புக்கு நின்று மனம் நோகவைக்கும் பொழுது அந்தப் புண்ணியவாளர் மனது எப்படி எரியுமோ அதுபோல் எரிகிறது இந்த வெயில்! உயிர் ஒன்று உடம்பு இரண்டென்று தமிழ் சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதற்கு ஒப்ப, "ஒரு பாதி மால் கொள்ள—மற்றொரு பாதி யுமையவள் கொண்டு—இருபாதியால் இறந்தான் ஈசன்" என்று ஒரு வித்வ சிரோன்மணி சாதுரியமாய்க் கூறியபடியும், ஹிந்து சாஸ்திரத்தில் சொல்லி யிருப்பதற்கிணங்க, ஆங்கிலேயர் (Better half) தன்னில் பேர்பாதி யென்றும், (Sweet heart) 'இன்ப இருதயம்' என்றுஞ் சிறப்புப் பெயர் அடையப் பெற்றவளுமாகிய பெண்டீரே தாய்க்குப் பின் தாரமென்றும், மந்திரி-குரு பணிப்பெண்-வேசி-தாயாரென எல்லாம் ஒருருவாய் அமைந்த அற்புத உருவமென்றும், நாயனர் கூறியது போல் ஐம்புலனுக்கும் ஏக காலத்தில் ஆநந்தத்தைஅளிக்கும்அரிய பதார்த்தமென்றும், கண்ணிலிருக்கும் பாப்பா என்கிற அந்தக் கருமணியை யகற்றி அவ்விடத்தில் அமைக்கவேண்டிய பெருமணி யென்றும் மதித்து, அவள் காலில்பட்டது தன் கண்ணில் பட்டதாய் எண்ணி நடந்த கணவனைவிட்டு, "அம்புவி மாதே கேளாய்—அரசனை யகலவிட்டு வம்பனைக் கைப்பிடித்த வாயுபோ" லென்று நரி அரசன் மனைவியைப் பார்த்து எளிதஞ் செய்ததற்கொப்ப, சோர நாயகனைத் துணைகொண்டோடிய நாரியைப் பிரிந்தவன் மனம் எப்படி எரியுமோ அதுபோல் எரிகிறது இந்த வெயில்!

***

தாய் தந்தை சகோதரரைவிட்டு, முன்னே பிறந்த காதைவிடப் பின்னே முளைத்த கொம்பு வலிதென்பதாய்—'நீயே கதி'—என்று நம்பிவந்த பெண்டீரை இல்லில் உறங்கவைத்து உடுக்க உடையில்லாது உண்ண உணவில்லாது படுக்கப் பாயில்லாது பறக்கவைத்து, துஷ்ட இஷ்டருடன் சேர்ந்து கஷ்டப்பட்டுத் தேடிய பொருளை நஷ்டிசெய்து, வேசிக்குத் தலைமகனுக அவள் காலைப் பிடித்து, உள்ளதை யுரியதை யெல்லாம் தத்தம்செய்து விலைக்குவாங்கிய மேக ரணங்களுடனும், மற்றும் பல உபாதைகளுடனும் வீடுசேர்ந்து அதே கதியாக அன்னமிறங்காது அந்தகனுலகுக்கு ஆளாகும் மதியீனருக்கு வாழ்க்கைப்பட்டு மாங்கலியம் இழக்கின்ற உத்தம பத்தினிகளின் மனம் எரிகிறதுபோல் எரிகிறது இந்த வெயில்! மழை பெய்யாது ஏரி நிறையாது இரவுபகலும் ஏற்றம் பிடித்து மார்பு உடைய இறைத்து கொஞ்சநஞ்சம் பயிர்செய்து கைக்கெட்டுமென்று அவாவுடன் பெண் ஜாதி பிள்ளை குட்டிகள் ஆவென்று வாய்திறந்து காத்திருக்கையில், வரி வசூல்காரர் வந்து தண்டோரா போட்டு விளையாத நிலத்துத் தீர்வைக்காக அதைக்கொண் டேகும் பொழுது அந்த பரிதாபப் பாவிக் குடியானவனின் வயிறு எரிகிறது போல் எரிகிறது இந்த வெயில்!

***

ஒரு சாமானை வேண்டாதவர்கள் கடைக்காரன் சொல்லும் விலைக்கும் அதிகமாகக் கேட்டுவிட்டு மெதுவாக நழுவிவிடுவது ஒரு தந்திரம்!

"பிச்சை யெடுத்ததாம் பெருமாள்—அதைப் பிடுங்கிற்றும் அனுமார்" என்பதாய் காற்றிலடித்துப் போகும் செத்தை கள்ளிகளைப் பொறுக்கி "காணுதுகண்ட கம்பங்கூழைச் சிந்தாது குடியடி சில்லி மூக்கி" என்றபடி பிச்சை எடுத்த அமுதுபடியைப் பொங்கித் தின்னக் கொண்டுபோகையில் எமகிங்கரர் போல் வந்து, தொட்டால் உயிர்போகும் ஸ்திதியில் இருக்கும் பேதைகளை நெட்டித்தள்ளி கட்டுகட்டாய் காட்டிலகா (Forest) சிப்பந்திகள் பிடுங்கிச் செல்லுகையில் அன்னோர் மனம் எரிவதுபோ லெரிகிறது இந்த வெயில்! பரிதானம் வாங்கிக்கொண்டு ஒருபுறஞ்சாய்ந்து அநீதத் தீர்மானம் செய்யும் நீதியதிபர்களைப் பார்த்து மனங்குழைவோர் வயிறெறிவது போல் எரிகிறது இந்த வெயில்! அண்டிவந்து தெண்டனிட்டு கொழுத்து தொண்டுசெய்து உண்ணுது சேர்த்து வைத்த பொருளை வைத்து வையென்று வைக்கத் தெரியாது வைக்கற்போரில் பெரிய இடம் என்று நம்பி வைத்து ஏமாந்து அதே பைத்தியம் கொண்டிறப்போர் மனம் எரிவதுபோல் எரிகிறது! "ஊர்க்குருவியின் தலைமேல் பனங்காயை சுமத்துவதுபோல்" குடிக்கக் கஞ்சியில்லாதவர்மீது தொழில் வரியென்னும் பாரத்தையும், கூரை மூட ஐவேஜு இல்லாது குட்டிச் சுவரில் வசிப்போருக்கு வீட்டுவரி என்னும் தலைச் சுமையையும் விதித்து, உண்ணும் கலத்தைக் கஞ்சி குடிக்கும் பொழுதே பிடுங்கிப் போகையில் அவர்கள் மனம் எரிகிறது போல் எரிகிறது! ***

கையை மூடியிருந்தால் கௌரவமென்று வெட்கத்துக்கு ஆற்றமாட்டாமல் பார்ப்போருக்குப் பகட்டாய் முடுக்காய்த் திரிவதைப் பொறுக்காமல், தங்களை மதிக்கவில்லை—மரியாதை, பொருள், வருஷாப்தம், பண்டிகைப்பணம் கொடுக்கவில்லை யென்கிற காரணத்தினாலேயே, இரக்கம் என்பது இன்னதென்று அறியாதவரும், கிடா கன்று ஈன்றதென்றால் பிடித்துக் கொட்டாயில் கட்டென்பவருமாகிய பெரிய உத்தியோகஸ்தர்களிடதில் பேர் எழுதிவைத்து வருமானவரியென்று போடவைத்து, அப்படிப்பட்டவர்கள் கொடுக்க சக்தியில்லாதபொழுது ஜப்தி செய்து, அக்கம் பக்கத்தார் விரோதிகள் பார்த்து நகைபுரியும்படி சாமான்களையெடுத்து வெளியே போட்டு அவற்றை வண்டியில் ஏற்றும் பொழுது அவர்களுடைய மனம் எரிவதுபோல் எரிகிறது! காலமெல்லாம் கஷ்டப்பட்டுவிட்டுக் கூலிகேட்டால் வாயடி கையடி யடித்து வீட்டை விட்டு வெளியே தூரத்துகையில் அப்படிப் பட்டவர்கள் வயிறு எரிகிறதுபோல் எரிகிறது! நூலாசிரியர்கள் விற்றுத் தரும்படி கொடுத்த புஸ்தகங்களையெல்லாம் விற்றுத் தின்றுவிட்டுப் புஸ்தகக் கடைக்காரர்கள் இன்னும் புஸ்தகங்கள் விற்கவில்லை யென்று அவர்களை ஏமாற்றும்போது அவர்கள் வயிறு எரிவதுபோல் எரிகிறது! வெகு நாள் உழைத்த இடத்திலும் வேலைக்கு வேண்டாம் என்று திடீரென்று விலக்கிவிட, வீடு திரும்பிய இடத்தில் இல்லாளும் பிரசவ நோய்ப்பட, அதற்குப் பின் பிறந்த குழந்தையும் அவதி நோயில்

ஒரு காரியத்தைச் செய்துதா முழுதும் சம்மதமே. ஆனால் இதையே முணுமுணுப்பும் அலையவைத்தலுமாக்கிப் பிறகு முடித்துக் கொடுக்கின்றனர், இது ஏனோ? முதலிலேயே அன்போடும் செய்யக்கூடாதா?

" அம்மா " என்பது முதலில் தன் தாயாரை அழைத்த சொல்லாகும். இப்பொழுது தன் குமார்த்தியையும், அன்னிய மாதரையும் அழைப்பதும் " அம்மா " என்று தான். தன்தாய் தன்னிடம் பாராட்டிய அத்தனை அன்பையும் தன் குமார்த்தியின்மீது வைக்கிறான். பிற மாதர்களைத் தாய்போற் கருத அம்மா என்ற சொல் உபயோகமாகிறது. தாயினது அத்தனை அன்பையும் தனது குமார்த்தியிடம்பெற்று இன்புறவே அம்மா என்கிறான் போலும்.

சாக, அதற்குமேல் மனைவியும் மயானம் செல்ல, அந்த ஏழையின் வயிறு அப்போது எப்படி எரியுமோ அதுபோல் எரிகிறது இந்த வெயில்! ஆ! சித்திரை வைகாசி மாதத்து வெயிலே! அதோ காற்றுப் பருவம் தொடங்கிக் கொண்டது. ஆனி மாதமும் வந்து நட்டுக்கொண்டது. போ! போ! உன் புண்ணியத்துக்கு நீ சுட்டது போதும்போதும் என்று விகடன் என் காலாலும் கையாலும் மண் காற்றுப் புழுதியாலும் அதைத் தூரத்திக்கொண்டு நிற்கிறேன். நீங்களும் என்னோடு சேர்ந்துகொண்டு தூரத்துங்கள்! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா !!

சுதந்திர நினைவின் துணிபு.

ஒரு காசு சம்பளமானாலும் சுதந்திரத்துடனேயே வாழவேண்டுமென்பது என் நினைவு. எனக்கு எஜமானராக இருப்பவருங்கூட மரியாதையுடனேயே எனக்கு எதுவும் கட்டளையிடவேண்டுமென்பது என் நினைவு. என்னைத் தனது ஊழியனாகக் கொண்டுள்ளவரும் நியாயமாய் நடக்கவேண்டுமென்பது என் நினைவு. என் உழைப்பை அறிந்து மதிக்கவேண்டுமென்பது என் நினைவு. கௌரவமாய் என்னை நடத்துவிக்கவேண்டுமென்பதும் என் நினைவு. சோம்பற் கட்டையாயில்லாமல் சதா உழைக்கும் சுறுசுறுப்பிலேயேஎன் நினைவு. எனக்கு மற்றவர் புத்திசொல்ல இடந்தராமல், பிறருக்கு நான் புத்தி சொல்லும் தலைமையையே என்றும் கொண்டு என் சுதந்திர நினைவை என் நிறைவேற்றிக்கொள்ள முடியாது? ஓ! முடியும்! என் நினைவை நிறைவேற்றிக் கொள்ளும் சக்தியை ஈசனார் எனக்குக் கொடுப்பார்.

நாற்பத்தெட்டு வினுக்கள்.

1. உனது விவாகச் செலவை எவ்வளவு சுருக்கத்தில் நடத்த உத்தேசம்? பணம், நகை, இவைகளுக்கு ஏற்பாடு எப்படி?

2. உனது விவாகவிருப்பம் எந்த நோக்கத்துடன்? உன் வித்தை, புத்தி, வாழ்க்கை இவைகட்கு ஒரு துணைவி வேண்டுமென்ரு? அல்லது சமைத்துப்போட, சுவைக்க ஒரு பெண் வேண்டுமென்ரு?

3. நீ விரும்பும் பெண்ணுக்கு முக அழகு வேண்டுமா? குண அழகு வேண்டுமா? விவாகத்திற்குப் பின் ஒன்று சேர்ந்திருக்கவா?—அல்லது தனியாகப் பிரிந்துவிடவா?—எப்படி உன் உள் நோக்கம்?

4. விவாக ஆசை சரிதான்; அந்த ஆசைக்கு முன்பே நீ ஒரு ஜீவனுர்த்தத்தை தேடிக்கொண் டிருக்க வேண்டுமே? அதுகிடைத்தானதா?

5. விவாகச் சடங்கினது உடன்படிக்கைச் சத்தியங்களின் கருத்துகளை நீ தெரிந்துகொண்டாயா? இப்படி ஒரு விவாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதின் பொருள் உன் மனதில் நன்கு பட்டதா?

6. விவாகம் செய்துகொண்டதில் உன் அனுபவங்கள் என்னென்ன? அந்த இன்பம் எத்தனை நாள் இனித்தது?

7. விவாகத்திற்குப் பிறகு உன் தாயார் உன்னை நடத்தும் விதம் எப்படி? உன் தாய் தங்கை தம்பிகளுடன் நீ நடந்து கொள்ளும் போக்கு எப்படி? ஒட்டியா?—விலகியா? பட்டும் படாமலா?

8. மாமியார் வீட்டு மரியாதை உனக்கு ஆரம்பத்தில் எப்படி? வர வரப் பிறகு எப்படி? எத்தனை தடவை மனஸ்தாபம்? மறுபடியும் கூடிக்கொண்டது எத்தனை தடவை?

9. குடும்ப ஒற்றுமை எப்படி? மனைவியும் தாயும் எப்படி? ஒழுங்கு கெட்டிருந்தால் திருத்தும் வகையை எப்படித் தீர்மானித்திருக்கிருய்?

10. நீ இப்பொழுது உன் கல்யாண வாழ்வில் எத்தனையாவது படிக்கு வந்திருக்கிருய்? இதற்கு இடையில் கலியாண சுகத்தில் வெறுப்புத் தட்டும்படியான துயர்மிகு கண்ணீர்கள் எத்தனை முறை சொறிய வாய்ந்தன?

11. வாழ்க்கையில் உன் இன்பத்துக்கு இடையூருய் இருப்பவையெவை?

12. கடன் தொல்லை உண்டா? எவ்விதம் கடனாளியானுய்? அதைத் தீர்க்க நீ நினைக்கும் வழி கூடிவரக் கூடியதுதானு? அதில் தடைகள் ஏதேனும் உண்டா?

13. குடும்பத்தினின்றும் பிரிந்து போகிற விருப்பம் உனக்கா?—உன் மனைவிக்கா? இந்த எண்ணம் விவாகத்திற்கு முன்பேயா? பின்னரா?

14. வேறு குடித்தனத்திற்குப் புறப்பட்டுவிட்டாயே, ஒன்ருய் வாழ்ந்ததில் கண்ட இன்பம் இதிலிருக்கிறதா? இப்போது உனக்கு ஊரின் மதிப்பு, பலம் எப்படி?

15. வேருகப் பிரிந்ததில் உன் குடும்பச் செலவு குறைந்திருக்கிற

குழந்தை சுபாவமுள்ளவன், கபடமற்றவன் என்று ஒரு ஆண்மகனைக் குறித்துத் தெரிந்துகொண்ட பெண்கள், அவன் எதிரில் இருக்கிருனே என்று கொஞ்சங்கூட அச்சம் நாணம் கொள்ளாமல் உடன்பிறப்புகள்போல் சாதாரணமாய் அவன் முன்பு இருக்கத் தலைப்படுகின்றனர்.

தென்று பூரிக்கிறாயா? ஒன்று மில்லாதிருந்தபோது சீ, தோ, என்று கேவலப்பட்ட நீ இப்போது ஒரு மதிப்பில் உயர்ந்திருப்பதாய்த் தோன்றுகிறதா?

16. உன்னையும் உன் மனைவியையும் தூற்றுகிறவர்களுக்கு அவர்களின் வாயை மூட என்ன வழி தேடியிருக்கிறாய்?

17. உனக்குப் பிரீதி உத்தியோகமா?—வர்த்தகமா? பிறருக்கு அடங்கிச் சம்பாதிக்க எண்ணமா? அல்லது சுயேச்சையாய்ப் பிழைக்க வேண்டுமென்ற ஆவலா?

ஒருவனை நெட்டித் தள்ள எவ்வளவோ ஆத்திரம். அவன் தன் வேலைக்கு ஒரு அவசியமான ஆளாயிற்றே என்றும் பின்வாங்குகை. எவ்வளவு சகித்தும் தாள முடிகிறதில்லை. அவன் உதவி வேண்டாத நேரமும் கிடையாது. என் செய்வதென்று பெரிய தத்தளிப்பு—வக்கம்!

18. நீ இப்போதுள்ள வேலையில் திருப்திபடாவிட்டால் வேறு எந்த வேலையில் நீ நாட்டம் கொண்டிருக்கிறாய்? எதிலிருந்து உன் வாழ்நாளைக் கழிக்க உத்தேசம்?

19. உன் மாதச்செலவு உன் வருமானத்திற்குள் அடங்கி யிருக்கிறதா? மேலுக்கு எவ்வளவு மிச்சப்படுகிறது?

20. எத்தனை தடவை சேர்த்து வைத்ததிலிருந்து எடுத்துச் செலவிட்டு விட்டாய்? எண்ணிச் சொல்லு. சில்லரை செலவுகளின் மொத்தக் கணக்கைக் கூட்டிப் பார்த்தாயா? சுருக்க யோசனை உண்டா?

21. உன் வேலை யென்றால் ஒரு புது அக்கரை, உன் வேலைக்காரன் வேலை என்றால் அதை மெதுவாகப் பின்னுக்குச் செய்ய நினைத்தல்—இப்படிப் பேத நினைவு வித்தியாசங்கள் கொள்கிறாயா?

22. குடி வெறிக்கும், விபசார தோஷத்துக்கும், கெட்ட அப்பியாசங்கட்கும் உன் ஜீவன் தப்பிப் பிழைத்து விட்டதா? அல்லது அவற்றிலே அடிபட்டு மயங்கி விட்டாயா? என்னென்ன துர்ப்பழக்கங்களைக் கற்றுக் கொண் டிருக்கிறாய்?

23. உன்னிடம் நெருங்கிப் பேசும் ஒவ்வொருவர் குணத்தையும், தன்மையையும், சுயநலப் போக்கான தன்காரியத்தன்மையையும் செம்மையாய் அறிந்து மனதில் வைத்திருக்கிறாயா? இதில் உத்தமர்களின் தொகை அதிகமா? அதமர்களின் தொகை அதிகமா? எவரெவர் உன் ஆபத்துக்கு உதவக் கூடியவர்கள்? அதை அறிந்து தெரிந்திருக்கிறாயா?

(தொடரும்.)

T. S. குழந்தைவேல் முதலியார்.

கற்பழித்தவனே தனது அயோக்கியத்தன்மையை வெளியிட நாணுகிறான். கற்பிழந்த பெண்ணே தான் கெட்டுண்டதை வெளியிட அஞ்சுகிறாள். இது ரகசியத்திலேயே இருந்துவிடுகிறது. அவளும் கற்பாசியாக, இவனும் யோக்கியனாக வெளியில் தோற்றம்!

குழந்தைகள் பக்கம்

இந்தியாவில் ராஜாவும் ஜனங்களும்.

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

க்ஷத்திரிய ஜாதி வரவரக் குறைந்துபோயிற்றென்று சென்ற பத்திரிகையில் கூறினோம். எப்போது க்ஷத்திரிய ஜாதி குறைந்தும் மறைந்தும் போயிற்றோ, அதற்குப் பதிலாக மற்ற ஜாதி ஜனங்களையாவது சண்டைத் தொழிலில் அமர்த்தித் தேசத்தைக் காத்துக்கொள்ளலாமல்லவா? அப்படியுஞ் செய்யவில்லை யென்று தோற்றுகிறது.

இப்போது இந்தியாவிலுள்ள துருப்புகளில் ஒருஜாதி ஜனங்கள் மட்டும் அமர்ந்திருக்காமல் பலஜாதி ஜனங்களும் சேர்ந்திருக்கிறார்களல்லவா? அப்படி நம் முற்காலத்து அரசர்கள் செய்யவில்லை. அப்படிச் செய்யாததினால், ஜனங்களுக்கும் ராஜாக்களுக்கும் அபிமானப்பற்று உண்டாகவில்லை. ராஜாக்கள் வரி கேட்பது அவர்கள் சுதந்திரம். கேட்ட வரியைக் கொடுப்பது ஜனங்களின் கடமை. அகப்பட்டவர்களைச் சேனைகளாகத் திரட்டிக்கொண்டு ராஜா அவசியமானபோது சண்டை செய்வான். இந்த நிலைமையில் இந்தியா அநேக நூற்றாண்டுகளாக இருந்து வந்தது. இந்தியா முழுமையும் ஒன்றாகக் கட்டிச் சேர்த்து ஆண்டவனில்லாமல், எங்கெங்கே எந்த ராஜா பலவானா யிருந்தானோ, அங்கங்கே அந்த ராஜா தன்னைச் சக்கரவர்த்தி யென்று சொல்லிக்கொண்டு மற்ற ராஜாக்களுடன் போர் செய்வான்.

இந்தியா தேசமோ மகா பெரிய தேசம். வடக்கே ஹிமய மலை அதற்கு எல்லையாயும், மற்ற மூன்று பக்கங்களிலும் சமுத்திரங்கள் எல்லைகளுமா யிருப்பதால், இந்தியாவில் ஆண்ட ராஜாக்களுக்கு இந்தியாவுக்கு அப்புறமுள்ள தேசங்களிலிருந்து எந்த அரசனாவது படையுடன் வந்து தங்களை வென்று இந்தியாவைக் கட்டிக்

சிலர் கோபிப்பதேயில்லை. அத்தகையோர்க்குக் கோபம் வந்தால் பிரமாதமாகத்தான் முடிகிறது.

கொள்ளுவானென்ற எண்ணம் உண்டாகவேயில்லை. உண்டாகாததினால், இந்தியாவைச் சுற்றிக் காவல் போட எண்ணவேயில்லை. இந்தியாவின் வடமேற்கு மூலையில் ஒரு குறுகலான பாதை மலைவழியாய் வருகின்றது. அந்தப் பாதை வழியாய் அப்பாலுள்ள ராஜாக்கள் இந்தியாவில் பெரும்படையுடன் வந்து புகலாம். அப்படியே சமுத்திரத்து வழியாய்க் கப்பலில் அன்னிய தேசத்தார் படையுடன் வரலாம். இந்த இரண்டையும் ஹிந்து ராஜாக்கள் கவனியாமல் அலக்ஷியம் செய்துவிட்டு, தங்களின் பொதுத் தேசமாகிய இந்தியாவைக் காவல்செய்து காப்பாற்றிக்கொள்ளாமல் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுப் பலக்குறைவு செய்துகொண்டனர். ஆதலால் மகம்மதியர்கள் சுமார் ஆயிரம் வருஷத்திற்கு முன்னால் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து ஹிந்து ராஜாக்களைவென்று மகம்மதிய ஆட்சியை ஸ்தாபித்தார்கள். இவர்களுக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆரம்பத்தில் வியாபாரிகளாக வந்து, இப்பொழுது இத்தேசமுற்றிலுமே ஆண்டுவருகிறார்கள். இதுவே பூர்வ வரலாறு.

சுதந்திர ஆண்மையின் இயற்கைக் குணங்கள்.

எவ்வகையிலும் என் சுதந்திரத்தை காப்பதே என் ஓயா முயற்சி. என் இருப்பிடம் தேடி வந்தாலன்றி எவரையும் நான் நாடிப் போகேன். அறிமுகத்தை நட்பு என்று எண்ணி ஏமாறேன். * "போலிக்"கும் ‡ தாலிக்கும் உள்ள பேதம் கண்டறிவேன். ஒவ்வொரு மனிதனையும் ஆழம் பார்த்தே வைத்திருப்பேன். அகத்தன்பையும் புறத்தன்பையும் பகுத்தறியும் திறமுடையேன். என் பேச்சுக்கு வராத வரை நான் பிறர்பேச்சுக்குப் போகேன். தம் காரியத்திலேயே அக்கரைகொண்டு என் காரியத்தை ஒரு மூலையிற்போடுவோரையும் தெரிந்துவைத்திருப்பேன். அன்பு குறைந்தார்க்கு என் கடிதம் அருமையாகும். அன்பு தவறினார்க்கு நானும் தூரப் போய்விடுவேன். போலியன்பும், சுயநலமே மிஞ்சிய வியாபார நட்பும் கொண்டு என்னை நேசித்து மயக்குவதென்பது எக்காலத்தும் நிறைவேறாத சங்கதி. மயங்குபவனல்ல நான். வஞ்சனைவலையிற் படுபவனல்ல நான். எதையும் ஒரு தெய்வப் படிப்பினையாக நினைப்பவன் நான். இவை இறைவன் எனக்கு அருளிய இயற்கைக் குணங்களாகும்.

* போலி=வைப்புஸ்திரீ, உபநாயகி. ‡ தாலி=மனைவி.

வியாபார நேசம் வியாபாரம் முடிந்தவுடன் பிரிந்துவிடுகிறது. அல்பத்திற்கும் கணக்கிடும் சங்கதி அங்கு மிகுதியானதால் நேசம் பலப்படுவதில்லை.

பிரபஞ்ச தரிசனம்



கல்வியில்லாவது, சாமர்த்தியத்திலாவது, யோக்கியத்திலாவது பொறுப்பேறிய அந்தஸ்து கொடுக்கப்பட்ட இந்தியர்கள் தகுதிக்குறைவாயிருக்கிறார்களென ஒரு திருஷ்டாந்தம் காட்டுவதுகூட மிகவும் அருமையாயிருக்கும். எந்த முயற்சியானாலும், எந்தத் தொழிலானாலும், விவேகத்திலும் புத்திகூர்மையிலும் இந்தியர்கள் தாழ்ந்தவர்களல்ல. இன்னும் சொல்லப்போனால், இந்தியர்களுடைய நாகரீகமும் மதானுஷ்டானங்களும் இவர்களிடம் பொறுமையையும் சாத்துவிக குணத்தையும் அதிகப்படுத்தி மனோ நிலைமையில் அவர்களை மிகவும் உன்னதப்படுத்துகின்றன. ராஜ விசுவாஸம், அடக்கம், நன்றியறிதல், மூர்க்கமின்மை முதலிய தர்ம குணங்கள் பிறந்ததும் இந்த நாடு. இங்கே அவை வளர்ந்தும் விர்த்தியாகியும் வருகின்றன. இந்தியப் பெரியவர்கள் உயர்வு—தாழ்வு என்ற வித்தியாஸத்தையும் பாராட்டாதவர்கள். காலஞ்சென்ற ஸ்ரீயுத ஜட்ஜிஸ் ரானடே ஒரு நாள் காலையில் உலாத்திக்கொண்டிருந்தபோது அவரை இன்னாரென்று அறியாதஒருவன் தன்னுடைய கள் பானையைத் தூக்கித் தலைமீது வைக்கச்சொல்ல, ஸ்ரீ ரானடே அவ்விதமே செய்தாராம். இன்னும் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியைப் பற்றியும், ஸ்ரீ ஜட்ஜிஸ் முத்துசாமி ஐயரைப்பற்றியும் அவர்களுடைய பொறுமைக்கும் மன விசாலத்துக்கும் அறிகுறியான சிறு கதைகளுமுண்டு.

* * *

இவ்வளவு கண்ணியமுள்ள இந்தியர்கள் கீழ்த்தரமாக எண்ணப்படுவது தான் பெரிய விந்தை! பொதுவாக உயர்ந்த கல்வியும், உயர்ந்த அந்தஸ்துமுடைய ஆங்கிலேயர்கள் எவ்வளவோ இணக்கமாகவும் கௌரவமாகவுமே நடந்துகொள்கிறார்கள். தாழ்ந்த ஸ்திதியில் சொற்பச் சம்பளம் பெறும் ஆங்கிலேயர்களே தங்கள் கீழ்ப்பட்ட இந்தியர்களையும் மற்றும் எதிர்ப்பட்ட ஏழை ஜனங்களையும் கேவலமாக நடத்துகிறார்கள், இங்கிலாந்துக்குச் செல்லும் இந்தியர்கள் இங்கிலாந்திலுள்ள பெரிய பிரபுக்களாலும், ராஜதந்திரிகளாலும், மற்றும் சிரேஷ்டமான அந்தஸ்துடையவர்களாலும் எவ்வளவோ ஸகோதரப்பான்மையாய் உபசரிக்கப்பட, இந்தியாவில் மட்டும் ஆங்கிலேயர்கள் இந்தியர்களைத் தூர நிறுத்துவதும், அலாதிப்படுத்துவதும், புறக்கணிப்பதுமாயிருப்பது என்ன காரணம்பற்றியோ தெரியவில்லை,

(முடிவு பெறவில்லை)

ஹாஸ்ய ஸஞ்சீவினி

குழந்தையின் பிரீதி :—

தந்தை :—குழந்தாய்! உனக்கு யார்மீது அதிகப் பிரியம்? அம்மா மீதா? என் மீதா?

குழந்தை :—நீ பொம்மைகள் வாங்கிக் கொடுக்கிறாய். உன் மேல்தான் அதிகப் பிரியம். அம்மாமேல் பிரியமில்லை.

தாயார் :—என்ன அப்பா! நான் பத்துமாதம் உன்னை வயிற்றில் சுமந்திருந்தேனே. என்மேல் பிரியமில்லையா?

குழந்தை :—உன்மேல் பிரியம் வைக்க நீ பொம்மை வாங்கிக் கொடுத்தாயா?

***

மாமியின் போக்கு :—

மரகதாம்பாள் :—அன்பான குழந்தைகள் என்னைக் கைவிட்டுப்போய் விட்டார்கள். நான் திக்கு இல்லாதவளாய்ப் போனேன்.

வஜ்ஜிராம்பாள் :—உன் பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகள் அப்படியானாலும், உன் குமாரனுக்குப் பிறந்த குழந்தைகள் இருக்கின்றனவே? உன் குமாரனும் இருக்கிறானே? நீ எப்படித் திக்கற்றவளென்று சொல்லலாம்?

மரகதாம்பாள் :—அவனைத்தான் அந்த மருமகச்சிறுக்கிக்கு ஒப்படைத்துத் தலைமுழுகிவிட்டேனே. என் சொந்தப் பெண்ணுபெற்ற குழந்தைகளுக்குச் சமமாகுமா அந்தச் சிறுக்கிக்குப் பிறந்த குழந்தைகள்?

ஈவது விலக்கேல் :—

சம்பந்தம் :—ஓய் கணக்கப்பிள்ளை! சும்மா ஊராரின் வயிற்றெரிச்சலை வாரிக்கொள்ளாதீர். உழைத்தவன் தன் கூலியைக்கேட்டால் கொடுக்கிற எஜமானனையும் வேண்டாமென்று ஏன் தடுக்கிறீர்? நீ செய்த வேலைக்கு இவ்வளவு கூலி போதாதோ வென்று கூலியைக் குறைக்கப் பார்க்கிறீர். அதில் உமக்கு என்ன லாபமோ?

கணக்கப்பிள்ளை :—அப்படி எஜமானன் பக்கம் இருந்தால்தானே அவர் என்னை மெச்சுவார்? நானும் ரொம்ப உழைப்பதாய் அவர் எண்ணுவார்? எனக்கும் சம்பளம் உயரும்.

சம்பந்தம் :—ஏழைகளின் வயிற்றெரிச்சல் அதிகமானால் உமக்குக் கொடுக்கப்படுகிற கூலியிலும் மண்விழுந்துவிடும். எவ்வளவோ பேருக்கு மண் விழுந்திருக்கிறது, ஜாக்கிரதை!

***

சரியான பதில் :—

பிரயாணி :—7—45—மணி வண்டி திருச்சிக்கு எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?

டிக்கட் குமஸ்தா :—சரியாய் எட்டு அடிக்கப் பதினைந்து நிமிஷத்துக்கு.

***

நீண்டதாடி :—

நியாயாதிபதி :—(தாடி வளர்ந்திருந்த ஒரு சாக்ஷியைப்பார்த்து) "உன் தாடி வளர்ந்திருக்கிற அளவுக்குப் பெரிதாக உனக்கு மனசாக்ஷியும் தர்மநியாயமாய் இருக்குமென நான் நினைக்கிறேன்."

சாக்ஷி :—"தர்ம எஜமான்களே! தாங்கள் மனசாக்ஷியைத் தாடியைக் கொண்டு அளவிடுகிறீர்களா? அப்படியானால் தாடியேயில்லாத தாங்கள் மனச்சாக்ஷி கொஞ்சமேனும் உடையவர்களல்லவோ?"

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(93-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் நாம் அன்பைக்குறித்து நூறு பழமொழிகளால் விளக்கினோம். உலக அனுபவங்களையும் அத்துடன் தொகுத்துச் சொன்னோம். அன்பு என்பது தானே உண்டாவதாகும். பல காரணங்களாலும் ஒருவரிடத்துப் பற்றுதல் கொள்ளும்படியும், பழகிப்போகும்படியும், அதிலிருந்து அன்பு தோன்றிக்கொள்ளும்படியும் காலச்சக்கரமானது ஆட்டிவைக்கின்றது. ஆட்டி வைத்தால் ஆடாதார் யாரே? இவ்வாறு அன்பால் ஒருமனப்பட்டோர் எந்த நாளைக்கும் அவ்விதமே இருந்துவிட்டால் எவ்வளவோ ஆநந்தமாய் இருக்குமே! அன்பைப்பற்றிக் குறை சொல்வோரும் அப்போது இருக்க மாட்டார்கள். அன்பில் ஏமாறியவர்களும் தாம் வைத்த அன்பைப்போல் அவர்கள் தமக்கு அன்பைக் காட்டவில்லையென்று மனது நோகிறவர்களும் அப்பொழுது இருக்கமாட்டார்கள். ஆனால் உண்மையில் நடப்பதென்ன? முதலில் அன்பு வைத்தவர்கள் அந்த அன்பை நெடுநாள் வரைக்கும் காப்பாற்றுவதில்லை. முதன் முதலில் புதிதாய்ச் சந்திக்கும்போது வெகு மதிப்பு வைத்துத் தாங்குகிறார்கள். ஏன் என்பதற்கு முன் எண்ணெயுடன் எதிர் வந்து நிற்கிறார்கள். எவ்வளவோ ஆரவார உபசாரங்கள் செய்து பாதிவழி வரை வண்டியேறிவந்து நடுவில் வாங்கவேண்டியவைகளையும் தம் செலவில் தானே வாங்கிக்கொடுத்து, வண்டிக்காரனுக்கு வாடகையும் கூடத் தாமே தந்து, சில சமயங்களில் ரயில் வரைக்குங் கூடவந்து அனுப்புவிக்கிறார்கள். இன்னும் அவர்கள் தங்கியிருந்து செல்வதற்குத் தனி வீடுகளையும் ஏற்படுத்திக்கொடுத்து எவ்வளவோ அன்பாய் நடந்துகொண்டு வழியனுப்புகிறார்கள். வழிக்குப் பலகாரங்களும் செய்துகொடுக்கிறார்கள். அவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கித்தந்தும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொடுத்தும் அனுப்புகிறார்கள்.

முதல் சந்திப்பு இப்படியாக, இனி இரண்டாவது சந்திப்பிலோ முன்னைய அன்பில் பாதி குறைந்து போகிறது. ஒரு அலக்ஷியமும் ஏற்பட்டு விடுகிறது. அதிகம் பழகிப்போனதினால் அருமை தெரியாமற்போகிறது. அழ

பிசினாறிகள் கூட சில சமயங்களில் தங்கள் பந்துக்களும் நண்பர்களும் பக்கத்திலிருக்கும்பொழுது அவர்கள் மெச்சவேணுமென்று வெகு தாராளமாய்ச் செலவழிக்கத் துணிந்து விடுகின்றனர்.

கான மனைவியை யுடையோரிற் பலரும் அவளது அழகை அவ்வளவாக மதிப்பதில்லையல்லவா? அதுபோல் ஒருவரைப்பற்றிப் பிரமாதமாக ஆரம்பத்தில் எண்ணிக்கொண்டிருந்துவிட்டு, அப்பால் அவர்கள் வரப்போகப் பழக்கமான பிறகு அவர்களைப்பற்றிச் சாமான்யமான எண்ணம் ஏற்பட்டுப்போய், அதிலிருந்து ஒரு அலக்ஷியத்தன்மையும் உண்டாகிவிடுகிறது. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதுபோல அவர்கள்மீது இவர்களுக்கு ஒரு புளிப்பும் தோன்றிக்கொள்கிறது. இப்படியாக, அன்பு மாறிப்போகும் தன்மைகளைக் குறித்து அதற்குரிய அநுபவங்களோடும் ஸம்பவங்களோடும் ஆயிரம் பக்கங்கள் வரையும் எழுதிச் செல்லலாம். அப்படி நெடுக வரைவதிலும், இவ்விதமாய் அன்பு மாறிப்போவதற்கும், அன்பு கெடுவதற்கும் காரணமாய் இருக்கிற துற்குணங்களைப்பற்றிச் சொல்லும் பழமொழிகளை எடுத்துக் காண்பித்து அவைகளுக்குப் பொருத்தமாய் அந்தந்த சங்கதிகளையும் அநுபவங்களையும் விவரித்துக்கொண்டு போவது உசிதமும், வாசிப்பதற்கு ருசிகாமுமாய் இருக்கும். அன்பு கெடுவதற்குள்ள துற்குணங்களுக்கெல்லாம் காரணமாய் இருப்பது பெருந்தன்மையும் பெரிய செய்கையும் இல்லாததே. இப்படிப் பெருந்தன்மை இல்லாமற்போவதற்கு ஏதுகரம் அப்பதுணமே. இந்த அற்பகுணம் எத்தகைய பெருந்தன்மையையும், எவ்வளவு ஆழ்ந்த அன்பையுங் கூடக் கொன்று விடுகின்றது. ஆகவே, அன்புக்குப் பிறகு அற்பகுணம் என்பதைப்பற்றி இந்த இரண்டாவது அத்தியாயத்தில் அதற்குள்ள பழமொழிகளுடன் தொடர்ந்தெழுத ஆரம்பிக்கின்றோம்.

101. அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.

பகலில் வெயிலுக்குக் குடை பிடிப்பது சாதாரண சங்கதி; அது சகஜம். ஆனால், நடுராத்திரியிலும்கூட ஒருவன் குடைபிடிப்பானுகில் அவனைப் பற்றி என்னென்று சொல்லலாம்? அவன் குடையையே அதுவரையில் கண்டிராதவனென்றும், ஏதோ அதிர்ஷ்டவசமாக அவனுக்கு ஒரு குடை கிடைத்துப்போயிற்றென்றும், தன்னிடம் அப்படி ஒரு குடை இருப்பதாகக் காண்பித்துக்கொள்ளவே அவன் அர்த்தராத்திரியிலும் குடைபிடிக்கத் தொடங்குகிறனென்றும்தான் சொல்லவேண்டி யிருக்கும். கிட்டாதது கிடைத்ததனால் அவன் தலைதுள்ளிப் போகிறன். பழைய சோற்றுக்குக்கூட வழியற்றிருந்த ஒருவனுக்குத் திடீரென்று செல்வமும் சொத்துக்களும் கூடிவிட்டால் தனது பழைய நண்பர்களை யெல்லாம் மறந்துபோய், அவர்களிடத்தில் தன் புது ஐசுவரிய ஆடம்பரங்களைக் காண்பித்துக்கொண்டு கர்வப்பட்டுப் போகிறன். தனக்காவது கல்யாணமாவது என்று நினைத்துக்கொண்டிருந்தவனுக்கு ஒரு அழகு ரம்பை மனைவியாய் வந்துவிடவே, அந்த வைபவத்திலே முன்னிருந்த உத்தம குணங்களும் அன்பும் பெரிய செய்கைகளும் மாறிப்போய் தனது சகோதரிகளையும் கண்டபடி பேசி, தன் தாயையும் வாய்க்குவந்தபடி தூற்றி, பருவமடைந்த பெண்ணுய் விவாகத்துக்கு எதிர்பார்த்துக்கொண்டு

ஒரு சாமானைத் தேடும்பொழுது அது அகப்படுகிறதில்லை. அது வேண்டாதபோது அது தானுகவே, வேறு சாமானைத் தேடும்பொழுது அகப்படுகிறது. அப்படியே மனிதரும் தேடும்பொழுது அகப்படுவதில்லை.

வீட்டிற்குள் இருக்கிற தன் தங்கையையும் வெளியில் போகும்படி தூரத்தி யடித்து இல்லாத கொடுமைகளை யெல்லாம் செய்யத் துணிந்துவிடுகிறான். இங்கிருந்தால் தன் தாய்க்கும் தங்கைக்கும் செலவுசெய்யவேண்டி யிருக்கு மென்று நினைத்துத் தன் மனைவியை அழைத்துக்கொண்டு புது வாழ்வான மாமி வீட்டுக்குப் பொய்க் குந்திக்கொள்ளுகிறான். இங்கே தன் தாயும் தங்கையும் வீட்டுச் செலவுக்கு என்ன தத்தளித்தாலும் கவனிப்பதே யில்லை. எல்லா செலவும் மாமியார் வீட்டுக்கே செய்கிறது. தனது சிங்காசனத்தை மாமிவீட்டிலேயே போட்டு உட்கார்ந்துகொள்ளுகிறது. தன் மனைவியைத் தாயாரும் தங்கையும் தக்கபடி கவனிக்கவில்லை யென்று உறுமுகிறது. தன் கூடப்பிறந்த ஒரு தங்கைக்கு அவள் புருஷன் வீட்டில் அவளுக்கு அசௌக்கியமாயிருந்து, அந்த சமயம் அதற்காகத் தன் தாயார் அங்கு சேன்று வாரம் போலத் தங்கிவிட்டால், அதே காலத்தில் இவன் மனைவிக்கும் ஏதாவது நோய்நோடி நோக்காடு நேர்ந்துகொண்டால், உடனே தன் தாயின்மேல் துள்ளி விழுகிறது. அவள் எங்கே போனாள்?—என் மனைவியைக் கவனிக்காமல் அவள் தன் மகளிடம் எப்படிப்போகலாம்?—வரட்டும் சொல்லுகிறேன்—வழிவைக்கிறேன்—இனி இந்த வீட்டுவாசல் ஏறாதபடி செய்கிறேன்—ஓ! எவருடைய தயவும் எனக்குத் தேவையில்லை என்று ஆரவாரிக்கிறான். இந்த சமயம் இரண்டொருவர் நடுவில் புகுந்து, "அப்பா, அங்கே உன் தங்கைக்கு அதிக மயக்கமாய் இருக்கிறதாம். அதற்காக உன் தாய் அவசரமாய்ப் போனாள், போன இடத்தில் உடனே திரும்ப முடியவில்லையாக்கும்" என்றால், அதற்கு இவன், 'அவளை பூலையிற் சாய்த்தாலென்ன, எப்படிப் போனாலென்ன, என் பெண்டாட்டியல்லவோ எனக்கு முக்கியம்; என் மனைவியைவிடவா மற்றது பெரியது, என் காரியம் எனக்கு; என் வீட்டுச் சங்கதியைக் கவனியாமல் இன்னொருத்தியின் வீட்டு சங்கதிக்கு அப்படி என்ன அவசரம் வந்தது' என்று தலைதுள்ளிப் பேசுகிறான். இது புதுப்பெண்டாட்டி வந்த வாழ்விலே தடுமாறிப்போன அற்ப குணமல்லவா? மனைவியின்மீது பிரியம் வைக்கவேண்டியதுதான்; ஆனால் இப்படியெல்லாமா தாறுமாறுகள் செய்கிறது? இவ்விதமாகவா எடுத்தெறிந்து பேசுவது? விவாகமாவதற்கு முன் எவ்வளவோ நல்ல மனிதனாய்ப் பணிந்து அடங்கி நடந்துகொண்டிருந்துவிட்டு, கல்யாணமானதும் அடக்குவாரற்றவனாக மாறுவது அற்பத்தனத்தால் உண்டான பொல்லாங்கல்லவா? இவ்விதமே விவாகமானதும் சிலர் அதற்கு முன்பு நேசித்த அன்பினர், உறவினர் யாவரையும் கையுதறிவிட்டுப் புது மனிதர்களாகி மாறிப்போகிறார்கள். பழைய மனிதர்கள் வலுவில் வந்து சந்தித்தாலுங்கூடப் பேசுவதற்கு நேரம் இருப்பதில்லை. பேசக்கூட வார்த்தைகள் அகப்படாமல், வந்தவன்மட்டும் பேச, இவர்கள் தலையை மட்டும் ஆட்டிக்கொண்டு மவுனசாமிகளாய்த் திமிர்பிடித்து மமதையுடன் நிற்கிறார்கள். இந்த அற்பகுணம் முன்னிருந்த அன்பை எவ்வளவுக்குக் கொலைசெய்துவிடுகிறது பாருங்கள். அர்த்த ராத்திரியில் குடைபிடிக்கிறது ஒரு தப்பிதமல்ல. ஆனால், தன் புதுப்பொருளை வெகு பெருமையாய் மதித்து, உலக வழக்க நியாய ஆசரணைகளை முற்றிலுமே எதிர்த்து, அந்தப் புது வாழ்விலே தான் தடுமாறிப்போகிற அற்ப தன்மையையே இந்தப் பழமொழியானது "அர்த்த ராத்திரியிலே குடைபிடிப்பான்" என்று குத்திச் சொல்லி எடுத்துக் காட்டுவதா யிருக்கிறது.

(தொடரும்.)

சென்றமாதம்

பூர்வ ஜென்ம ஞாபகம்.

“பத்து அரிசியும் வேகவில்லை, பாவி பிராணனும் போகவில்லை” என்பதாய், இந்த ஜன்மத்தின் தொந்தரைகளும், அதன் ஞாபகங்களும், பாசவலைகளும், மோகப்பித்துகளும் ஏகவாய்க்கூடிப் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிற நிலையில், இனி, போன ஜன்மத்து ஞாபகங்ளும் பாசங்களும் சேர்ந்து கொண்டால் இன்னும் அதிக தொந்தரைதான். மனித சக்திக்கு அது தாளமுடியாதென்றே கடவுள் பூர்வ ஜன்ம ஞாபகத்தை மனிதனுக்கு முற்றும் மறக்கடித்து நன்மை செய்திருக்கிறார். எனினும், சில அபூர்வ தரிசனங்கள் இல்லாமலில்லை. முன்னொரு முறை ஐந்து வயது சிறுவனொருவனுக்கு பூர்வ ஜன்ம ஞாபகம் மறவாதிருந்ததாயும், தனது பூர்வ ஜன்மத்தின் தாய் தந்தையரைக் காண விரும்பியதாயும், பூர்வத்தில் தான் யமுனாநதியில் ஒரு முதலையால் விழுங்கப்பட்டு இறந்ததாய்த் தெரிவித்தானென்றும் கேட்டிருக்கிறோம். அவ்வுண்மையைக் கண்டறியுமாறு தந்தை அவனை அழைத்துச்செல்ல, சிறுவன் வழியிலே திடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த ஒரு பெண்ணைக் கட்டிக்கொண்டு, அம்மா, என் பொம்மை யெங்கே, நான் உன் குமாரனல்லவா, என்னை முதலை விழுங்கவில்லையா என்று கேட்டுவிட்டு, அவ்வீட்டில் தனது விளையாட்டுச்சாமான்களின் விவரம் எல்லாம் சொன்னதாயும், அவன் கூறியபடியே அவர்களின் குழந்தையும் யமுனையில் முதலையால் விழுங்கப்பட்டதுண்டென்றும் சங்கதி எட்டிற்று. இப்பொழுது மற்றொரு செய்தி:—ஷாடி நகரில் பண்டித விஷ்ணு என்ற ஒரு பிராமணரின் 7-வயது பெண் தன் பூர்வ ஜன்ம ஞாபகங்களைச் சொல்லி. அவ்விதம் தாய் தந்தையர் அழைத்துப் போன இடத்தில் இரண்டு வீடுகளைக் காண்பித்து அங்கு தான் பூர்வ ஜன்மத்தில் வசித்ததாயும், அவ்வீட்டிலுள்ள இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் தன் குமாரர்களென்றும், பந்துக்கள் இன்னின்னாரென்றும், வெகு விரிவாய்த் தெரிவித்ததாயும். அவள் கூறும் பெயர்கள் யாவும் உண்மையாயிருக்கின்றனவென்றும் சொல்லப்படுகிறது. இது அதிசயமே. விட்டகுறை தொட்டகுறை விடுமா என்பது பழமொழி.

***

புதுக்கோட்டை அரசரின் மரணம்,

“முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாகி” என்பதுபோல, புதுக்கோட்டை அரசரும் பாரீஸ நகரில் காலமாய்விட்டார், அவர் பிறந்தது 1875-ம் வருஷமாகும். ராஜாவின் சவம் இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டு ஹிந்துமதாசாரப்

பட்டுச் சேலையை யுடுத்திக்கொண்ட ஒரு பெண்மணியைப் பார்த்து “இப்பொழுது நன்றாக இருக்கிறது” என்கிறான் ஒருவன். அவன் குழந்தை சுபாவத்துடன் சொல்லிய சொல்லாதலின் அப்பெண்ணும் பேதசிந்தையின்றிப் பிரியமாய் அதைக் கேட்கிறாள். இருவரிடமும் களங்கமில்லை.

படி தகனக்கிரியைகள் நடந்தேறின. "மனிதன் மறப்பான், குறைபடுவான், மாறுவான், போவான்' என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. புதுக்கோட்டை யரசர் இதற்கு ஒரு உதாரணமானார். முந்திய புதுக்கோட்டை யரசருக்கு இவர் சுவிகார புத்திரராவர். தமது 11-வது வயதில் 1886-ம் வருஷத்தில் அரசரானார். இவரை இளமையில் கல்வி கற்பிக்க ஆங்கிலேயர்களின் வசம் விடப்பட, அவர்களின் பழக்க வழக்கமே முற்றி அவருக்குத் தீங்காய் முடிந்து, தமது மத ஆசாரணைகளில் பற்றுதலற்று மறப்பதானார். ஐரோப்பிய உருவில் மாறி ஐரோப்பாவையே தமது வசமாக்கிக்கொண்டு குறைபடுவதானார். 1915-ம் வருஷத்தில் ஒரு ஆஸ்டிரேலியப் பெண்ணை மணந்து ஒரு குமாரனையும் பெற்று அன்னியராய் மாறுவதானார். தமது குமாரனுக்குப் பட்டம் கிடைக்காதென்று தெரிந்து வருந்தி ஐரோப்பாவிலேயேஇருந்து இறந்துபோவதானார். இவர் குமாரனுக்கு இப்போது 12-வயது. மாஜி இராஜப்பிரதிநிதியான லார்ட் கர்ஸன் முன்பு திரிச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்த ஸமயம் புதுக்கோட்டை யரசர் ஆங்கில உடுபாவனைகளுடன் அவரைக் காணப் போக, அதற்கு லார்ட்கர்ஸன், அரசர் தமது புராதன உடைதரித்து வந்தால் தான் பார்க்கமுடியுமென்றுவிட, அவ்விதமே அரசரும் நடந்து கொண்டாரென்ற செய்தியுமுண்டு. புதுக்கோட்டையில் அம்மன் காசு என்று ஒரு நாணயம் வழங்குகிறது. காலணாவுக்கு ஐந்து நாணயமாகும். அதில் ஒரு பக்கம் லக்ஷ்மியின் உருவமும், மறுபக்கம் விஜய என்று தெலுங்கு எழுத்திலும் காணப்படுகிறது. புதுக்கோட்டைக்கு "கொத்த கோட்டா" என்று தெலுங்கில் ஒரு பெயரும் உண்டு.

***

பார்டோலி வரி கொடா இயக்கம்.

"கொண்டவனே கொண்டையைப் பிடித்தால் பெண்டு என்ன செய்வாள்" என்பதாக, பார்டோலியில் அரசாங்கத்தார் வரிகொடுக்க மறுக்கும் ஜனங்களின் உடமைகளை ஜப்திசெய்து பலரைச் சிறைக்கனுப்பி வருகின்றனர். ஜனங்களும் எதுபோயினும், நேரினும் சரி என்று இருக்கின்றனர். ஆறில் ஒரு பாகம்கூட இன்னும் வரி வசூல் ஆகவில்லையாம். இதன் முடிவு இந்தியாவுக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கும்.

***

மைசூர் துரைத்தனத்தில் கதரின் ஆதரிப்பு.

"உள்ளிருந்தார்க்குத் தெரியும் உள் வருத்தம்" என்பதாய், சுதேச ஜனங்களின் இன்ப துன்பங்களை சுதேச சமஸ்தானங்கள்தான் நன்கறிகின்றன. கதர் உற்பத்தி ஏழை ஜனங்களின் பசிப்பிணிக்குச் சிறந்த நன் மருந்தென்பதை மைசூர் கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டு போலீஸ் இலாக்காவிலும், கலால் இலாக்காவிலும், ஆஸ்பத்திரிகளிலும் கதர் உடையணிந்து கொள்ளுமாறு உத்திரவிட்டுள்ளார். பிரிட்டிஷ் இந்தியாவில் பிரமாதமாய்த் தோன்றும் ஒரு விஷயம் சுதேச சமஸ்தானங்களில் சுலபமாய் நிறைவேறிவிடுகின்றது!

தன் உடற்பிறப்பான ஸகோதரியை இழந்தவனுக்குக் காணும் பெண்களெல்லாம் அந்த ஸகோதரியின் உருவமாகவே தோன்றுவதால் அவன் மனதில் எவ்வித களங்கமும் பேத சிந்தையும் ஏற்படுவதில்லை.

உலக ரகசியம் என்னும்

பிரபஞ்ச உற்பத்தி

பண்டிதர்களும் பத்திராதிபர்களும் புகழ்ந்த அரிய பெரிய நூல்.

க. உலக காண்டம் ங. மக்கள் காண்டம்

உ. தேவ காண்டம் ச. சமய காண்டம்

ஆக நான்கு காண்டங்களுடன் அநேக அழகிய ஆப்டோன் படங்களடங்கியது.

560 பக்கங்கள், உயர்ந்த கிளேஸ் பதிப்பு, பொன் கிலிட்டு பைண்டு ரூபா 4.

இதில் பூமி முதல் பதினன்கு லோகங்களின் அமைப்புக்கள், அந்தந்த லோகங்களில் வாழும் ஜீவர்களின் தன்மைகள், நமது பூலோகத்தில் பல வித காண்டங்களின் பிரிவுகள், அந்தந்த காண்டங்களில் வாழும் ஆண் பெண் களின் குணகுண இரகசியங்கள், ஆண் பெண் ஒருவரை யொருவர் காதல் அடைதலும் கருத்தொருமித்தலும் ஆகிய இயற்கையின் ரகசியங்கள், கடி மணம் புரிந்து குறைவற்ற இன்பமடைதற்குரிய ஒழுக்க ரகசியங்கள், பெண் ணுக்கேற்ற ஆணும் ஆணுக்கேற்ற பெண்ணும் ஆராய்ந்தறியும் நுட்பங்கள், பெண்கள் ஆடவர்களின் சுபலட்சணங்கள், ருதுசாந்தி முகூர்த்தத்தின் தத் துவம், விவாகவிதி, விவாகப் பொருத்தங்கள், விவாக ஒழுங்குகளின் கருத் துக்கள், புணர்ச்சி விதி ஆகிய உண்மை ரகசியங்கள், பிறப்பு முதல் இறப்பு வரையும் அடைதற்கான இன்பமுறைகளும், இல்லற ஒழுக்க நெறிகளும் நன்மை தீமை விதி விலக்குகள் ஆராய்ந்தறிதலும் ஆகிய இரகசியங்கள், நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அடையத்தக்க வழிகள், ஆயுளை நீட்டிக்கும் பிராணயாம முதலிய யோக முறைகள், பிரம்மா, விஷ்ணு, சிவம், ஆகிய திரிமூர்த்திகள் முதல் சிறு தேவதைகள் வரை எல்லா தெய்வங்களி னுடைய மதத்துவேஷ மின்றிய உண்மை வரலாறுகள், சிவபெருமான் சக்தி விஷ்ணு முதலியவர்களின் அநந்த லீலா வைபவங்களும், தசாவதாரத் தத்துவங்களும், எல்லாக் கடவுளர்களுடைய படை கொடி விருது தேர் வாகனம் முதலிய சின்னங்களினுடையவும் உண்மைகள், வழிபடு முறை கள், இந்தியா, சீன, ஜப்பான், ஜர்மனி, ருஷியா, ஐரோப்பா முதலிய எல் லாத் தேச மக்களினுடைய மதபேதங்கள், அவரவர் வணங்கும் தெய்வம் வழிபாடு முதலிய இரகசியங்கள், சைவம், வைஷ்ணவம் இவற்றின் உட்பிரி வுகளும் அவற்றின் கொள்கைகளும் முதலிய உண்மைகள் ஆகிய எண் ணற்ற விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

மனிதர் அறிந்து கொள்ள வேண்டிய எல்லா உலக வியல்புகளும் இல்லற இன்பவாழ்க்கை ரகசியங்களும், ஆயுாரோக்கிய வழிகளும், சமய அறிவும், தெய்வ வழிபாடுகளும், இந்த ஒரே நூலில் காணலாம். மிகத் தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. பெண்கள் புருஷர்கள் எல் லாரும் படித்தறிய வேண்டிய சிறந்த நூல். விலை ரூ. 4, தபாற் கூலி அணு 8

எமது விலாசம் :— தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

" அமிர்த குணபோதினி பிரஸ் " 302, தங்கசாலைத் தெரு, சென்னை.